Issue: 1334

25 வது வெள்ளி விழா 2021

UTHAYAN உதயன்

Friday October 29, 2021

அனைவருக்கும் எமது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!







தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
THAMOR
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டி 2% இருந்து
தாமோர்
வர்த்தக துறையில்
20 வருட
முன்னோடிகள்
உடனடியாக உங்கள் கைகளில்
குறைந்த வட்டியுடன் அடவு பிடித்துக்கொள்ள
தாமோர் அடவு மாளிகையை நாடுங்கள்
107 Dundas St, East (Second Floor)
Mississauga, ON, L5A 1W7
905-272-1222
Online service: www.remitbee.com


STEELES
PODIATRY CLINIC
கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்
ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது
WE ACCEPT
• Extended Health Care
• Private - Work Insurance
• MVA - WSIB
• ODSP - Social Service
LIST OF SERVICES
• General & Diabetic Care
• Foot Pain Treatment
• Sports Medicine
• Surgical Procedures
• Custom-Made Orthotics
• Orthopaedic Shoes
• Compression Stockings
• Ankle - Knee - Back Braces
ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE
உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம்
தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும்,
சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி
வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு
மருத்துவப் பட்டதாரி (Podiatry).
5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)

DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

பஞ் சொக்கலிங்கம் BROKER
வீடு விற்க
416.786.2463
416.PUNCH ME
416punchme@gmail.com
RE/MAX ACE

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON. L6B 1A6

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25 வது வெள்ளி விழா 2021
UTHAYAN உதயன்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1334
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday October 29, 2021

# தமிழ்நாட்டில் வாழும் இலங்கை தமிழர் நலன்களைக் கவனிக்க அமைச்சர் தலைமையில் ஆலோசனைக் குழு அமைத்த தமிழக அரசு



இலங்கை தமிழர்களின் நலனுக்கான ஆலோசனைக் குழுவை அமைத்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. தமிழக சட்டப்பேரவையில் கடந்த ஆகஸ்ட் மாதம் 27ஆம் தேதி 110 விதியின் கீழ் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதன்படி, "முகாம்களில் வசிக்கக்கூடிய இலங்கை அகதிகளுக்கும், வெளிப்பதிவில் உள்ள அகதிகளுக்கும் உரிய உதவிகளை வழங்கிடவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், குடியுரிமை வழங்குதல் மற்றும் அவர்களில் இலங்கை திரும்பும் அகதிகளுக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தல் ஒரு ஆலோசனைக் குழு நிச்சயமாக விரைவில் அமைக்கப்படும்" என அறிவித்தார்.

அதன்படி, இலங்கை தமிழர்களின் நலனுக்கான ஆலோசனைக் குழுவை அமைத்து தமிழக அரசு நேற்று 28ம் திகதி வியாழக்கிழமை அரசாணை வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தலைமையிலான குழுவில், ஆலோசனைக் குழுவின் துணைத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்ட வல்லுநர் மனுராஜ் சண்முகசுந்தரம் உள்ளிட்ட 20 பேர் கொண்ட குழுவாக இது அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலோசனைக் குழு, முகாம்களில் உட்கட்டமைப்பு, அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், கல்வி - சமூகப் பாதுகாப்பு உதவிக்கு வகை செய்தல், குடியுரிமை, இலங்கைக்கு விரும்பிச் செல்லுதல் ஆகிய அம்சங்களை உள்ளடக்கிச் செயல்படும் என்று அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'அற்புதமான கலைஞர் வர்ண ராமேஸ்வரன் இல்லாத தமிழிசை இசை உலகின் எதிர்காலத்தை எண்ணி நாம் கவலைப்படுகினறோம்'



## மொன்றியால் அஞ்சலி நிகழ்வில் ஸ்ரீமதி தாரகா சற்குணபாலா கண்ணீருடன் தெரிவிப்பு



எங்கள் மத்தியில் இசையின் பல வடிவங்களையும் அறிந்த ஒருவராய் மற்றும் இசைக் கலைஞனாகவும் மிருதங்க வித்துவானாகவும் திகழ்ந்த அற்புதமான கலைஞர் வர்ண ராமேஸ்வரன் திடீரென எம்மை விட்டுப் பிரிந்து விட்டார். நாங்கள் எவருமே எதிர்பாக்காத ஒன்றாக அவரது இழப்பு சம்பவித்து விட்டது. தற்போது அவர் இல்லாத தமிழிசை இசை உலகத்தையும் அதன் எதிர்காலத்தையும் எண்ணி நாம் கவலைப்படுகினறோம். அதன் எதிர்காலம் எவ்வாறு இருக்கப்போகின்றது என்பதும் ஒரு கேள்விக் குறியே ஆகும்"

இவ்வாறு மொன்றியால் மாநகரில் இடம்பெற்ற மறைந்த கலைஞர் வர்ண ராமேஸ்வரன் அவர்களுக்கான அஞ்சலி நிகழ்வில் உரையாற்றிய மொன்றியால் 'நாட்டிய சுருங்கா' நடனப் பள்ளியின் அதிபரும் குருவுமாகிய ஸ்ரீமதி தாரகா சற்குணபாலா கண்ணீருடன் தெரிவித்தார்.

*(தொடர்ச்சி உள்ளே 27ம் பக்கத்தில்)*

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd. Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

வாகன மற்றும் வீடுகளுக்கான காப்புறுதித் தேவைகளுக்கு என்னை அழையுங்கள்
Home Auto Commercial & Liability
We do all types of insurance and work with over 20 different companies.
High risk, Uber, Landlord, etc...
PLEASE CALL:
(647) 338-6916
(416) 520-6916
EMAIL: INSURANCEHELPER@OUTLOOK.COM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM
Sales Representative
416-999-7482
RE/MAX

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX




## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### பெண்களுக்கான வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் பெண்களுக்கான வேலை வாய்ப்புக்கள் உள்ளன. அனுபவம் தேவையில்லை.

தொடர்புகளுக்கு

**ஜெயா:**
**(647) 669-2739**

### HELP WANTED

411 College St, Toronto ON ல் அமைந்துள்ள Toby's Pub and Eatery என்னும் உணவகத்திற்கு Kitchen helper தேவை.

Day time/night time
Full time/part time.
Please call after 12 pm.

**416-879-3768**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial,
Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### CAREGIVER WANTED

Live-in caregiver needed to care for a male (91 yrs old) and female (78 yrs old). Male caregiver is prefered.
We are looking for someone who would live with them and be part of the family. We are looking for a kind caring and trustworthy.
Salary will be discussed with the right candidate.
Main requirement is a passion for the job and helping others
Language requirement :Tamil and English

**Contact: nmaithely@gmail.com**

MANIPAY HINDU COLLEGE - MANIPAY LADIES COLLEGE
OLD STUDENTS ASSOCIATION -CANADA (ESTD. 1991)
மானிப்பாய் இந்துக் கல்லூரி - மானிப்பாய் மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா (அமைப்பு 1991)
91 Lamoreaux Dr. E # 100
Toronto ON M1W 2J8

Date: Oct 17, 2021

## காணொலி மூலம் கூட்டப்படும் ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2021

**மானிப்பாய் இந்துக் கல்லூரி - மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா**

சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர் வரும் November 07, 2021 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 05:00 மணிக்கு மீண்டும் ஒரு இணைய வழி தொலைமுறைக் கூட்டமாக நடைபெறவுள்ளது. இப்பொதுக்கூட்டத்திற்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவ மாணவிகள் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

காணொலி மூலம் கூட்டப்படும் கூட்டங்கள் உங்களில் பலருக்கும் தற்போது மிகவும் பரிச்சயமானதொன்றாக இருக்கும் என்றே நம்புகிறோம். இவ்வாண்டும் நாம் எமது பொதுக்கூட்டத்தை அவ்வாறே நடத்தலாமென்று முடிவு செய்துள்ளோம். அதன் பிரகாரம், பங்குபற்றுவோர், தயவு செய்து முன்கூட்டியே உங்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். பதிவு செய்தவர்க்கு இணையத்தள இணைப்பொன்றை பிற்பாடு அனுப்பிவைப்போம்.

இவ்வாண்டுப் பொதுக்கூட்டம் அதன் ஊடகம் மாறினாலும் வழமைபோல் சங்கத்தின் எதிர் கால நோக்கங்கள், சங்க மேம்பாடுகள் பற்றி கலந்து பேசி அங்கத்தவர்களின் கருத்தை பெற இருப்பதால் அனைத்து பழைய மாணவ மாணவிகளையும் இக்கூட்டத்திற்கு சமூகமளித்து இதை முன்னெடுத்து செல்ல உதவுமாறு சங்க நிர்வாகக்குழு அன்புடன் கேட்டுக் கொள்கிறது

இதைத்தவிர சங்கத்தின் யாப்பில் ஏதாவது மாற்றமோ திருத்தமோ ஏற்படுத்த விரும்பினால் அதை சங்க நிர்வாகத்துடன் முன்கூட்டியே தொடர்பு கொண்டு உத்தேசித்த மாற்றங்களை பொதுக்கூட்டத்தின் அங்கீகரிப்புக்கு சமர்பிக்கவும். அத்துடன் புதிய அங்கத்தவர்களை அழைத்து வந்தும், சங்க நடவடிக்கைகளில் ஒன்றிணைந்தும், சங்கத்தின் செயற்பாடுகளுக்கு உங்களுடைய ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை நல்குமாறும் வேண்டுகின்றோம்

தொடர்புகட்கு:

| | | | |
|---|---|---|---|
| சி. விஜயகுமார் | சி. கணேசலிங்கம் | ச.வசந்தறாஜன் | க.கனகராஜா |
| (647)293-9924 | (416)499-6248 | (416)289-9008 | (416)858-6316 |

நன்றி

சி. விஜயகுமார்

தலைவர், மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கனடா)

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# ஒன்ராறியோ மாகாண அரசின் உறுப்பினரைச் சந்தித்த நா.க.த. அரசின் அமைச்சர் றோய் விக்னராஜா



கடந்த வெள்ளிக்கிழமை 22ஆம் திகதி ஒன்ராரியோ பாராளுமன்ற உறுப்பினரும் இன அழிப்பிற்கு எதிரான பிரதான செயற்பாட்டாளருமான அரீஸ் பார்பிக்கியான் அவர்களை அவரது அலுவலகத்தில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் இனஅழிப்பு மற்றும் பாரிய அட்டூழிய குற்றத் தடுப்புக்கான அமைச்சர் றோய் விக்னராஜா அவர்கள் அதிகாரபூர்வமாகச் சந்தித்தார்.

நா.க.த.அ அமைச்சர், ஈழத் தமிழர் பற்றி, ஒன்றாரியோ அரசவை உறுப்பினருக்கு விளக்குகையில், தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசத்தினர், இலங்கைத் தீவு ஒரு தமிழ், இரண்டு சிங்களம் என மூன்று தனித்தனி இராட்சியங்களால் ஆனது. 1833ல் பிரித்தானிய ஆட்சியாளர்கள், நிர்வாக சௌகரியத்திற்காக இம் முன்று இராட்சியங்களையும் ஒருங்கிணைத்ததன் மூலம் தற்போதைய குழப்ப நிலைக்கு வழி வகுத்தனர் என்று தெரிவித்தார்.

தமிழீழ மக்கள் இனப்படுகொலைக்கு ஆளாகியுள்ளனர், மேலும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பாதிக்கபட்டவர்களது நீதிக்காக வாதிடுவதுடன் தமிழ் தேசத்தின் இறையாண்மையை மீண்டும் நிலைநாட்டுவதற்கும் பாடுபடுகிறது. தமிழர்கள், உள்ளார்ந்த சுயநிர்ணய உரிமையுடைய ஒரு தனித்துவம் வாய்ந்த தேசம், எனறும், நா.க.த.அ அமைச்சர் மீண்டும் வலியுறுத்தினார்.

ஒரு மணிநேரம் நீடித்த இச்சந்திப்பின் பொழுது பேசப்பட்ட பலவிடயங்களில் ஒன்றாக, நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், தமிழருக்கு நடந்த இன அழிப்பு சம்பந்தமாகக் கனடாவின் மூன்று நிலை அரசுகள் ஊடாகவும் இன அழிப்பிற்கு எதிராக குரல் கொடுக்கும் பல்லின மக்களின் நிறுவனங்கள் அமைப்புகள் போன்றவற்றூடாகவும் தமிழர் இன அழிப்பிற்கான நீதியை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்பது பற்றி முக்கியமாக ஆராயப்பட்டது.

தமிழர் மீது நடத்தப்பட்டுள்ள இன அழிப்பு சம்பந்தமாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கமும் தமிழ் மக்களும் எவ்வாறு சர்வதேச அரசாங்கங்களையும், மனித உரிமைகள் சார் அமைப்புக்களையும் அணுகி தமக்கான நீதியைப் பெறுவதற்கான வழிவகைகளை எவ்வகையில் ஏற்படுத்திக்கொள்ளலாம் என்பது பற்றிய அறிவுரைகளை ஒன்ராரியோ பாராளுமன்ற உறப்பினர் அரீஸ் பார்பிக்கியான் அவர்கள் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அமைச்சருக்கு வழங்கினார்.

மேலும் பார்பிக்கியான் அவர்கள், "நான் பதவியில் இருக்கும் போது மட்டுமல்ல இல்லாவிடினும் கூட எனது கொள்கைப்பற்றுறுதியால் இன அழிப்பிற்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடுவேன்." "ஆகவே, அரசியலுக்கு அப்பால்பட்டு இவ்விடயத்தில் எனது அனுபவப்பகிர்வுகளாக அறிவுரைகளையும் ஆதரவினையும் வழங்குவேன்." என்று உறுதிபடக் கூறினார். மேலும் 2019 ஆம் ஆண்டு, தான், தமிழர் இன அழிப்பு உட்பட ஏழு நாடுகளில் இடம் பெற்ற இன அழிப்புகள் சம்பந்தமாக ஒன்ராரியோ பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த தனிநபர் பிரேரணை இலக்கம் 97ன (டீடைட 97) பிரதி ஒன்றினையும், 2021 (இவ்வருடம்) மே மாதம் ஆறாந் திகதி விஜய் தணிகாசலம் அவர்களால் கொண்டுவரப்பட்ட தனிநபர் பிரேரணை இலக்கம் 104 (டீடைட 104) இற்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் தான் ஆற்றிய உரை (ஹன்சாட் பதிவு) ஒன்றினையும் வழங்கினார். அத்தோடு இதே உரையின் தமிழாக்கத்தை உள்ளடக்கிய அவருடைய (யுபுஜஊேழுருசுவு) தொகுதி மக்களுக்கான கோடைகாலச் செய்தி மடல் ஒன்றினையும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அமைச்சரிடமும் கையளித்தார்.

இன அழிப்பு சம்பந்தமான எவ்வுதவிகள் தேவையெனிலும் தயங்காது தன்னை நாடுமாறு கூறிய அவர் ஒரு இன அழிப்பின் போது இனப்படுகொலைக்கு உள்ளாகிய மக்களைவிட அந்த இனத்தில் எஞ்சி இருக்கின்ற மக்களுக்கு இன அழிப்பு மீள்நிகழாமையை உறுதிப்படுத்துவது என்பதே மிக முக்கியம் என்று கூறினார்.

உதயன் கதிரோட்டம்

# கோவிட் 19 தொற்று பரவலினால் முழு உலகமுமே பாதிக்கப்பட்டுள்ளது

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக கோவிட் 19 தொற்று முழு மனித சமூகத்திற்கும் பெரும் சவாலாக அமைந்துள்ளதால் மூன்றாம் மண்டல நாடுகள், வளர்முக நாடுகள் என்றில்லாமல் அபிவிருத்தி அடைந்த நாடுகளும் கூட பல்வேறு விதமான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளன. அவற்றில் நிதி மற்றும் பொருளாதார ரீதியிலான நெருக்கடிகள் மிக முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன.

இத்தொற்று உலகிற்கு புதிய ஒன்றாகக் தோற்றம் பெற்று இருப்பதே இந்நெருக்கடிக்கு பிரதான காரணமாகும். இத்தொற்று வேகமாக தொற்றிப் பரவக் கூடியதாக இருந்தும், இன்றைய நவீன டிஜிட்டல் யுகத்தில் கூட அதனை முற்றாக கட்டுப்படுத்தவோ தொற்றை ஒழித்துக் கட்டவோ முடியாதிருக்கின்றது. இதன் விளைவாக இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்தவென தனிமைப்படுத்தல்களும் முடக்கங்களும்தான் முக்கிய வழிமுறைகளாகக் கையாளப்படுகின்றன.

அதன் காரணத்தினால் கைத்தொழில் துறையில் உற்பத்தித் துறை, சேவைகள் துறை உள்ளிட்ட எல்லாத் துறைகளும் தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாகியுள்ளன. உலக பொருளாதாரமே பெரும் தாக்கங்களை எதிர்கொண்டிருக்கின்றது.

மேற்குலக நாடுகளான அமெரிக்கா கனடா ஜேர்மனி போன்ற நாடுகளிலும் பொருளாதாரச் சிக்கல்கள் பெருமளவில் தோன்றி அதிக பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று அறியப்படுகின்றது.

இவ்வாறான சூழலில் டொலரின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு இங்கு இறக்குமதி செய்யப்படும் சில பொருட்களின் விலைகளையும் அதிகரிக்கச் செய்துள்ளது. ஆனால் இவ்விலையேற்றம் குறித்து பல்வேறு விதமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இவ்விலையேற்றம் கொவிட் 19 தொற்றின் தாக்கமேயன்றி வேறில்லை. இத்தொற்று தோற்றுவித்திருக்கும் பொருளாதார மற்றும் நிதி நெருக்கடி இலங்கைக்கு மாத்திரமுரியதல்ல. இவ்வாறான நெருக்கடிக்கு எல்லா நாடுகளுமே முகம் கொடுத்துள்ளன. பிரித்தானியா கூட பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

இந்தவகையில். இலங்கையிலும் தற்போது ஏற்பட்டுள்ள நிலையை இத்தொற்றின் பாதிப்புக்கு உள்ளான ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இலங்கையின் நிலைமை திருப்திகரமாகக் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ள இலங்கை அமைச்சரவை இணைப் பேச்சாளரும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சருமான டாக்டர் பத்திரன, "கொவிட் 19 தொற்றுக்கு உள்ளான எம்மை விடவும் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளை எடுத்துப் பார்த்தால் பொருட்களின் விலை அதிகரிப்பை எம்மால் இந்தளவாவது கட்டுப்படுத்தக் கிடைத்துள்ளமை திருப்தியளிப்பதாக உள்ளது" என்றும் தற்போதைய சூழலில் சந்தையில் தேவைற்ற முறையில் தலையிட அரசாங்கம் விரும்பவில்லை என்றும் பொருட்களின் விலைகள் விரைவில் சுமுக நிலைக்கு திரும்பும் என்றும் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும் இலங்கை அமைச்சர் ஓரவர் இவ்வாறு தெரிவித்தாலும். இலங்கையில் நடுத்தர மற்றும் அடிமட்ட ஏழை மக்களின் நிலை வருந்தத் தக்க நிலையில் அவர்கள் உணவிற்காகவும் உறைவிடத்திற்காகவும் போராடுவது வெளிப்படையான ஒன்றாகவே உள்ளதும் மறைக்கப்படும் ஒன்றாகவே உள்ளுத என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

# சம்பந்தனின் திருகோணமலை தமிழர்களின் அடையாளமே இல்லாமல் போகின்றது என்கிறார் 'பிள்ளையான்' சந்திரகாந்தன்!



பெயரளவிலே தமிழர்களின் தலைவன் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற சம்பந்தன் அவர்களின் திருகோணமலை மாவட்டம் தமிழர்களின் அடையாளமே இல்லாமல் போகின்ற துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றது என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான "பிள்ளையான்" சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியுதவியில் பொது அமைப்புகளுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று மட்டக்களப்பில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த சந்திரகாந்தன் எம்.பி.,

இந்த மாவட்டம் கிராமிய பொருளாதாரம், விவசாயத்தில் தங்கியுள்ள மாவட்டம். இந்த நாட்டின் உணவுத்தேவைக்கான பெருமளவான அரிசியை வழங்கும் மாவட்டம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கம் கொள்கை ரீதியான ஒரு முடிவை எடுத்தால் அந்த முடிவினால் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு என்ன நன்மை, அந்த முடிவினால் பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதையே நாம் பார்க்க வேண்டும். யூரியா பாவனையால் நீரிழிவு நோய் ஏற்படுகின்றது, மலட்டுத்தன்மை ஏற்படுகின்றது. மருத்துவ சங்கத்தின் ஆய்வின்படி பாடசாலைச் சிறுவர்களுக்கு 20வீதமளவில் சிறுநீரகம் செயலிழப்பதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ளது.

இன்னும் இருபது வருடங்களில் சிறுநீரகங்கள் செயலிழந்துவிடும். சேதனப் பசளை திட்டத்தினால் சில பிரச்சினைகள் உள்ளன. அதனை நாம் வெல்வோம். வயலுக்குள் குலைகளை வெட்டி மாட்டெரு,ஆட்டெரு என்பவற்றை போட்டு கடின உழைப்பை செய்தால் நான்கைந்து வருடங்களுக்கு நல்ல விளைச்சலை பெற முடியும். அதனால் நோய்களும் ஏற்படாது. சுகாதாரச் செலவுகள் குறைவடையும். ஆயுளும் அதிகரிக்கும். அதனை விடுத்து அசேதனப்பசளைகளால் நாற்பது வயதிலேயே நீரிழிவு, சிறுநீரகம் செயலிழப்பு ஏற்படுகின்றது. நூறு, இருநூறு ஆண்டுகளில் இது பெரும் சமூக அழிவாக மாறும்.

இப்படியான சூழலில் தமிழ்த் தேசியம் பேசுபவர்களும் புலம் பெயர்ந்தவர்களும் இயற்கைக் கழிவுகளையும் ஆட்டெரு, மாட்டெரு, இலைகுலை கழிவுகளை பயன்படுத்தி சேதனப் பசளையை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை ஆரம்பித்து அதன் மூலம் வேலைவாய்ப்புகளையும் வழங்கி முழு இலங்கைக்கும் சேதனப் பசளையை விநியோகிக்க முடியும். அதனை விடுத்து இந்த போலித் தேசியவாதிகள் விவசாயிகளை கொல்லாதே, குழிதோண்டி புதைக்காதே என கைகளில் பதாகைகளுடன் கோஷமிடுகின்றனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சட்டத்தை நாடு முழுவதும் நடை முறைப்படுத்த வேண்டும் என்பதே ஜனாதிபதியின் குறிக்கோள்

## யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், நீதியரசருமான க.வி.விக்னேஸ்வரன்

குற்றஞ்சாட்டப்பட்டு குற்றவாளியாகக் கணிக்கப்பட்டு சிறையில் இருந்த ஞானசார தேரரை தற்போது தமது ஜனாதிபதி செயலணிக்கு தலைவராக்கியமை எனக்கு வியப்பைத் தரவில்லை.அவருடைய அந்த செயலணியில் அங்கம் பெறும் அங்கத்தவர்கள் பெரும்பான்மை சிங்களவர்களும் ஒரு சில முஸ்லீம்களும் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், நீதியரசருமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஞானசார தேரரின் தலைமைத்துவத்தின் கீழ் ஒரு ஜனாதிபதி செயலணியை உருவாக்கியுள்ளார். அவருடைய நோக்கு ஒரு நாடு ஒரு சட்டம் என்பது பற்றி தனது கருத்தை தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி பல்வேறு குற்றவாளிகளை இதுவரை தனது அதிகாரங்களைப் பாவித்து சிறைகளில் இருந்து வெளிக்கொண்டு வந்து மன்னிப்பு அளித்துள்ளார்.

உதாரணத்திற்கு இரண்டு நீதிமன்றங்களால் கொலைக் குற்றவாளியாக காணப்பட்ட இரத்நாயக்க என்ற இராணுவ வீரர் அவர்களுள் ஒருவர், கொலை குற்றவாளியாக காணப்பட்ட துமிந்த சில்வா மற்றொருவர்.

அண்மையில் கரணகொட என்ற முன்னாள் கடற்படை தளபதிக்கு எதிராக இருந்த குற்றச்சாட்டுக்களை கைவாங்கி அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். போர்க்காலத்தின் போது பல குற்றங்களை புரிந்த இராணுவ அதிகாரிகள் ஓய்வு பெற்ற பின் அவர்களைக் கொண்டு வந்து அவர்களுக்கு அரசாங்க உயர் பதவிகள் கொடுத்துள்ளார்.

ஆகவே குற்றஞ்சாட்டப்பட்டு குற்றவாளியாகக் கணிக்கப்பட்டு சிறையில் இருந்த ஞானசார தேரரை தற்போது தமது ஜனாதிபதி செயலணிக்கு தலைவராக்கியமை எனக்கு வியப்பைத் தரவில்லை. அவருடைய அந்த செயலணியில் அங்கம் பெறும் அங்கத்தவர்கள் பெரும்பான்மை சிங்களவர்களும் ஒரு சில முஸ்லிம்களும் ஆவர். வட மாகாணத் தமிழ் மக்களுக்கு என்று தேசவழமை என்ற ஒரு சட்டம் டச்சுக் காலத்தில் இருந்து சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது.

"ஒரு நாடு ஒரு சட்டம்" என்று கூறும் பொழுது தற்போது வலுவில் இருக்கும் றோம டச்சுச் சட்டம், ஆங்கிலச் சட்டம், கண்டியச் சட்டம், தேசவழமைச் சட்டம், முஸ்லீம் சட்டம் ஆகியவற்றைப் புறக்கணித்து இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடாகக் கணித்து ஒற்றைச் சட்டத்தைக் கொண்டு வரவே இந்த செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.

"ஒரு நாடு ஒரு சட்டம்" என்று கூறும் பொழுது இந்த நாட்டில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடகிழக்கு மாகாணங்களை சிங்கள மாகாணங்களுடன் சேர்த்து அவை சிங்கள பௌத்தத்திற்குள் அடங்கியவை என்று எடுத்துக் காட்டவே இந்த இன ரீதியான செயலணி உருவாக்கப்பட்டுள்ளது என்று நான் நம்புகின்றேன்.

கண்டியத் திருமணங்களில் ஃபின்ன, ஃதீக என்ற இரு விதமான திருமணங்கள் இருக்கின்றன. ஒன்றில் கணவனுடன் போய் மனைவி வாழ்வது மற்றையது மனைவியின் முல்கெதரவில் சென்று கணவன் வாழ்வது. இவையெல்லாம் பாரம்பரியமாக கண்டிய மக்கள் ஏற்றுக்கொண்ட திருமண முறைகள். இவற்றையெல்லாம் ருகுணரட்டவில் (தென்மாகாணம்) இருந்து வரும் கோட்டாபய மாற்றியமைக்க இருக்கின்றாரா? கண்டிய மக்களின் தலைவர்களுடன் கண்டிய சட்டத்தை நீக்கப் போவதாகக் கூறி அவர்களின் சம்மதத்ததை ஏற்றுக் கொண்டுள்ளாரா? முஸ்லீம் மக்களுடன் இதுபற்றிப் பேசி முஸ்லீம் சட்டத்தைக் கைவிட முஸ்லீம் மக்கள் ஆயத்தமா என்று அவர்களுடன் கலந்துரையாடியிருக்கின்றாரா? தமிழ்ப் பேசும் மக்கள் என்ற முறையில் வடகிழக்கு மாகாணத்தில் இருக்கும் அவர்களுக்குரிய சட்டத்தை மாற்றுவதோ தொடர்ந்து வைத்திருப்பதோ என்பது அவர்களின் பொறுப்பு. அது மத்திய அரசாங்கத்தின் பொறுப்பல்ல.



வட கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்கள் தான் பெரும்பான்மையாக இருக்கின்றார்கள். 1833ல் வெள்ளையர்கள் இலங்கை முழுவதையும் நிர்வாக ரீதியாக ஒன்றிணைக்கும் வரையில் வட கிழக்கு தமிழ் அரசர்களாலும் தமிழ் சிற்றரசர்களாலும் ஆளப்பட்டு வந்தன.

தமிழ் மொழியே அவர்களின் மொழியாகவும் இருந்தது. கண்டிய மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனும் இன்னும் சில கண்டியத் தலைவர்ளும் பிரித்தானியர்களுடன் 1815ல் செய்து கொண்ட உடன்படிக்கையில் தமிழிலேயே கையெழுத்து இட்டார்கள்.

இவ்வாறு தமிழுக்கும் தமிழருக்கும் என ஒரு அடையாளம் இலங்கையில் பண்டைக்காலம் தொட்டு இருந்து வருகையில் ஒரு நாடு ஒரு சட்டம் என்பதின் அர்த்தம் என்ன? இலங்கை ஒரு நாடு அல்ல. அது சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், மலையக மக்கள் மேலும் பல சிறிய இன மக்கள் வாழும் நாடு. அதுவும் தமிழ் பேசும் முஸ்லீம் மக்களும் வடகிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வந்துள்ளார்கள்.

அரேபியாவில் இருந்தும் தென்னிந்தியாவில் இருந்தும் வந்து கிழக்கு மாகாணத்தில் குடியேறிய பின் தமிழ் மொழியையே அவர்கள் தம் தாய் மொழியாக ஏற்றுக் கொண்டார்கள்.

இவ்வாறு இருக்கையில் இலங்கையானது ஒரு நாடாக இல்லாது பல நாடுகளைக் கொண்டிருக்கும் போது ஜனாதிபதி எவ்வாறு ஒரு நாடு பற்றி அறிவிக்கலாம்? மேலும் ஐந்து சட்டங்கள் நடைமுறையில் இருக்கும் போது இந் நாட்டில் எவ்வாறு ஒரு சட்டத்தை அமுல்படுத்த எண்ணலாம்? அத்துடன் இவை யாவற்றையும் சிறையில் இருந்து வந்த ஒரு குற்றவாளியைத் தலைவராகக் கொண்ட ஒரு செயலணியைக் கொண்டு எவ்வாறு நடைமுறைப்படுத்த இருக்கின்றார்? தேரருக்கு எந்தளவுக்கு சரித்திரம் தெரியும், சட்டம் தெரியும்? ஜனாதிபதியின் போக்கு ஒன்றையே வலியுறுத்துகின்றது.

இந்த நாடு சிங்கள பௌத்த நாடு என்றும், அதன் அடிப்படையில் இந்த நாட்டை ஒரு நாடாக அடையாளப்படுத்த வேண்டும் என்பதே அவரின் குறிக்கோள்.

சிங்கள பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சட்டத்தை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே இந்த செயலணியின் குறிக்கோளாகும். தமிழர்களைப் பொறுத்த வரையிலே அவர்களுக்கு எதிராக 1948ம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இனப்படுகொலையின் இன்னுமொரு பரிமாணமே இந்தச் செயலணி.

சகல இன மக்களும் இவ்வாறான தான்தோன்றித்தனமான சிங்கள பௌத்த வெறி கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்**

# இலங்கையில் பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதால், மீண்டும் கொரோனா அலை பரவும் அபாயம் – வைத்திய சங்கம்

பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதால், இலங்கையில் மீண்டும் கொரோனா அலை பரவும் அபாயம் இருப்பதாக இலங்கை வைத்திய சங்கம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அந்த சங்கம் இதனை சுட்டிக்காட்டியுள்ளது.

கட்டுப்பாடுகள் மற்றும் சட்டங்கள் செயல்படுத்தப்படும் சூழலைக் கருத்தில் கொண்டு, மற்றொரு கொவிட் அலையைத் தடுக்க திட்டவட்டமான நடவடிக்கை எடுப்பது முன்னெப்போதையும் விட முக்கியமானது என அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது. புதிய கொவிட் அலையொன்று மீண்டும் ஏற்படாமல் தடுப்பதற்கு இலங்கை மருத்துவ சங்கத்தினால் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் 4 பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகளை சிறந்த மேற்பார்வையின் கீழ் கடுமையாக அமலாக்குதல், ஃபைசர் தடுப்பூசியின் மூன்றாவது டோஸை முன்னுரிமை குழுக்களுக்கு வழங்குதல் உள்ளிட்ட பரிந்துரைகள் அவற்றுள் அடங்குகின்றன.

மேலும், அதிக தொற்றுநோய் பரவல் மற்றும் நிகழ்வுகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் பரிசோதனைகளை செய்து தொற்றாளர்கள் குறித்து தொடர்ந்தும் கவனம் செலுத்துதல் குறித்த பரிந்துரைகளில் அடங்கும்.

இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கு மிகவும் வெற்றிகரமாக தடுப்பூசி போடப்பட்டு வருவதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது. இதுவரை 340,000 இற்கும் அதிகமான பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ரஞ்சித் பட்டுவன்துடாவ தெரிவித்துள்ளார்.



# மன்னாரில் "மரம் நடுவோம் எம் சந்ததியை காப்போம்" தொனிப்பொருளில் மர நடுகை ஆரம்பம்

"மரம் நடுவோம் எம் சந்ததியை காப்போம்" எனும் தொனிப்பொருளில் மர நடுகை ஆரம்ப நிகழ்வு மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலையடி புதுக்குளம் ம.வி பாடசாலையில் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் இடம் பெற்றது.

வனவள திணைக்களத்தின் ஏற்பாட்டில், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் குறித்த மரம் நடுகை இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் கே.அரவிந்தராஜ், மன்னார் மாவட்ட நீர் பாசன பணிப்பாளர் என்.ஜோகராஜா, மடு வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ்.முகுந்தன்,மன்னார் மாவட்ட வனவள திணைக்கள அதிகாரி ஆகியோர் கலந்து





கொண்டு மர நடுகையினை மேற்கொண்டனர். இவர்களுக்கு பிரதேச மக்களால் கௌரவிப்பு இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையின் வட மாகாண ஆளுநராக கடமையாற்றிய பி.எஸ். எம்.சார்ள்ஸ் அவர்களுக்கு புதிய பதவி

இலங்கையின் வட மாகாண ஆளுநராக கடமையாற்றியவராக கடமையாற்றியவரும் சுகா-தார மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளராகவும் சுங்கப் பணிப்பாளர் நாயகமாகவும் கடமையாற்றியுள்ளவருமான பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்களுக்கு புதிய பதவி ஒன்று வழங்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

சில நாட்களுக்கு முன்னர் வெளியிடப்பெற்ற இலங்கை அரசு அறிக்கையின்படி இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக சுந்தரம் அருமைநாயகம் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராக பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆகியோரை நியமிக்க இலங்கையின் நாடாளுமன்ற பேரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

அரச சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக சுந்தரம் அருமைநாயகத்தை நியமிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்வைத்த யோசனைக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கடந்த 25ஆம் திகதி கூடிய நாடாளுமன்ற பேரவையில் இணக்கம் காணப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் தம்மிக்க தசநாயக்க தெரிவித்துள்ளார்.



அதோடு தேர்தல்கள் ஆணைக்குழுவில் இருந்து ஜீவன் தியாகராஜா ராஜினாமா செய்ததையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு பி.எஸ்.எம்.சார்ள்ஸை நியமிக்குமாறு ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு நாடாளுமன்ற பேரவையும் இணக்கம் தெரிவித்துள்ள2தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி பாதுகாப்புச் செயலாளர் உட்பட பலருக்கு எதிராக சர்வதேச நீதி மன்றத்தில் வழக்கு



இலங்கையின் தற்போதைய ஜனாதிபதியும் முன்னாள் பாதுகாப்புச் செயலருமான கோட்டாபய ராஜபக்ச, இலங்கையின் தற்போதைய பாதுகாப்புச் செயலரும் இலங்கை இராணுவத்தின் (SLA) முன்னாள் இராணுவ அதிகாரியுமான கமல் குணரட்ண, இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதியும் இலங்கை இராணுவத்தின் பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரியுமான ஜகத் ஜெயசூரியா, இலங்கை பொலிஸின் குற்ற விசாரணைப் பிரிவு (CID) மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவுகளின் (TID) பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிசிர மென்டிஸ் உட்பட 2002ம் ஆண்டு முதல் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் (SLP) பொலிஸ்மா அதிபர்களாகப் பதவி வகித்து வந்தவர்கள் மற்றும் 2002ம் ஆண்டு முதல் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் விசேட அதிரடிப்படைப்பிரிவின் (STF) கட்டளை அதிகாரிகளாக செயற்பட்டவர்கள் போன்றோர்களின் பெயர்களும் அந்த மனுவில் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை இலங்கையிலும் பிரித்தானியாவிலும் வாழும் ஏராளமான பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆட்கடத்தல்கள், சட்டவிரோதமான தடுத்துவைப்புக்கள், சித்திரவதைகள் ஆகிய செயற்பாடுகள் ஊடாக வலுக்கட்டாயமாக நாடுகடத்தல், தாயகத்திற்கு திரும்பிச் செல்வதற்கான உரிமையினை மறுதலித்தல், துன்புறுத்துதல் ஆகிய மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் பொறுப்பாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என அறியப்படுகின்றது.

குற்றம் சுமத்தப்பட்டவர்கள் இலங்கையில் இடம்பெற்ற மிகமோசமான "வெள்ளை வான் கடத்தல்கள்" உட்பட்ட மனித குலத்திற்கு எதிரான குற்றங்களைப் புரிவதில் ஈடுபட்டுள்ளதற்கான ஆதாரங்களும் வழங்கப்பட்டுள்ளதாக, இந்த வழக்கினைத் தாக்கல் செய்த புலம்பெயர் அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.



பாதிக்கப்பட்ட 200 இலங்கைத் தமிழர்கள் சார்பாக Global Rights Compliance LLP (GRC) என்ற சட்டவல்லுனர் அமைப்பினால் ரோமச் சட்டத்தின் 15ஆவது சரத்தின் (Article 7 of the Rome Statute) கீழ் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்கு நடத்துபவருக்கு இத்தொடர்பாடல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த வழக்கிற்காக பலர் தமிழர்கள் ஒன்று கூடி செயற்பட்டு வருவதாகவும் நிதி சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

ஆட்கடத்தல்கள், சட்டவிரோதமான தடுத்துவைப்புக்கள், சித்திரவதைகள் போன்றனவற்றைப் புரிந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உட்பட பல இராணுவ உயரதிகாரிகள் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Global Rights Compliance LLP (GRC) என்ற சட்டவல்லுனர் அமைப்பு இந்த வழக்கைத் தாக்கல் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இலங்கை அரசாங்கத்தின் இந்த முக்கியஸ்தர்களை புலனாய்வு செய்து, உரிய நேரத்தில் கைதுசெய்து, குற்றவிசாரணை செய்யவேண்டும் என்றும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. இதற்காக பல சட்ட வல்லுனர்கள் உழைத்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது

# கல்வித்துறையும் இராணுவத்தின் கைகளிலா?



\- பார்த்தீபன்

ஸ்ரீலங்காவை ஆசியாவின் ஆச்சரியம் என கடந்த காலத்தில் மகிந்த ராஜபக்ச அரச தலைவராக இருந்தபோது சொல்லி வந்தார். தற்போது அவரது தம்பி கோத்தபாய ராஜபக்சவின் ஆட்சியில் ஸ்ரீலங்கா உலகின் ஆச்சரியமாக மாறி வருகின்றது. ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான இனவழிப்புப் போரில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக கடமையாற்றி, அறிவிக்கப்படாத இராணுவத் தளபதியாக செயற்பட்ட கோத்தபாய ராஜபக்ச நாட்டை முழுமையாக இராணுவமயப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார். இதன் அடுத்த ஆபத்தான கட்டமாக கல்வித்துறையையும் கொலை செய்கின்ற அளவுக்கு இலங்கையின் நிலமை வந்துவிட்டது.

ஆசிரியர்கள் சம்பள முரண்பாட்டை தீர்க்கக் கோரி கடந்த பல மாதங்களாக தமது பணியைப் புறக்கணித்து போராடி வருகிறார்கள். தற்போதைய ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களும் முன்னைய ஆட்சியாளர்களும் ஸ்ரீலங்காவின் ஆசிரியர் பணித்துறையில் உள்ள சம்பள முரண்பாடு தொடர்பில் ஏற்றுக் கொண்டுள்ளனர். உலக நாடுகளில் ஆசிரியத்துறை என்பது வரையறுக்கப்பட்ட தனித்துறையாக காணப்படுகின்றது. பதவி உயர்வு, சம்பன வழங்கல், சம்பள உயர்வு என்பன தனித்துவமான முறையில் காணப்படுகின்றது. அத்துடன் சமூகத்தின் அனைத்துக் கட்டமைப்பு சார் ஆளுமைகளையும் ஆசிரியர்கள் உருவாக்குகிறார்கள் என்பதால் அவர்களுக்கு பணிக்கு மதிப்பளித்து உயரிய ஊதியம் வழங்கப்படுகிறது.

ஆசிரியர்களுக்கு உலக நாடுகளில் வழங்கப்படும் சம்பளத்துடன் ஒப்பிடுகின்ற போது இலங்கை ஆசிரியர்கள் உலக நாடுகளின் ஆசிரியர்களின் ஒரு நாள் சம்பளத்தை மாதம் ஒன்றுக்கு பெறுகின்றனர். அதேவேளை இலங்கையின் எழுத்தறிவு விகிதம், இலங்கையின் கல்வி அறிவு வீதம் என்பன உயர்வான நிலையிலேயே பேணப்படுகிறது. அத்துடன் இலங்கை ஆசிரியர்களின் கற்பித்தல் ஆளுமையும் உலக அளவில் ஒப்பிடுகின்ற போது சிறப்பான நிலையில் உள்ளமையை பல்வேறு ஆய்வாளர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையில் ஆசிரியர்களின் மகத்துவ தன்மை என்பது போற்றத் தகு நிலையிலும் உணர்ச்சி பூர்வமான மதிப்பிலும் இருக்கிறது. எந்த நிலையில் உயர்ந்து வருகின்ற மனிதர்களும் தமது ஆசிரியர்களை மறக்க முடியாத கருவியாக ஆயுதமாக ஏணியாக நினைவு கொள்ளுகின்றனர். இத்தகைய நிலமைகளுக்கு மாறாகவே ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு இருக்கிறது. நாள் ஒன்றிற்கு ஆயிரம் ரூபா அளவில் ஆசிரியர்கள் சம்பளம் பெறுகின்றனர். இன்றைய பொருளாதார சூழலில், இன்றைய விலைவாசி அதிகரிப்பு சூழலில் இந்த ஊதியம் என்பது மிகக் குறைந்த கொடுப்பானவாகும். இதனால் ஆசிரியர்கள் வேறு பல்வேறு தொழில்களை பகுதி நேரமாக செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இது ஆசிரியர்களின் தொழில் வாண்மையை பாதிக்கவும் கூடும். அத்துடன் அவர்கள் கடும் உள நெருக்கடிகளுக்கு ஆளாகவும் நேரிடும். ஆசிரியர்களை மதிக்கின்ற நாட்டில், மதிப்பான சம்பளத்தை வழங்குவதன் வாயிலாகவே நாட்டின் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். இந்த நிலையில் ஆசிரியர் சேவைத்துறையின் சம்பள முரண்பாட்டினை தீர்க்கும் வகையில் ஒரே முறையில் முரண்பாட்டைத் தீர்த்து சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று கோரியே தற்போது போராட்டம் நடைபெறுகிறது.

அவரவர் தொழில் என்பது அவரவர் துறை சார்ந்தது. கல்வித்துறை என்பது துறைசார் ஆளுமையாலும் கல்வி உளவியல் நுட்பத்தாலும் ஆனது. அதைப் போலவே ஒவ்வொரு துறையும் தனித்துவம் பெறுகின்றது. அதனை நாம் மதிக்க கற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன் தொழில்சார் உரிமைகளுக்காக போராடுகின்றவர்களை மதிப்பதும் அவர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்பதும் அவசியமான பண்பு. இந்த நாட்டில் அரச தலைவர் முதல், பிரதம மந்திரி வரையிலும் ஆசிரியர்களிடம் பாடம் படித்து வந்தவர்கள் என்பதை மறக்கக் கூடாது. இந்த நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அனைத்து அதிகாரிகளும் தங்கள் ஆசிரியர்களை மனதில் கொண்டு அவர்களின் போராட்டத்தை தமது அரசியல் மற்றும் பதவி நலன்களை கொண்டு கொச்சைப்படுத்தக்கூடாது.

ஆசிரியர்களின் நியாயமான போராட்டத்தை மதிக்க வேண்டிய அரசு தற்போது இராணுவத்தை வைத்து பாடசாலைகளை நடத்துவோம் என்ற வகையிலும் ஆசிரியர்களை மிரட்டி வருகின்றது. இங்குதான் ஸ்ரீலங்கா உலகின் ஆச்சரியம் மிகுந்த நாடாகிறது. கடந்த காலத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கையில் ஸ்ரீலங்கா இராணுவத்தை முழுமையாகப் பயன்படுத்தியது. தடுப்பூசி ஏற்றுவதிலும் கூட இராணுவத்தினரே பயன்படுத்தப்பட்டனர். அது தடுப்பூசி குறித்த சந்தேகத்தையும் அச்சத்தையும் மக்களுக்கு ஏற்படுத்தியதும் வெளிப்படையானதே.

இலங்கையில் சுகாதாரத்துறை செத்துவிட்டதா என மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கேள்வி எழுப்பிய நிலை தோன்றியிருக்க, தற்போது பாடசாலைகளையும் இராணுவத்தை கொண்டு திறப்போம் என்பது நாட்டின் கல்வித்துறையையும் இராணுவ மயப்படுத்துகின்ற இராணுவ நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருகின்ற தலையீடு ஆகும். ஏற்கனவே வடக்கு கிழக்கில் கல்வி மற்றும் பாடசாலை நிர்வாகத்தில் இராணுவ தலையீடுகள் காணப்படுவதாகவும் பாடசாலைகளை அண்டிய பிரதேசங்களில் இராணுவப் பிரசன்னங்கள் மாணவர்களின் கல்வியை பாதிப்பதாகவும் கல்விச் சமூகங்கள் குற்றம் சுமத்தியிருந்தன.

இலங்கை இராணுவம் தமிழ் மக்களுக்கு எதிராக மாபெரும் இனப்படுகொலையைப் புரிந்திருக்கிறது. இராணுவத்தினரைப் பார்க்கும் போதெல்லாம் முள்ளிவாய்க்காலும் அங்கே நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலையும் நினைவுக்கு வருகின்றது. இந்த நிலையில் சர்வதேச ரீதியாக இலங்கை இராணுவத்திற்கு எதிராக வலுத்த யுத்தக் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. கொரோனா தடுப்பு நடவடிக்கையில் இராணுவத்தை நுழைத்து இராணுவத்தின் இரத்தக் கறைகளைக் கழுவ தற்போதைய அரசாங்கம் முயற்சி எடுத்து வருகின்றது.

இதனால் எதற்கெடுத்தாலும் இராணுவத்தைக் கொண்டு நடத்துவோம், திறப்போம் என்ற இராணுவமயப்படுத்தல் மனநிலை அதிகரித்து வருகின்றது. இனி வரும் காலத்தில் ஸ்ரீலங்காவில் வைத்தியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டால், இராணுவத்தினரைக் கொண்டு சத்திரகிசிச்சைகளைச் செய்வோம் என்றும் ஸ்ரீலங்கா அரச தரப்பினரும் அதிகாரிகளும் சொல்லக் கூடும். அதைப்போல ஸ்ரீலங்காவில் நீதிபதிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டால் இராணுவத்தினரை நீதிபதியின் இருக்கையில் அமர்த்தி நீதிமன்றம் நடத்துவோம் என்றும் ஸ்ரீலங்கா அரச தரப்பினரும் அதிகாரிகளும் சொல்லக் கூடும் சொல்லக் கூடும்.

பாடசாலைகளில் இராணுவத் தலையீட்டிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் சிங்கள தேசம், தமிழர்கள் மாத்திரம் இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் வாழ வேண்டும் என எதிர்பார்ப்பது நியாயமற்றது. அத்துடன் இத்தகைய அணுகுமுறைகள், ஈழத் தமிழர்கள் எத்தகைய அடக்குமுறை சூழலிலும் இராணுவ ஆக்கிரமிப்பின் மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை இந்த உலகிற்கு எடுத்துரைக்கிறது.

# அடுத்த செவ்வாய்க்கிழமை நடக்கவிருக்கும் ஒரு சந்திப்பு ?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



ஏற்கனவே ஒருங்கிணைப்பில் உள்ள தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட ஐந்துக்கும் குறையாத கட்சிகள் அடுத்த செவ்வாய் 2ஆம் திகதி கூடிப் பேசவிருக்கின்றன. விக்னேஸ்வரனின் தமிழ்மக்கள் தேசியக் கூட்டணி ஈபிஆர்எல்எப் டெலோ்புளட் இவற்றோடு ஸ்ரீகாந்தா தலைமையிலான கட்சி ஆகிய ஐந்து கட்சிகளுமே அவ்வாறு கூடிக்கதைக்க இருக்கின்றன. இச்சந்திப்பில் தமிழரசுக்கட்சி கலந்து கொள்ளுமா என்பதனை உறுதிப்படுத்த முடியவில்லை. இது தொடர்பாக கடந்த 23ஆம் திகதி நடந்த சந்திப்பில் மாவை சேனாதிராசா கலந்து கொள்ளவில்லை. அவருடைய உடல் நிலையைக் காரணம்காட்டி அவர் கலந்து கொள்ளவில்லை என்ற போதிலும் இம்முயற்சிக்கு அவர் எதிர்ப்புக் காட்ட மாட்டார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இச்சந்திப்புக்கு கூட்டமைப்பின் தலைவராகிய சம்பந்தரின் ஆதரவு உண்டா என்பதையும் இக்கட்டுரை எழுதப்படும் நாள்வரையிலும் உறுதிப்படுத்த முடியவில்லை. மேலும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இச்சந்திப்பில் கலந்து கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லை என்று தெரிகிறது. இது தொடர்பாக முன்பு நடந்த சந்திப்புகளில் அக்கட்சி பங்குபற்றவில்லை. அதனால் அக்கட்சிக்கு நடக்கவிருக்கும் சந்திப்பிற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்றும் தெரிகிறது.

இச்சந்திப்பு ஏற்கெனவே டெலோ இயக்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஒருங்கிணைப்பு முயற்சிகளின் அடுத்தகட்டம் ஆகும். இச்சந்திப்பில் ஒரு முக்கியமான விஷயத்தைக் குறித்து கட்சிகள் ஒரு பொது உடன்பாட்டுக்கு வர இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இனப்பிரச்சினைக்கான தீர்வை பெறும் நோக்கத்தோடு ஒரு பேச்சுவார்த்தையைத் தொடங்குவது என்று சொன்னால் அந்த பேச்சுவார்த்தைக்கான நல்லெண்ணச் சூழலை தோற்றுவிக்கும் விதத்தில் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை மேற்படி கட்சிகள் இந்தியாவை நோக்கி முன்வைக்க இருப்பதாக அறிய முடிகிறது.

கடந்த 12 ஆண்டுகளாக இந்தியா தமிழ்த் தரப்பிடமிருந்து அவ்வாறான ஒரு கோரிக்கை ஒற்றுமையாக முன்வைக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பதாக அறியமுடிகிறது. அண்மையில் நாட்டுக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவுச் செயலர் அது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ளார். பல மாதங்களுக்கு முன்பு இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவு அமைச்சரும் அவ்வாறு கேட்டிருக்கிறார். அதாவது 13ஐ முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்த்தரப்பு ஒரே குரலில் முன்வைக்க வேண்டும் என்று இந்தியா எதிர்பார்ப்பதாக தெரிகிறது. கடந்த 12 ஆண்டுகளாக இனப்பிரச்சினைக்கு அதுதான் தீர்வு என்று இந்தியா வலியுறுத்தி வருகிறது குறிப்பாக அண்மை ஆண்டுகளில் ஐநா தீர்மானத்திற்குள் இந்தியா அதனை உட்செலுத்தியிருக்கிறது.

13வது திருத்தம் எனப்படுவது இந்திய-இலங்கை உடன்படிக்கையின் விளைவு. இந்திய-இலங்கை உடன்படிக்கை எனப்படுவது இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு எழுதப்பட்டது என்று கூறப்பட்டாலும் அதில் தமிழ்மக்கள் ஒரு தரப்பாக கையெழுத்திடவில்லை. எனவே இந்தியாதான் தமிழ் மக்கள் சார்பாக அதில் கையெழுத்திட்டது என்று எடுத்துக்கொள்ளலாம். அப்படி பார்த்தால் 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவதில் இந்தியாவுக்கு ஒரு கூட்டுப்பொறுப்பு உண்டு. ஆனால் கடந்த 34 ஆண்டுகளாக இந்தியா அக்கூட்டுப் பொறுப்பை ஏன் நிறைவேற்றவில்லை? புலிகள் இயக்கத்தை ஒரு காரணமாக கூறினால் 2009க்கு பின்னரான கடந்த 12 ஆண்டுகளாக அதைச் செய்வதில் இந்தியாவுக்கு யார் தடையாக இருக்கிறார்கள்? ஆயின், இதுவரையிலும் தான் நிறைவேற்றாத ஒரு பொறுப்பை இந்தியா புதுப்பிப்பதற்கு விரும்புகிறதா? அதனால்தான் அப்படி ஒரு கோரிக்கை தமிழ் தரப்பிலிருந்து ஒரே குரலில் முன்வைக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றதா?

எனினும் 13வது திருத்தம் தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் ஒருமித்த நிலைப்பாடு இல்லை. கடந்த 12 ஆண்டுகளில் குறிப்பாக கிடடதட்ட 10 ஆண்டு காலத்துக்கு தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் போலக் காட்சியளித்த கூட்டமைப்பு 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை அழுத்தமாக முன்வைத்திருக்கவில்லை. கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தர் ஒருமுறை டெலோ இயக்கம் அது தொடர்பாக பேசிய பொழுது 13ஆவது திருத்தத்தை நான் தும்புத்தடியாலும் தொட்டுப்பார்க்க மாட்டேன் என்று கூறியதாக ஒரு தகவல் உண்டு. தவிர சம்பந்தர் கடந்த 12 ஆண்டுகளில் இனப்பிரச்சினைக்கான தீர்வு பொறுத்து இரண்டு முயற்சிகளில் ஈடுபட்டார். முதலாவது முயற்சி மகிந்த ராஜபக்சவின் காலத்தில். அதில் 13 பிளஸ் என்று மஹிந்த கூறியதை நம்பி அவர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார். ஆனால் முடிவில் அவை காலத்தைக் கடத்தும் உத்திகளே என்று தெரியவந்தது. அதன்பின் 2015தொடங்கம் 2018இன் இறுதிவரையிலும் ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் ஒரு புதிய யாப்பை உருவாக்கும் முயற்சியில் சம்பந்தர் அரசாங்கத்தோடு இணைந்து செயற்பட்டார். இதற்கு முன் உருவாக்கப்பட்ட எந்த ஒரு யாப்பும் தமிழ் மக்களின் பங்களிப்போடு உருவாக்கப்படவில்லை என்றும் தமிழ் மக்களின் பங்களிப்போடு முன்னெடுக்கப்படும் முதலாவது யாப்புருவாக்க முயற்சி இதுவென்றும் சம்பந்தர் கூறி வந்தார்.

இது விடயத்தில் கூட்டமைப்பு அத்தீர்வைக் குறித்து இந்தியாவோடு உரையாடவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு இந்தியத் தரப்பில் உண்டு. தனது தனிப்பட்ட மருத்துவ தேவைகளுக்காக இந்தியாவுக்குச் சென்று வரும் சம்பந்தர் தீர்வு முயற்சிகள் தொடர்பில் இந்தியாவோடு கலந்தாலோசிக்கவில்லை என்று தெரிகிறது. இதுவிடயத்தில் சம்பந்தர் தன்னைப் புறக்கணித்திருப்பதாக இந்தியா கருதுவதாகத் தெரிகிறது. ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி தோற்கடிக்கப்பட்ட பின்னர் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரை கூட்டமைப்பினர் சந்தித்தபோது தூதுவர் தனது அதிருப்தியை கூட்டமைப்பிடம் தெரிவித்ததாகவும் ஒரு தகவல் கொழும்பு பத்திரிகைகளில் வெளிவந்தது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி 13ஆவது திருத்தத்தை ஒரு தொடக்கமாகவேனும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. விக்னேஸ்வரனின் தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணியும் அதன் தோழமைக் கட்சிகளும் அதை ஒரு தொடக்கமாக ஏற்றுக்கொள்கின்றன. கடந்த ஜனவரி மாதம் ஐநாவுக்கு கடிதம் எழுதியபோது இரண்டாவது கடிதத்தை அனுப்பிய கூட்டமைப்பு பின்னடித்தது. எனினும் ஏனைய இரண்டு கட்சிகளையும் இணைத்து ஒரு கடிதத்தை எழுத சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் முயற்சித்தார்கள். ஆனால் 13வது திருத்தம் தொடர்பில் இரண்டு கட்சிகளும் ஒரு பொதுமுடிவுக்கு வரமுடியவில்லை. அதனால்தான் அக்கடிதத்தை அனுப்ப முடியவில்லை.

தமிழ்ப்பப்பில் மேற்படி கட்சிகளைத் தவிர தமிழ்தேசிய நிலைப்பாட்டை கொண்டிராத அதேசமயம் அரசாங்கத்தோடு பங்காளிகளாகச் செயற்படும் கட்சிகளான ஈபிடிபி, பிள்ளையானின் கட்சி போன்றன 13ஆவது திருத்தத்தை கொள்கையளவில் ஏற்றுக் கொள்வதாக தெரிகிறது. ஆனால் அதை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை அக்கட்சிகள் மத்தியில் இருந்து வலிமையாக வரவில்லை. 13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த தவறிய அரசாங்கங்களோடுதான் மேற்படி கட்சிகள் தொடர்ச்சியாக இணைந்து வேலை வேலை செய்து வருகின்றன.

எனவே தொகுத்துப் பார்த்தால் தமிழ்ப்பரப்பில் 13ஆவது திருத்தத்தை ஏதோ ஒரு விகிதமளவுக்கு ஏற்றுக் கொள்ளும் தரப்பினரின் எண்ணிக்கைதான் அதிகமாக உள்ளது. இதில் கொழும்பு மைய அரசியலை முன்னெடுக்கும் மனோ கணேசனின் முற்போக்குக் கூட்டணியும் 13ஆவது திருத்தத்தை எதிர்க்கவில்லை என்று தெரிகிறது. வரும் செவ்வாய்க்கிழமை முடிவெடுக்கும்பொழுது மனோ கணேசனையும் இணைத்துக் கொள்ளலாம் என்று மேற்படி கட்சிகள் சிந்திப்பதாக தெரிகிறது. இக்கோரிக்கைத் சம்பந்தரும் தமிழரசுக் கட்சியும் சம்மதித்தால் அது ஒரு பலமான கோரிக்கையாக அமையக்கூடும். இல்லையென்றால் அக்கோரிக்கைக்கு அதிகம் பலம் இருக்காது. அடுத்த வாரம் ஜனாதிபதி ஸ்கொட்லாந்து போகிறார். காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் அவர் பங்குபற்றவிருக்கிறார். அதே மாநாட்டுக்கு இந்திய பிரதமரும் வர இருக்கிறார். இப்படி ஒரு தருணத்தில் மேற்படி கட்சிகள் இணைந்து அப்படி ஒரு கோரிக்கையை இந்தியாவை நோக்கி முன் வைக்க முயல்கின்றன.

அது 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் இந்தியாவுக்குள்ள கூட்டுப்பொறுப்பை உணர்த்தும் அதேசமயம் இது விடயத்தில் கடந்த 12 ஆண்டுகளாக இந்தியாவிடம் உள்ள ஒரு எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்யும் நோக்கிலானது என்று மேற்படி கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதன்மூலம் இந்தியாவானது இலங்கை இனப்பிரச்சினையில் மீண்டும் தலையிடுவதற்கான வாசல்கள் திறந்து விடப்படுமா? ஆனால் இந்தியா 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவது என்ற நிலைப்பாட்டை இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வாகவே வலியுறுத்துகிறது. அதேசமயம் மேற்படி காட்சிகள் அதை இறுதித் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்குரிய ஒரு முன் நிபந்தனையாக வைக்கப்போவதாக கூறுகின்றன. இந்த இரண்டு நிலைப்பாடுகளும் வேறு வேறானவை. கொழும்பின் மீது புதுடில்லி அழுத்தங்களைப் பிரயோகிக்கும் ஒரு நிலையை உருவாக்குவதே மேற்படி கோரிக்கையின் உள்நோக்கம் என்று மேற்படி கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கம் ஒரு மாகாண சபைத் தேர்தலை வைக்கலாம் என்ற ஊகங்கள் அதிகரித்து வருகின்றன. அதேசமயம் ஒரு புதிய யாப்புக்கான வரைபை விவாதத்துக்கு விடலாம் என்றும் ஊகிக்கப்படுகிறது. தென்னிலங்கையில் தற்போது நிலவும் சமூகப் பொருளாதார நெருக்கடிகளைக் கருத்திக்கூறின், மாகாண சபை தேர்தலை நடாத்துவது என்பது அரசாங்கத்தை பொறுத்தவரை ஒரு விஷ்பரீட்சை. அதனை அரசாங்கம் விரும்பாது. சில சமயம் வடக்கு-கிழக்கிற்கு ஒரு தேர்தலை நடத்தலாம் என்ற ஊகங்கள் உண்டு. ஆனால் அது வடக்கு-கிழக்கிற்கு என்று தனித்துவமான பிரச்சினைகள் இருப்பதையும் அங்கே ஒரு அதிகார கட்டமைப்பு தேவை என்பதையும் உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டதாக அமைந்து விடும். இதுவும் அரசாங்கத்திற்கு பிரச்சினைதான். எனவே மாகாணசபைத் தேர்தலை நடத்தப்போவதாகவும் ஒரு புதிய யாப்பை கொண்டு வரப் போவதாகவும் அரசாங்கம் கூறி வருவதெல்லாம் காலத்தை கடத்தும் உத்திகளே என்று ஊகிக்க இடமுண்டு.

எனினும் அரசாங்கத்தின் இந்த உத்திகளை எதிர்கொள்வதற்கு தமிழ் தரப்பு எதிர் உத்திகளை வகுக்க வேண்டிய ஒரு தேவை உண்டு. அவ்வாறான உத்திகள் அரசாங்கத்தை அம்பலப்படுத்தும் நோக்கிலானவைகளாக இருக்கவேண்டும். அந்த அடிப்படையில் சிந்தித்தால் மேற்படி கட்சிகளின் கோரிக்கை இந்திய இலங்கை அரசுகளை பொறுப்புக்கூற வைக்கும் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துமா? ஆனால் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தைக் கேட்ட இந்தியாவுக்கு கிட்டத்தட்ட 20 மாத கால இழுபறிக்குப் பின் மேற்கு முனையத்தைத்தான் இலங்கை வழங்கியிருக்கிறது. தனக்கு விருப்பமான ஒரு துறைமுக முனையத்தை கேட்டுப்பெறும் விடயத்தில்கூட இந்தியா அழுத்தங்களை பிரயோகிக்க விரும்பவில்லையா? அல்லது அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியவில்லையா? என்ற கேள்விக்கும் விடை தேட வேண்டும். அதுபோலவே 13வது திருத்தம் விடயத்திலும் இலங்கை அரசாங்கத்தின் மீது இந்தியா அழுத்தங்களை பிரயோகிக்கும் என்று எடுத்துக்கொள்வதற்கு கடந்த 34 ஆண்டு கால அனுபவம் உதவுவதாக இல்லை. எனவே கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையில் முரண்பாடுகளை உருவாக்குவது அல்லது கொழும்பின் மீது புதுடில்லியை அழுத்தம் பிரயோகிக்க வைப்பது போன்ற உத்திகளைப்பற்றிச் சிந்திக்கும் எவரும் அதற்குரிய அர்ப்பணிப்புகளோடும் தொழில்சார் தயாரிப்புகளோடும் சிந்திக்கவும் செயற்படவும் வேண்டும்.

கனடிய செய்திகள்
Canadian News

## Meet and Greet Event with Chief Nishan Duraiappah, the Police Chief of Canada's Peel Region - Hosted by 'Panjabi Broadcasters Association -

# கனடா – பீல் பிராந்திய பொலிஸ் திணைக்கள தலைமை அதிகாரி தர்சன் துரையப்பா அவர்களோடு ஒரு சந்திப்பு வைபவம்



கனடாவில் சீக்கிய இன மக்களும் ஈழத்து மற்றும் தமிழக தமிழர்களும் அதிகமாக வாழும் பீல் பிராந்தியத்தில். இன்னும் குறிப்பாக பிரம்டன் மாநகரில் வாழும் பொது மக்களுக்கும் பொலிஸ் திணைக்களத்திற்கும் உறவையும் புரிதலையும் ஏற்படுத்தும் நோக்கோடு நேற்று புதன்கிழமை மாலை பிரம்டன் மாநகரில் ஒரு சந்திப்பு வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த சந்திப்பில் பீல் பிராந்திய பொலிஸ் திணைக்களத்தின் தலைமை அதிகாரியான யாழ்ப்பாணத்தில் பிறந்த தர்சன் துரையப்பா அவர்களோடு அவரது திணைக்களத்தின் பிரதித் தலைமை அதிகாரிகள் பொலிஸ் அத்தியட்சகர்கள் என பல அதி-காரிகளும் பஞ்சாபி இனம் சார்ந்த ஒலிபரப்பாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் அதிபர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மேற்படி சந்திப்பை பிரம்ரன் மாநகரைத் தலைமையகமாகக் கொண்ட "பஞ்சாபி ஒலிபரப்பாளர்கள் கழகம்" - Panjabi Broadcasters Association - ஏற்பாடு செய்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி சந்திப்பிற்கு உதயன் பிரதம ஆசிரியரும் அழைக்கப்பட்டிருந்தார். சந்திப்பு வைபவம் ஆரம்பமாவதற்கு முன்னர் அவர் பீல் பிராந்திய பொலிஸ் திணைக்களத்தின் தலைமை அதிகாரியான தர்சன் துரையப்பா அவர்களோடு உரையாடியாடினார்.

அவ்வேளை அவர் இங்கு வாழும் தமிழ் மக்களின் கலை கலாச்சார மற்றும் அரசியல் ஈடுபாட்டைப் பார்த்து பெருமையும் மகிழ்ச்சியும் அடைவதாகத் தெரிவித்தார்.





மேற்படி சந்திப்பில் பீல் பிராந்தியத்தில் நடைபெ-றும் குற்றவியல் சம்பவங்கள். கொள்ளைச் சம்பவங்கள். தாக்குதல் சம்பவங்கள் ஆகியவை தொடர்பாகவும் அவற்றை தடுப்பது தொடர்பாகவும், கேள்விகளும் பதில்களும் பகிர்ந்து கொள்ளப்பெற்றன.

பல பயனுள்ள கேள்விகளை ஒலிபரப்பாளர்கள் கேட்க அவைகளுக்கு காத்திரமாகவும் பொறுப்புணர்வோடும் பொலிஸ் தலைமை அதிகாரியும் மற்றும் அதி-காரிகளும் பதிலளித்தார்கள்.

பீல் பிராந்தியத்திற்கு மிக அருகிலேயே கனடாவின் முக்கிய விமான நிலையமான "பியர்சன் விமான நிலையம்" இயங்கிவருவதாலும் மற்றும் ஆயி-ரக் கணக்கான சரக்குப் போக்குவரத்து நிறுவனங்கள் இயங்கிவருவதாலும் குற்றச் செயல்கள் மிக அதிகளவில் இடம் பெறுவதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பெற்றது.

சரக்கு போக்குவரத்து துறை சார்ந்த நிறுவனங்களில் பெறுமதியான பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டு வருவதால் விஷமிகளின் கைவரிசைகள் அங்கு அடிக்கடி காட்டப்படுவதாலும் பொலிசாருக்கு மிகுந்த சவாலாக உள்ளதாவும் தெரிவிக்கப்பட்டது.

இறுதியில் ஊடக நிறுவனங்கள் அதிகளவில் பீல் பிராந்திய பொலிஸ் திணைக்களத்தோடு தொடர்புகளை பேணும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றும் கலந்துரையாடப்பெற்று அதற்கு இரு தரப்பினரும் உடன்பாடு கண்டனர்.







அதனைத் தொடர்ந்து பிரம்டன் வாழ் வர்த்தக நண்பர்கள். ஊடகவியலாளர்கள் பொ-லிஸ் அதிகாரிகள் கலந்து கொண்ட இராப்போசன விருந்தும் இடம்பெற்றது.

**செய்தியும் படங்களும்: சத்தியன்**

உலக செய்திகள்
World News

# பிள்ளைகள் தவறு செய்தால் இனிமேல் பெற்றோருக்குத்தான் தண்டனை

## சீனாவில் அமுலுக்கு வரும் புதிய சட்டம்

சீனாவில் இனிமேல் யாராவது பிள்ளைகள் தவறு செய்தால் பெற்றோருக்குத்தான் தண்டனை வழங்கப்படும் வகையில் புதிய சட்டம் ஒன்றை அமுல் செய்யவுள்ளதாக சீனாவின் குற்றவியல் அமைச்சு அறிவித்துள்ளது. சீ-னாவில் அமுலுக்கு வரும் புதிய சட்டம்மோசமான குணவியல்புகளையும் மற்றும் குற்ற நடத்தையும் கொண்ட சிறுவர்களின் பெற்றோரைத் தண்டிக்கும் சட்டத்தை சீன அரசு சார்ந்த அமைச்சு நடைமுறைக்குக் கொண்டுவரவுள்ளது. குடும்பக் கல்வி அபிவிருத்தி மசோதா என்ற பெயருடைய இது சீன பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதும் தவறு செய்யும் அல்லது குழப்படி செய்யும் சிறுவர்களின் பெற்றோர் தண்டிக்கப்பட முடியும் என்பதோடு கிரிமினில் நடவடிக்கைகளில் ஈடுபடும் சிறுவர்களின் பெற்றோர் குடும்பக் கல்வித்திட்டத்துக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று ரோய்ட்டர் தெரிவித்துள்ளது.


தேசிய மக்கள் காங்கிரசின் கீழ் இயங்கும் சட்ட விவகார ஆணைக்குழுவின் பேச்சாளர் ஸாங்டைவி இது தொடர்பாக குறிப்பிடுகையில் சிறுவர்களின் தவறான நடத்தைகளுக்கு பல காரணங்கள் இருந்தாலும் முக்கிய காரணியாக விளங்குவது குடும்ப ஒழுக்கக் கல்வியின்மை அல்லது அது போதுமானதாக இல்லாமையே என்று கூறியுள்ளார். இம் மசோதா தேசிய மக்கள் காங்கிரசின் நிலையியல் குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்படவுள்ளது. பெற்றோர் தமது பிள்ளைகளை ஓய்வாக இருக்கவும் விளையாடவும் உடற்பயிற்சி செய்யவும் நேரம் ஒதுக்கித்தர வேண்டும் என சீன கல்வித்துறை கருதுகிறது.

சீன மாணவர் மற்றும் இளைஞர் சமூக ஒழுக்கம் தொடர்பான கரிசனை-களை இவ்வருடத்தில் இருந்து சீன அரசு வெளியிட்டு வருகிறது. இணைய தயாரிப்புகளில் தோன்றும் நாயக நாயகியரை சாதனை வீரர்களாகக் கருதி வழிபடுவது, ஒன்லைன் விளையாட்டுகளில் மூழ்கிக் கிடப்பது தொடர்பாக பெற்றோர் கரிசனை கொள்ள வேண்டுமென சீன அரசு கருதுகிறது. மேலும் சீன இளைஞர்கள் பெண் தன்மை கொண்டவர்களாக விளங்குவதாகவும் அவர்கள் ஆண்களாக நடந்து கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்து வருகிறது.

இந்த சட்டம் தொடர்பாக சில தனியார் ஊடக நிறுவனங்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகின்றது.

# சீனா தாய்வானை தாக்கினால் அமெரிக்கா அதற்கு பதிலடி கொடுக்கும் என்கிறார் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்





தாய்வான் கடந்த சில மாதங்களாக சீனாவின் ஆக்கிரமிப்பு குறித்து தொடர்ந்து உலக நாடுகள் மத்தியில் எடுத்துரைத்து. குற்றம் சாட்டி வருகிறது. சீனாவில் கடந்த 1949 இல் நடந்த உள்நாட்டுப் போருக்குப் பின்னர் தாய்வான் உருவானது. என்றாலும் தாய்வான், சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி என சீன அரசு கூறி வருகிறது.சீனா தாக்கினால் தாய்வானை அமெரிக்கா பாதுகாக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். தாய்வான் மற்றும் சீனா தொடர்பில் அமெரிக்காவின் நீண்ட கால வெளியுறவுக் கொள்கையில் இருந்து விலகிய ஓர் அறிவிப்பாகவே இது பார்க்கப்படுகிறது.

எனினும் ஜனாதிபதியின் இந்த கருத்து அமெரிக்க கொள்கைகளில் குறிப்பிடும்படியான மாற்றத்தை ஏற்படுத்தும் ஒன்றல்ல என்று வெள்ளை மாளிகை பேச்சாளர் ஒருவர் பின்னர் அமெரிக்க ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

தாய்வான் தம்மை தற்பாதுகாத்துக்கொள்ள அமெரிக்கா உதவும் என அமெரிக்கச் சட்டத்தில் உள்ளது. எனினும் தாய்வான் மீது சீனா தாக்குதல் தொடுத்தால் அமெரிக்காவின் நிலைப்பாடு பற்றி அந்தச் சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

இந்நிலையில் அமெரிக்கா தாய்வானை பாதுகாக்குமா என டவுன் ஹோலில் பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பிய போது "ஆம், அதை செய்ய நாம் ஒப்புக் கொண்டுள்ளோம்" என விடையளித்தார் ஜோ பைடன். நீண்ட காலமாகவே சீனா தாய்வானை தாக்கினால், அந்நாட்டை பாதுகாப்பது தொடர்பான விடயத்தில் அமெரிக்கா அமைதியாகவே இருந்து வந்தது. ஆனால் தற்போது தாய்வானை பாதுகாப்போம் என கூறியுள்ளது.

இந்நிலையில் பைடனின் கருத்துக்கு சீனாவிடம் இருந்து உடன் எந்த பதிலும் கூறப்படவில்லை.

அமெரிக்கா தாய்வானுடன் உத்தியோகபூர்வ இராஜதந்திர உறவு-களை பேணாதபோதும், தாய்வான் உறவுகள் சட்டத்தின் கீழ் அந்த நாட்டுக்கு ஆயுதங்களை விற்று வருகிறது.

மறுபுறம் சீனாவுடன் உத்தியோகபூர்வ இராஜதந்திர உறவுகளை பேணும் அமெரிக்கா, அதன்மூலம் ஒரே சீன அரசு இருப்பதையும் இராஜதந்திர ரீதியில் ஒப்புக்கொண்டுள்ளது.

தாய்வான் வான் பாதுகாப்பு வலயத்திற்கு மேலால் சீனாவின் பல டஜன் போர் விமானங்கள் அடிக்கடி பறந்த சம்பவத்தை தொடர்ந்து இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றம் அண்மைய வாரங்களில் அதிகரித்துள்ளது. தேவைப்பட்டால் தாய்வானைக் கைப்பற்ற, படை பலத்தைப் பயன்படுத்த தயங்கமாட்டோம் என்று சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் சில மாதங்களுக்கு முன் கூறியது பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது. இதற்கு உலக நாடுகளின் கண்டனங்கள் பெரியளவில் வெளியாகியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தியா செய்திகள்
India News

# பேரறிவாளனுக்கு 6 — வது முறையாக பரோல் நீட்டிப்பு: சிறைக்குத் திரும்ப இருந்த நிலையில் தமிழக அரசு உத்தரவு

பேரறிவாளனுக்கு 6வது முறையாக மேலும் ஒரு மாதம் பரோல் நீடிக்கப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை பகுதியைச் சேர்ந்தவர் பேரறிவாளன். முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார். பேரறிவாளன், முருகன், நளினி, சாந்தன் உள்ளிட்ட 7 பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என அரசியல் கட்சி சார்பிலும், சில அமைப்புகள் சார்பிலும் பல்வேறு கோரிக்கைகள் எழுந்து வருகின்றன. இந்நிலையில், சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பேரறிவாளன் சிறுநீரகத் தொற்று, மூட்டு வலியால் அவதிப்பட்டு வந்ததைத் தொடர்ந்து, அவருக்கு 1 மாதம் பரோல் வழங்க வேண்டும் என அவரது தாயார் அற்புதம்மாள் தமிழக அரசுக்குக் கோரிக்கை விடுத்தார். இந்தக் கோரிக்கையை ஏற்று கடந்த மே 28-ம் தேதி பேரறிவாளனுக்கு ஒரு மாதம் பரோல் வழங்கி தமிழக அரசு உத்தரவிட்டது. இதனை தொடர்ந்து, பேரறிவாளன் பலத்த பாதுகாப்புடன் சென்னையில் இருந்து ஜோலார்பேட்டையில் உள்ள தனது வீட்டுக்கு வந்தார். வீட்டில் இருந்தபடியே அவர் மருத்துவ சிகிச்சை எடுத்து வந்தார். மேலும், மருத்துவ சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி, வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள மருத்துவமனைகளுக்குச் சென்று அவர் சிகிச்சை பெற்று வந்தார். நீதிமன்ற உத்தரவுப்படி ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் பேரறிவாளன் தினமும் கையெழுத்திட்டும் வந்தார்.

1 மாத காலம் பரோல் முடிந்து கடந்த ஜூன் மாதம் 28-ம் தேதி சிறைக்குத் திரும்ப இருந்த பேரறிவாளனுக்குத் தமிழக அரசு மேலும் ஒரு மாதம் பரோலை நீட்டித்து உத்தரவிட்டது. அதேபோல, ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் எனத் தொடர்ந்து 5 முறை பேரறிவாளனுக்கு பரோல் நீடிக்கப்பட்டது. 1 மாதம் பரோலில் வந்த பேரறிவாளனுக்குக் கிட்டத்தட்ட 150 நாட்களுக்கு பரோல் நீவடிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், அக்டோபர் மாதம் 26-ம் தேதியுடன் பரோல் முடிவடைந்ததால், இன்று பேரறிவாளன் சிறைக்குத் திரும்பத் தேவையான ஏற்பாடுகளைக் காவல்துறையினர் செய்து வந்தனர். பாதுகாப்பு வாகனங்கள் அவரது வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டு பேரறிவாளன் சிறைக்குத் திரும்பத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பாதுகாப்பு காவலர்கள் மேற்கொண்டனர்.



இந்நிலையில், தமிழக அரசு பேரறிவாளனுக்கு 6-வது முறையாக பரோலை நீட்டித்து இன்று காலை உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து, பேரறிவாளன் வீட்டில் பாதுகாப்பு ஏற்பாடுகள் வழக்கம்போல் தொடர்ந்தன. கடந்த வாரம் சிறுநீரகத் தொற்று காரணமாக மருத்துவர்கள் ஆலோசனைப்படி வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் பேரறிவாளனுக்கு எம்ஆர்ஐ ஸ்கேன், சிடி ஸ்கேன் ஆகியவை மேற்கொள்ளப்பட்டது. இதனால், அவரது உடல்நிலை கருதி மேலும் ஒரு மாதம் பரோல் நீட்டிக்கப்பட்டுள்ளதாக காவல் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேரறிவாளனுக்கு பரோல் நீட்டிப்பு தொடர்ந்து நடந்து வருவதால், அவரது வீட்டின் அருகே பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வரும் காவலர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மாவட்டக் காவல்துறையினர் செய்து தர வேண்டும் என பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வரும் காவலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பேரறிவாளனின் உடல்நிலையைக் கருதி மேலும் ஒரு மாதம் பரோல் வழங்கிய தமிழக அரசுக்கு அற்புதம்மாள் நன்றி தெரிவித்துள்ளார்.

# துக்ளக் ஆசிரியர் குருமூர்த்தி மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் மீண்டும் விசாரணை நடத்தப்படுமென்கிறார் அரசு வழக்கறிஞர்



துக்ளக் ஆசிரியர் குருமூர்த்தி மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் மீண்டும் விசாரணை நடத்தப்படும் என அரசு வழக்கறிஞர் கூறினார். குருமூர்த்தி மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர அனுமதி கோரிய மனு மீது மீண்டும் விசாரணை நடத்தப்படும்.

துக்ளக் பத்திரிகையின் 51-வது ஆண்டு விழாவில் நீதிபதிகள் நியமனம் குறித்து குருமூர்த்தி கடும் விமர்சனம் செய்தார். உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் அரசியல்வாதிகளால் நியமிக்கப்பட்டவர்கள் என கருமூர்த்தி பேசியிருந்தார்.



# "ஓரே நாடு ஓரே சட்டம்" தமிழ்க் கட்சித் தலைவர்கள் விடும் அறிக்கைகள் உரிய பயன் தருமா?

- கனடா நக்கீரன்

அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடத்தப்பம் என்று சொல்வார்கள். சிறிலங்கா கடந்த இரண்டாடுகளுக்கு மேலாக பலமுனைகளில் பலத்த நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகிறது. பொருளாதார நெருக்கடி, வெளிநாட்டுக் கடன் நெருக்கடி, பணவீக்கம், கோவிட் 19 தொற்று நோய் பரவல் போன்றவற்றால் மக்கள் அவதிப்படுகிறார்கள்.

வயலில் நிற்க வேண்டிய விவசாயிகள் தெருவில் நிற்கிறார்கள். பள்ளிக்கூடத்தில் பாடம் எடுக்க வேண்டிய ஆசிரியர்களும் தெருவில் இறங்கிப் போராடி வருகிறார்கள்.



ஆனால் சனாதிபதியோ அல்லது அவரது அமைச்சர் பட்டாளமோ எதற்கும் செவிசாய்க்காமல் பேசா மடந்தையாக இருக்கிறார்கள். நாட்டு மக்கள் என்னை சனாதிபதியாக நியமித்தது பருப்பு மற்றும் அரிசியின் விலைகளைப் பார்த்துக் கொள்வதற்கு என்றால் அதற்கு நான் தேவையில்லை என சனாதிபதி கோட்டாபய இராசபக்ச காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பின்னணியில்தான் சனாதிபதி இராசபக்ச தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட "ஒரே நாடு ஒரே சட்டம்" என்னும் வாக்குறுதியை நடைமுறைப்படுத்தும் முகமாக ஒரு செயலணியை அமைத்துள்ளார். கசாப்புக்கடைக்காரனை பசுவதை தடை அமைப்புக்கு தலைவராக நியமித்தது போல அந்தச் செயலணிக்குப் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையில் 13 பேரை நியமித்துள்ளார்.
சனாதிபதி கோட்டாபய பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலம் தொட்டு ஞானசார தேரர் மற்றும் அவரது பொதுபல சேனாவின் அமைப்போடு நல்லுறவை வைத்துக் கொண்டு வருபவர். அந்த உறவு காரணமாகவே அவர் இந்தச் செயலணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் இலங்கையின் சிறுபான்மை சமூகங்களுக்கு செய்யப்பட்ட நேரடியான அவமானமாக பார்க்கப்படுகிறது.



இந்தச் செயலணியில் ஒரு தமிழராவது இடம்பெறவில்லை. இதன் பொருள் அரசின் கணிப்பில் தமிழர் இலங்கையின் குடிமக்கள் இல்லை என்பதே. அதே சமயம் ஒன்றுக்கு நான்கு முஸ்லிம்கள் செயலணியில் இடம்பெற்றுள்ளார்கள்.

இந்தச் செயலணி இலங்கைக்குள் ஒரு நாடு, ஒரே சட்டம் என்ற கருத்தாக்கத்தை செயல்படுத்துவது குறித்து ஆய்வு செய்து ஒரு வரைவு சட்டத்தை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.

நாட்டில் ஷாரியா சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சியை சிங்கள - பவுத்த பேரினவாத குழுக்கள் எதிர்த்து வருகின்றனர். இது முஸ்லீம் தீவிரவாதத்தை ஊக்குவிப்பதாகக் கூறப்படுகிறது.

ஏப்ரில் 21, 2019 ஆம் தேதி இலங்கையில் உள்ள 3 கத்தோலிக்க தேவாலயங்கள் 3 சொகுசு ஹோட்டல்கள் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 270 பேர் - பெரும்பாலும் தமிழர்கள் - கொல்லப்பட்டனர் மற்றும் 500 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதலை தேசிய தவ்ஹீத் ஜமாத் (**NTJ**) என்ற தீவிரவாத இஸ்லாமிய அமைப்பு மேற்கொண்டது.

இதன் பின் மொத்த முஸ்லிம்களும் இஸ்லாமிய தீவிரவாதிகளின் ஆதரவாளர்கள் என்ற பரப்புரை சிங்கள - பவுத்த தீவிரவாத அமைப்புக்களால் முடுக்கிவிடப்பட்டது.
இந்தச் செயலணியில் இடம்பெற்றுள்ள கலகொடஅத்தே ஞானசார தேரர் சிங்கள - பவுத்த தீவிரவாத அமைப்பான பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர். இது 2012 ஆம் ஆண்டு முதன்முதலில் தொடங்கப்பட்டதில் இருந்து இலங்கையில் அதிகரித்து வரும் முஸ்லிம் எதிர்ப்பு உணர்வுக்கு எண்ணெய் வார்த்து வருகிறது. ஹிட்லர் யூதர்களை பலிக்கடா ஆக்கியதுபோல் ஞானசார தேரர் முஸ்லீம்களைப் பலிக்கடா ஆக்கப் பார்க்கிறார். முஸ்லிம்களை ஒரு கை பார்த்த பின்னர் அடுத்ததாக ஞானசேரரின் இலக்கு தமிழர்களாக இருப்பார்கள்.

அத்தே ஞானசார தேரர் 2019 ஆம் ஆண்டு நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் 6 ஆண்டு கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர். காணாமல் போன பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியாவை மிரட்டிய குற்றச்சாட்டில் அவர் சிறையில் அடைக்கப்பட்டா. குடித்துவிட்டு வண்டி ஓட்டும் போது காவல்துறையிடம் பிடிபட்டவர். இவருக்கு முன்னாள் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பு வழங்கியதன் காரணமாகவே ஞானசார தேரர் சிறையிலிருந்து மே 23, 2019 அன்று விடுவிக்கப்பட்டார்.

சிங்கள பவுதத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சட்டத்தை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே சனாதிபதி கோட்டாபய இராசபக்சா நியமித்த ஞானசார தேரர் தலைமையிலான செயலணியின் குறிக்கோளாகும்.

தமிழர்களைப் பொறுத்த வரையிலே அவர்களுக்கு எதிராக 1948ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இனப்படுகொலையின் இன்னுமொரு பரிமாணமே இந்தச் செயலணி என சி.வி.விக்னேஸ்வரன் நா.உ தெரிவித்துள்ளார்.

*(தொடர்ச்சி 15ம் பக்கம்)*



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அரசியல் கைதிகள் மன அழுத்தத்தில் இருந்து விடுபட அவர்கள் விரும்பும் சிறைச்சாலைக்கு மாற்றம் வேண்டும் : அருட்தந்தை மா.சத்திவேல்



"இலங்கையில், அரசியல் அதிகார துஷ்பிரயோகம் செய்வோரும், மனித உரிமை மீறுவோரும், அதனை தூசிப்போரும் கூட தண்டனையிலிருந்து தப்பி விடக்கூடாது. அதேவேளை பாதிக்கப்பட்ட அரசியல் கைதிகள் மன அழுத்தத்தில் இருந்து விடுபட அவர்கள் விரும்பும் சிறைச்சாலைக்கு மாற்றம் பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டும் என்பதோடு அவர்களுக்கு நீதியும் கிட்ட வேண்டும். அவ்வாறு நிகழ்ந்தால் மட்டுமே நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கை கொள்வர்".

இவ்வாறு இலங்கை தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார். அவரால் 22ம் திகதி சனிக்கிழமை வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சிறைச்சாலைகள் முன்னாள் இராஜாங்க அமைச்சரான லொஹான் ரத்வத்தயின் கொலை அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்த அனுராதபுரம் சிறைச்சாலை அரசியல் கைதிகள் எட்டுபேரின் அடிப்படை உரிமை தொடர்பான வழக்கு கடந்த 21ஆம் திகதி விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது சட்டமா அதிபர் சார்பாக முன்னின்று உதவி சொலிசிட்டர் ஜெனரல் ரஜீவ் குணதிலக்க "கைதிகள் தங்களை யாழ்ப்பாண சிறைக்கு மாற்றுமாறு கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது" என்றதோடு அதற்கு காரணம் "அவர்கள் உறவினர்களின் உதவியை பெற்றுக் கொள்வார்கள்" என்பதாகும் என சிங்கள ஊடகம் ஒன்று (Srilanka Brief 22.10.2021) செய்தி வெளியிட்டிருந்தது.

இக்கூற்று உண்மையெனில் இது நியாயத் தன்மை அற்றது மட்டுமல்ல அடிப்படை மனித உரிமை மீறும் மற்றும் அதனை அவமதிக்கும் செயலுமாகும் என்பதால் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கவலை அடைவதோடு இத்தகைய கூற்றுக்கள் தமிழ் மக்கள் நம்பிக்கை இழக்கும் தன்மை கொண்டது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றது.

ஒருவரை நீதிமன்றம் குற்றவாளியாக தீர்ப்பிடும் வரை அவர் நிரபராதியே. அத்தோடு "சிறைக் கைதிகளும் மனிதர்களே" எனும் மகுடவாசகம் சிறைச்சாலை சுவரிலே எழுதப்பட்டுள்ள நிலையில் சிறைக்கைதிகள் தமக்கான உதவிகளையும், சட்ட ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வதற்கு தகுதி உடையவர்களே. அதற்கு சட்டத்தில் இடமுண்டு. அத்தோடு ஒரு நீதிமன்றம் குற்றவாளியாக தீர்ப்பிட்ட ஒருவர் சட்ட உதவியோடு மேல் நீதிமன்றத்திற்கு மீண்டும் மனு செய்யும் உரிமையும் உள்ளது. இதனை தடுக்க எவராலும் முடியாது. அதுமட்டுமல்ல சிறையில் இருப்பவர்கள் உறவினர்களை பார்ப்பதற்கும் அவர்களோடு உறவை வளர்ப்பதற்கும் உதவிகளை பெறுவதற்கும் இது வரை எவரும் தடை விதித்ததும் கிடையாது. இதனை எவராலும் தடுக்க முடியாது. தடுக்க நினைப்பது மனித உரிமை மீறலாகும்.

விசேடமாக அனுராதபுரம் சிறையில் உள்ள அரசியல் கைதிகள் பாதிக்கப்பட்டவர்கள். மன அழுத்தத்திற்கு உள்ளாகி இருப்பவர்கள். இவர்களை மனிதாபிமானம் கருதியும், பாதுகாப்பு கருதியும் அவர்கள் விரும்பும் சிறைச்சாலைக்கு மாற்றுவதே சிறந்தது. அதை விடுத்து பெற்றோர், உறவினர் உள்ள இடத்திற்கு மாற்றினால் உதவிகளைப் பெற்று விடுவார்கள் என மறுப்பு தெரிவிக்கின்றமை மனித உரிமை மீறும் செயல் மட்டுமல்ல சிறைச்சாலை மகுட வாசகத்தையும் தூசிக்கும் செயலுமாகும்.

சிறைச்சாலைக் கைதிகள் பெற்றோரின் உதவிகளை பெற்றுவிடுவார்கள் என்றால் அனைத்து கைதிகளுக்கும் இது பொருந்த வேண்டும் அவ்வாறு சிறைக் கைதிகள் அத்தனைபேரையும் அவர்களின் உறவுகள் சந்திக்க முடியாது தூர இடங்களில் இருக்கும் சிறைசாலைகளுக்கு மாற்றுவதற்கு சிறைச்சாலை திணைக்களம் நடவடிக்கை எடுக்குமா?

குற்றம் புரிந்தவராக கருதப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த ஆட்சியாளர்களின் உதவியோடு வேறு ஒரு ராஜாங்க அமைச்சு பதவியை தக்கவைத்துக்கொண்டு சுதந்திரமாக நடமாடி திரிகின்றார். இது எந்தவகையில் நியாயம்?

குற்றவாளிகள் குற்ற நீக்கம் செய்யப்படுவது குற்றங்கள் மீளப் பெற்றுக் கொள்வதும் ஏதோ ஒரு சக்தியின் உதவியினால் என்பதை சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவி சொலிசிஸ்டர் ஜெனரல் உணர்வாரா?

இவ்வாறு மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் ஆயர் இல்லத்தினால் மன்னார் நகரசபைக்கு காணி வழங்கி வைப்பு





மன்னார் சௌத் பார் மரி அன்னை நகர் பகுதியில் மன்னார் ஆயர் இல்லத்திற்கு சொந்தமான சுமார் 63 ஏக்கர் காணி மக்களின் குடியேற்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட நிலையில், அப்பகுதியில் உள்ள 6 ஏக்கர் காணி மக்களின் பொது தேவைகளை கருத்தில் கொண்டு மன்னார் நகரசபைக்கு கையளிக்கப்பட்டது.

குறித்த 6 ஏக்கர் காணியின் ஆவணங்கள் செவ்வாய்க்கிழமை (26) மன்னார் ஆயர் இல்லத்தில் வைத்து மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களினால் மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சனிடம் கையளிக்கப்பட்டது.

மேலும் குறித்த பகுதியில் கத்தோலிக்க மற்றும் இந்து ஆலயங்கள் அமைக்கவும் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

குறித்த நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார் மற்றும் பள்ளிமுனை பங்கு தந்தை அருட்பணி மரியதாசன் சீமான் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்

# நகரங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், 20 மில்லியன் ரூபா செலவில் மன்னார் நகர அபிவிருத்தி செயற்திட்டம்




நகரங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், 20 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்ட மன்னார் நகர அபிவிருத்தி செயற்திட்டம் செவ்வாய்க்கிழமை (26) மாலை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாட்டில் நீண்ட காலமாக அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் காணப்படும் 100 நகரங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், சுபீட்சத்தின் நோக்கு கொள்கைக்கு அமைய பிரதான நகரங்கள் மற்றும் பிரதேச நகரங்களுக்கு இடையிலான ஏற்றத் தாழ்வுகளை குறைத்து அனைத்து மக்களுக்கும் சமமான ஒரு நகர வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கோடு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி கரையோர பாதுகாப்பு, கழிவுப் பொருட்கள் அகற்றுகை, சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சுடன் இணைந்து குறித்த திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் மன்னார் நகரசபையின் உதவியுடன் 20 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்படும் மன்னார் நகர அபிவிருத்தி செயற்திட்டம் செவ்வாய்க்கிழமை (26) மாலை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்ரான்லி டி மெல், மன்னார் பிரதேசச் செயலாளர் எம். பிரதீப், நகர அபிவிருத்தி செயற்திட்ட மாகாண பணிப்பாளர் டி.பி.எஸ். திஸநாயக்க, மன்னார் நகர முதல்வர் ஞா.அன்ரனி டேவிட்சன் உட்பட பலரும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்

# ஆண்டுகள் 20 ஆனாலும் தத்தளிக்கும் தமிழ்க் கூட்டமைப்பு பகுதி 1

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)

இருபது வயதாகும் போது ஒரு இளைஞரோ அல்லது யுவதியோ வாழ்க்கையில் பலவற்றை கற்று அடுத்து வேலை வாய்ப்பு, திருமணம் போன்ற அடுத்த படிநிலைகளை நோக்கிச் செல்வது உலக இயல்பு. அதுவே நடைமுறை, யதார்த்தம் மற்றும் எதிர்பார்ப்பு. இது ஒரு அரசியல் கட்சி, நிறுவனம், கல்விச்சாலை போன்று அனைத்திற்கும் பொருந்தும். இருபது ஆண்டுகளைக் கடந்தவுடன் அனைவரும் வெள்ளிவிழாவை எதிர்பார்ப்பது ஒரு அரசியல் கட்சியாக அந்த எதிர்பார்ப்பு வளர்ச்சி, சாதனை, மக்கள் ஆதரவு, ஆட்சி அதிகாரம் போன்ற பல அம்சங்களையும், ஒரு நிறுவனமாக இருந்தால் அதன் உற்பத்தி, லாப நிலைமை, கூடுதல் தொழிற்சாலைகள் தொடக்கம் போன்றவையும், கல்விச்சாலையாக இருந்தால் இருபது ஆண்டுக்காலத்தில் அங்கிருந்து வெளியேறிய மாணவர்கள் எவ்வளவு சிறந்த கல்விமானாக வந்துள்ளதன் சாதித்துள்ளனர் என்பதைப் பொறுத்து அமையும்.

ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடங்கி 20 ஆண்டுகள் ஆகும் நிலையில், அந்த அமைப்பு என்ன சாதித்துள்ளது என்று சற்று ஆறுதலாக விருப்புவெறுப்பின்றி அசைபோட்டால், சாதனைகள் என்பதைவிட ஏமாற்றங்களே அதிகம் இருந்துள்ளன என்பது கசப்பான உண்மை. தேர்தல்முறை தவிர்க்க முடியாதது, ஜனநாயக ரீதியாக வெற்றிபெற வேண்டுமென்றால் அந்த பாதையில் பயணிக்க வேண்டியது அவசியம் என்று உணர ஆரம்பித்த காலம் இந்த நூற்றாண்டின் ஆரம்பக்காலப் பகுதி. ஆயுதப் போராட்டத்தால் மட்டுமே எண்ணிய இலட்சியத்தை அடைய முடியாது என்கிற சிந்தனை விடுதலைப் புலிகள் அமைப்பால் மட்டுமல்ல, அவர்களுக்கு ஆதரவளித்த கல்விமான்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் அமைப்புகள் ஆகியவர்களாலும் முன்வைக்கப்பட்டது. மேலும் தமிழர் பகுதியில் சிங்கள கட்சிகள் மற்றும் அரசியல் தலைவர்களுக்கு செல்வாக்கு இல்லை, அங்கு தமிழர்கள் தாம் விரும்பிய பிரதிநிதிகளையே தேர்ந்தெடுப்பார்கள், அவர்கள் மூலமே நாடாளுமன்றத்தில் தமது குரலை ஒலிக்கச் செய்து, தனிநாடு என்பதற்கான அடிப்படையாகக் கருதப்படும் பொதுஜன வாக்கெடுப்பை நடத்துவது ஆகியவற்றை முன்னெடுக்க முடியும் என்று சர்வதேச சமூகம் தமிழர் தரப்புக்கு அறிவுறுத்தியிருந்தது.

அவ்வகையில் 2001 ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறவிருந்த நாடாளுமன்றத் தேர்தல் மிகவும் முக்கியமானதாகப் பார்க்கப்பட்டது. ஆனால் கூட்டமைப்பு தொடங்கப்படுவதற்கான தேவை 2010 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் ஏற்பட்ட அதிர்ச்சி முக்கியமான ஒரு காரணமாகும். அந்த அதிர்ச்சியின் தாக்கம் மிகவும் கடுமையாக இருந்தது.



தமிழர்களின் தாயகப் பகுதிகளான வடக்கு-கிழக்கில் ஏற்பட்ட தோல்வி தமிழ் கட்சிகள் மட்டுமல்ல தமிழர்களுக்கே பெரும் அதிர்ச்சியாக இருந்தது. தமிழீழம் அமைந்தால் அதன் தலைநகராக இருக்குமென்று அறியப்பட்ட திருகோணமலையிலிருந்து தமிழர்கள் யாரும் தெரிவாகவில்லை. அம்பாறை மாவட்டத்திலிருந்து ஈபிடிபி ஆதரவு பெற்ற ஒரு தமிழர் தெரிவானார். யாழ் தேர்தல் மாவட்டத்தில் போனஸ் ஆசனம் உட்பட 4 இடங்களை டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈபிடிபி வென்றது. வன்னி மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திலும் நிலைமை சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை.

சுமார் 50 ஆண்டுகளுக்குப் பிறகு தியாகராஜா மகேஸ்வரன் வென்றதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி யாழ்ப்பாணத்தில் மீண்டும் கால்பதித்தது. இந்தத் தேர்தலில் மாபெரும் அதிர்ச்சியாக எந்த தமிழ் கட்சிக்கும் தேசியப் பட்டியல் ஆசனம் கிடைக்குமளவுக்கு போதிய வாக்குகள் கிடைக்கவில்லை. வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் சனத்தொகைக்கு ஏற்ப புத்தாயிரமாம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் போதிய அளவில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் இல்லாத சூழல் உருவானது. இதற்கு அடிப்படை காரணம் தமிழ் கட்சிகளிடையே ஒற்றுமை இல்லாதது. அதன் காரணமாக வாக்குகள் சிதறின. அதன் முடிவு "குரங்கு பங்கிட்ட ஆப்பம் கதையானது". இதற்கெல்லாம் அப்பாற்பட்டு தமிழ் கட்சிகளிடம் மக்களிடம் எதைச் சொல்லி வாக்கு கேட்பது என்கிற குழப்பமும் காணப்பட்டது.

இந்த முடிவிலிருந்து மீள முடியாமல் தமிழ் கட்சிகளும் அதன் தலைவர்களும் திணறினர். இருந்ததும் போய்விடுமோ என்கிற கவலையுடன் தமிழ்க் கட்சிகள் இருக்க, மக்கள் இவர்களிடையேயான முரண்பாடு தமது எதிர்க்காலத்தை குலைத்துவிடுமோ என்று அஞ்சினர்.

ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்க முடியுமா, இழந்த வாக்கு வங்கியை மீண்டும் பெற முடியுமா, தமிழர் தாயகப் பகுதியிலிந்ருது அடுத்த தேர்தலிலாவது பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க முடியுமா போன்ற கேள்விகளுக்கு விடை தெரியாமல் தமிழ்க் கட்சிகள் அல்லாடின.

இந்நிலையில் இழந்ததை மீட்பது எப்படி என்பதை ஆராயக் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் தேசிய உணர்வாளரும், ஊடகவியலாளருமான "தராக்கி" சிவராம் ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்தார். இந்த கருத்தரங்கில் ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கல்விமான்கள் உட்பட பலர் பங்குபெற்றனர்.

அந்த கருத்தரங்கம் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை இன்றியமையாதது என்பதை வலியுறுத்தி, அவை தமிழ் மக்களின் நலன்களைக் கருதி தம்மிடையே இருக்கும் வேறுபாடுகளைக் களைந்து ஒரே குடையின் கீழ் ஒரு அமைப்பாகச் சேர்ந்து தேர்தலில் போட்டியிட வேண்டுமென்றும் என்றும், அப்படியான அந்த அமைப்பு விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் இப்படியான ஒரு பரந்துபட்ட அரசியல் அமைப்பிற்கு விடுதலைப் புலிகளின் அங்கீகாரத்தை பெறுவது என்றும் முடிவானது.

எனினும் தாங்கள் எடுத்த இந்த தீர்மானத்திற்கு விடுதலைப் புலிகளின் ஒப்புதல் கிடைக்குமா என்கிற கேள்வியும் எழுந்தது. அதேவேளை புலிகளுக்கும் ஜனநாயக ரீதியில் ஒரு முன்னெடுப்பு மற்றும் அரசியல் முகம் தேவைப்பட்டது. இவை இரண்டும் இந்த கருத்தரங்கின் முடிவில் ஒன்று சேர்ந்தன. ஆனால் பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற பிரச்சனை உருவானது. அந்த மணியைக் கட்ட ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள், கல்விமான்கள் போன்றோர்களைக் கொண்ட ஒருங்கிணைப்புக் குழுவொன்று ஏற்படுத்தப்பட்டது. இந்தக் குழுவுக்கு பல பணிகள் காத்திருந்தன. ஆனால் அனைத்திலும் முக்கியமாக மூன்று அம்சங்களை அவர்கள் முன்னெடுக்க வேண்டியிருந்தது. அதில் ஆகக் கூடியது இனி எக்காலத்திலும் தமிழ் வாக்குகள் பிரியக்கூடாது என்பதாகும். மற்ற இரண்டில் ஒன்று விடுதலைப் புலிகள் அமைப்பு எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் உட்பட எந்த தமிழ் அரசியல்வாதிகளையும் படுகொலை செய்யக் கூடாது என்பதாகும். அதே நேரம் புலிகளை சமாதானப்படுத்தி இதற்கு ஏற்றுக்கொள்ள வைப்பதற்கு முன்வைக்கப்பட்ட யோசனை, அனைத்து தமிழ்க் கட்சிகளும் விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாக இருப்பார்கள், அவர்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும், எந்தப் பேச்சுவார்த்தைகளிலும் தமிழ் மக்கள் சார்பாக அவர்களே பங்கேற்பார்கள் என்கிற கருத்து முன்வைக்கப்பட்டு அது பெரும் அழுத்தங்களுக்கு இடையே ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று அந்தப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்ற பலர் என்னிடம் பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளனர்.



நிபந்தனைகள் இதோடு மட்டும் நிற்கவில்லை. ஆயுதமேந்தி போராடிய ஈபிஆர்எல் எ்.ப், புளாட், டெலோ போன்ற கட்சிகள் தமது ஆயுதங்களைக் கைவிட வேண்டும், மேலும் அரசுடன் சேர்ந்து விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க துணைபோகக் கூடாது, இதர ஆயுதமேந்தியக் குழுக்களுடன் தொடர்புகளைப் பேணக் கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டது. ஆனால் இதிலும் பிரச்சனைகள் இருந்தன என்று சிவராம் என்னிடம் தெரிவித்திருந்தார். இதற்கு அப்பாற்பட்டு தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் தமக்குளிருத பிணக்குகளை களைந்து முன்னாள் போராளிக் குழுக்களுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் அந்த ஒருங்கிணைப்புக் குழுவுக்குச் சொல்லப்பட்டது.

"ஆயுதமேந்தியவர்களைக் கூட சமாளித்து ஒப்புக்கொள்ள வைக்க முடிந்தது, ஆனால் சூரியனையும் சைக்கிளையும் இணங்க வைக்க படாதபாடுபட வேண்டியிருந்தது" என்று அந்த ஒருங்கிணைப்புக் குழுவில் இருந்த மற்றொருவர் வேறொரு சந்தர்ப்பத்தில் இந்த எழுத்தாளரிடம் கூறினார். இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி ஆகியோருக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸுக்கும் இருந்த பகை ஊரறிந்த விஷயம்.

இப்படியான இழுபறிகள் மற்றும் கடும் முரண்பாடுகளுக்கு இடையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒன்று சேராத அல்லது சேர விரும்பாத கலவையான ஒரு கூட்டணி உருவானது. நான்கு கட்சிகள் இணைந்து குறைப் பிரசவத்தில் பிறக்கும் சூழலுக்கு ஆளான அந்தக் கூட்டமைப்பை அவசர கதியில் உருவாக்கின. இதில் கீரியும் பாம்புமான தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் இரண்டு முக்கியக் கட்சிகளாகவும், ஈபிஆர்எல்எ்.ப் மற்றும் டெலோ ஆகியவை "ஜுனியர் பார்ட்னராகவும்" இணைந்தன. அந்த நான்கு கட்சிகளும் நீறுபூத்த நெருப்பாக உருவாக்கியது தான் த தே கூ.

அந்த கூட்டமைப்பு தொடங்கியதிலிருந்தே பிரச்சனைகளின் மறுவுருமாகவே திகழ்ந்தது. அந்த கூட்டமைப்பிற்கு யார் தலைமை ஏற்பது, எந்த சின்னத்தில் போட்டியிடுவது, யார் யாருக்கு என்னென்ன பதவிகள், யார் இறுதி முடிவை எடுப்பார்கள், இவர்கள் கூறுவதை புலிகள் கேட்பார்களா அல்லது புலிகள் வலியுறுத்துவதை இவர்களால் நிறைவேற்ற முடியுமா, இதர தமிழ் கட்சிகள் இந்தக் கூட்டமைப்பை எப்படி நோக்கும் என்று ஏராளமான பிரச்சனைகள். ஆனாலும் அப்போதிருந்த சூழலில் பெரும்பாலான தமிழர்களுக்கும் சரி, விடுதலைப் புலிகளுக்கும் சரி ஒரு "குடை" அமைப்பு தேவைப்பட்டது.

இப்படித் தொடங்கிய கூட்டணியின் பயணம் எப்படியிருந்தது, அவர்களால் இலக்கை அடையை முடிந்ததா? போன்றவை அடுத்த பகுதியில்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை மன்னாரில் இப்படியும் ஒரு கிராமம்?

## சொந்த காணி, வீடு இன்றி தவிக்கும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள “கருங்காலி மோட்டை” கிராம மக்கள்

நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு போர் முடிவடைந்து 12 வருடங்களை கடந்து செல்கின்ற நிலையில் மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் மக்களின் வாழ்வாதார பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டே செல்கிறது.

அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள “கருங்காலி மோட்டை” என்ற கிராம மக்களின் அவலம் தொடர்ந்து கொண்டே செல்கிறது.

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் பிரிவுக்குட்பட்ட குறித்த கிராமத்தில் வசிக்கும் பல குடும்பங்களுக்கு சொந்தமான காணி மற்றும் வீடுகள் இல்லாத நிலையில் அவர்கள் உறவினர்கள் வீடுகளில் வசித்து வருகிறார்கள்.

இதனால் உரிய தொழில் வருமானம் இன்மையாலும் குடும்பங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளாலும் குறித்த கிராமத்தில் சுமார் 10 இற்கும் மேற்பட்ட குடும்பத்தினர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### *“கருங்காலி மோட்டை” கிராம மக்களின் கருத்து.*

நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு போரினால் அதிகமாக பாதிக்கப்பட்டு தடுப்பு முகாமில் இருந்து வந்து திருமணமான குடும்பங்கள் கைக் குழந்தைகள் வைத்திருப்பவர்கள், கர்ப்பிணி பெண்கள், பெண் தலைமைத்துவ குடும்பம் போன்றவர்கள் அடங்குகிறார்கள்.

அவர்களது வீடுகளுக்கு அருகாமையிலேயே 12 ஏக்கருக்கும் அதிகமான அரச காணிகள் இருந்த போதும் அவற்றை தனி நபர்கள் அடாத்தாக பிடித்து வேலி அடைத்து உள்ளார்கள்.

இதனால் அப்பகுதியில் வாழும் குடும்பங்கள் தொழில் வருமானம் இல்லாமல் தங்களுடைய வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியாமல் திண்டாடி வருகிறார்கள்.

கருங்காலி மோட்டை கிராம பகுதியில் 18 குடும்பங்களுக்கு மேல் வசித்து வந்தாலும் 9 குடும்பங்களுக்கு மேல் வீடு காணிகள் இல்லாதவர்கள், அன்றாடம் கூலி வேலைகள் செய்து வாழ்க்கை நடத்தும் எமக்கு சுய தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு சிறு துண்டு அரச காணிகள் கூட இல்லை என அந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சுய தொழில்களான ஆடு, மாடு, கோழி வளர்ப்பு மற்றும் தோட்டச் செய்கையினை மேற்கொண்டு ஏழை மக்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் கூறி வருகின்ற இந்த நேரத்தில் தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கு எமக்கு போதுமான காணி வசதிகள் இல்லை என பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எமக்காக அரசாங்கம் தந்த காணியில் வீடு மற்றும் மலசல கூடம் அமைப்பதற்கு மாத்திரமே போதுமாக உள்ள நிலையில் நாங்கள் எவ்வாறு சுய தொழில்களை மேற்கொள்வது என்றும் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

தமது வீடுகளுக்கு முன்பு 12 ஏக்கருக்கும் அதிகமான காணிகளை தனி நபர்கள் ஆக்கிரமித்து வேலி அடைத்து காடுகள் வளர விட்டுள்ளனர். இது அரச காணி என்பதற்கு அனைத்து ஆதாரங்களும் பிரதேச செயலகத்தில் இருக்கிறது. இவர்கள் பணபலம் படைத்தவர்கள் என்பதால் யாரும் கேள்வி கேட்பது இல்லை என தெரிவிக்கின்றனர்.

### *பாதை பிரச்சனை.*

எமது வீடுகளுக்கு முன்னால் உள்ள பெறுமதிமிக்க அரச காணிகளை ஆக்கிரமித்து உள்ளவர்கள் போட்டி போட்டு வேலி அடைத்து உள்ளமையினால் எமது பயணத்திற்கு சிறு ஒற்றையடிப் பாதை மட்டுமே விட்டுள்ளார்கள். இந்த பாதையால் சைக்கிள் மட்டுமே செல்ல முடியும். மழை காலங்களில் ஏதேனும் ஆபத்து நிகழ்ந்தால் முச்சக்கர வண்டி கூட செல்ல இயலாது.



வீட்டுக்கு தேவையான பாரமான பொருட்களையும் தலையில் சுமந்து வரவேண்டியுள்ளது. எமது பிரச்சினைகள் தொடர்பாக அரச அதிகாரிகளுக்கு எத்தனையோ தடவை தெரிவித்திருந்த போதும் எவரும் கண்டு கொள்ளவில்லை என்கிறார்கள்.

### *யுத்த பாதிப்பு*



யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தடுப்பு முகாமில் இருந்து வந்த நபர்களுக்கு இந்தியாவிற்கு சென்று மீளவும் குடியமர்த்தப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பத்திற்கு இதுவரை எந்த ஒரு வாழ்வாதார முன்னேற்றத்திற்காக உதவிகளும் செய்யப்படவில்லை.

இந்தியாவில் பிறந்த குழந்தைக்கு இங்கே பிறப்பு சான்றிதழ் எடுப்பதற்கு கூட சிரமமாக உள்ளது. இந்த நிலையில் இவர்களுக்கும் இன்னும் வீடு, காணி எதுவும் இல்லாமல் உறவினர் வீடுகளில் வசித்து வருகிறார்கள்.

இவ்வாறு உறவினர் வீடுகளில் வசித்து வரும் போது குடும்பங்களுக்குள் அடிக்கடி பிரச்சினைகள் எழுந்து பொலிஸ் நிலையங்களுக்கும் நீதிமன்றங்களுக்கும் அலைந்து திரியும் நிலையும் ஏற்பட்டுள்ளது.என தெரிவித்தனர்.

### *குடிநீர் பிரச்சனை*

ஒதுக்குப்புறமான ஒரு இடத்தில் இவர்கள் குடியமர்த்தப்பட்டு இருப்பதால் அவர்களுக்கு குடிநீர் பிரச்சனை பாரிய அளவில் இருக்கிறது.

ஏற்கனவே அரச காணியில் அமைக்கப்பட்ட பொது குடிநீர் கிணறு தனி நபரால் அடைக்கப்பட்ட வேலிக்குள் இருப்பதால் அவை அந்த மக்களால் பாவிக்கப்பட முடியாமல் அயல் வீடுகளுக்கு சென்று குடிநீர் தேவையை பூர்த்தி செய்து கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. கருங்காலி மோட்டைப் பகுதிக்கு நியமிக்கப்பட்ட கிராம சேவையாளர் பார்வையிட வருவதில்லை.

கிராம சேவையாளருக்கு நியமிக்கப்பட்ட உதவியாளர்கள் மூலம் தொடர்பு கொள்வதாகவும் இதனால் மக்களின் எந்த ஒரு பிரச்சினையையும் முன்னிலைப்படுத்தி தீர்வுகளை பெற்றுத் தருவதில்லை என்றும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

### *அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அந்த மக்களின் வேண்டுகோள்*

அரச சார்பற்ற நிறுவனங்கள் எமது மக்களுக்கு தேவையான சுய தொழில் முயற்சிகளுக்கும் வாழ்வாதாரத்திற்கும் தேவையான உதவிகளை செய்ய வேண்டும்.

குறிப்பாக மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்களுக்கும் சுய தொழில் முயற்சிக்காக நிறைய உதவிகளை செய்து வருவதை நாங்கள் அறிவோம். எனவே எமது கிராமத்தில் உள்ள வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மக்களுக்கு சுய தொழில் முயற்சிகளுக்கு தேவையான உதவிகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்கள்.

### *மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுக்கும் மக்கள்*

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல் ஒரு பெண் என்பதால் இங்கு பெண்கள் படும் துயரத்தை அவர் நன்கு அறிவார் என்று நாங்கள் நம்புகிறோம். யுத்தம் முடிந்து இத்தனை வருடங்களாக எமது வாழ்வாதார பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் நீண்டு செல்கிறது. இதுவரை எந்த ஒரு அரச அதிகாரிகளும் எமது பிரச்சினைகளை தீர்த்து வைக்க முன் வரவில்லை.எமது மாவட்டத்திற்கு புதிதாக வந்திருக்கும் நீங்கள் எமது பிரச்சினைகளை தீர்த்து வைப்பீர்கள் என்று நாங்கள் பரிபூரணமாக நம்புகின்றோம்.

அந்த வகையில் எங்களுக்கு மிகவும் அவசரமாக தீர்த்து வைக்க வேண்டிய பிரச்சனைகளான அடாத்தாக தனிநபர் பிடித்து வேலியிட்டு பற்றையும் காடுகளும் வளர்ந்துள்ள பெறுமதிமிக்க அரச காணியை தனி நபரிடம் இருந்து மீட்டு அங்குள்ள ஏழை மக்களின் சுய தொழில் முயற்சி களுக்காகவும், சொந்தமாக வீடு காணி இல்லாத குடும்பங்களுக்கு பகிர்ந்தளிப்பு செய்யுங்கள்.

அத்துடன் எமக்கான போக்குவரத்து பாதை மற்றும் குடிநீர் பிரச்சினை உட்பட எமது அடிப்படைத் தேவைகளை விரைவாக தீர்த்து வைக்க வேண்டும் என்று மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள கருங்காலி மோட்டை மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.என அவர்கள் தெரிவித்தனர்.

**- மன்னார் நிருபர் (28-10-2021)**

சினிமா

# ஓட்டுநரை நினைவுகூர்ந்து நன்றி தெரிவித்த ரஜினி!

திரைத்துறையின் உயரிய விருதான தாதா சாகேப் பால்கே விருதைப் பெற்ற ரஜினி, ஓட்டுநரை நினைவில் வைத்து, அவருக்கு நன்றி தெரிவித்தார். திரைத்துறையில் மிக உயரிய விருதாக கருதப்படும் தாதா சாகேப் பால்கே விருதைப் பெற்றார் நடிகர் ரஜினிகாந்த். இதுவரை எத்தனையோ விருதுகள் வாங்கியிருந்தாலும், இந்த விருது ரஜினிக்கும், உலகம் முழுவதும் இருக்கும் அவரது ரசிகர்களுக்கும் ரொம்பவே ஸ்பெ‘ல்!

தமிழ் சினிமாவில் இதுவரை நடிகர் சிவாஜி கணேசனும், இயக்குநர் பாலச்சந்தரும் மட்டுமே இந்த தாதா சாகேப் பால்கே விருதைப் பெற்றுள்ளனர். அந்த வகையில் இந்த உயரிய விருதைப் பெற்ற மூன்றாவது நபர் ரஜினி தான். கடந்த மார்ச் மாதம் இவ்விருது அறிவிக்கப்பட்டு, டெல்லியில் இன்று வழங்கப்பட்டது.

விருதைப்பெற்ற ரஜினிகாந்த் திரைத்துறையில் உயரிய விருதான தாதா சாகேப் பால்கே விருதைப் பெறுவது மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாக தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர், இந்த விருதை தனது குரு இயக்குநர் பாலச்சந்தருக்கு அர்ப்பணிப்பதாகக் குறிப்பிட்டார். அதோடு தந்தை ஸ்தானத்தில் இருந்து தன்னை வளர்ந்த தனது அண்ணன் சத்யநாராயணா கெய்க்வாட், கர்நாடகாவில் பேருந்து நடத்துனராக இருந்தபோது, தனக்குள் இருந்த திறமையை அடையாளம் கண்டு, தன்னை நடிக்க அனுப்பி வைத்த பேருந்து ஓட்டுநரும், நண்பருமான ராஜ் பகதூர், தனது படங்களின் இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், தன்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தமிழ் ரசிகர்களுக்கு இவ்விருதை உரித்தாக்குவதோடு தனது நன்றியையும் தெரிவித்துள்ளார்.



# “ஓரே நாடு ஓரே சட்டம்” தமிழ்க் கட்சித் தலைவர்கள் விடும் அறிக்கைகள் உரிய பயன் தருமா?

(11ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு நாட்டின் மத, கலாசார, பிரதேச அடிப்படைகளில் வாழ்கின்ற தனித்துவமான குழுமங்களின் தனித்துவங்களைப் பேணும் வகையில், அவர்கள் பின்பற்றுகின்ற, அவர்களுக்கே உரித்தான சட்டங்கள், நடைமுறைகள், வழக்காறுகள் முதலானவற்றை தனியார் சட்டம் எனப்படும்.

பல்லின மக்களைக் கொண்ட இலங்கை நாட்டில் நடைமுறையில் உள்ள தனியார் சட்டங்களைப் **(Personal Laws)** பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. கண்டியச் சட்டம் - இது கண்டி வாழ் சிங்கள மக்களுக்கு மட்டுமான தனியார் சட்டமாகும்.

2. தேச வழமைச் சட்டம் - இது யாழ்ப்பாணத் தமிழருக்கு மட்டும் உரித்தான சட்டம். மட்டக்களப்புத் தமிழருக்கு இது பொருந்தாது.

3. முஸ்லிம் தனியார் சட்டம் - முஸ்லிம் தனியார் சட்டம் என்பது இஸ்லாத்தின் சட்ட திட்டங்களையும் கொண்ட ஒரு சட்டத் தொகுப்பு.

முஸ்லிம் தனியார் சட்டத்தை மட்டுமல்ல யாழ்ப்பாண தேசவழமைச் சட்டத்தையும் திருத்த சிங்கள - பவுத்த பேரின சக்திகள் முயற்சி செய்து வருகின்றன.

வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்கள் வருவதற்கு முன்னரேயே தேச வழமைச் சட்டம் யாழ்ப்பாணத்தில் வழக்கில் இருந்தது. அப்போது அது எழுத்தில் இருக்கவில்லை. போர்த்துக்கேயரை(கிபி 1619 - 1658) அடுத்து ஒல்லாந்தர் (கிபி 1658 -1796) யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தபோது தேசவழமைச் சட்டம் 1707 ஆம் ஆண்டு எழுத்தில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. தேச வழமை மன்னாரிலும் முல்லைத்தீவிலும் செல்லுபடியாகிய அதேவேளை, திருகோணமலை-யையும் மட்டக்களப்பையும் உள்ளடக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.
கண்டியையும் அதைச் சூழவுள்ள பிரதேசங்களையும் வாழ்விடமாகக் கொண்ட சிங்களவர்களுக்கென சிறப்பு கண்டியச் சட்டமும் இருக்கிறது.

தேச வழமையில் சொத்தும் காணியும் தொடர்பான சட்டமே தென்னிலங்கை பேரினவாத அரசியல் சக்திகளின் கடுமையான தாக்குதலுக்கு இலக்காகி வருகி-றது. தேச வழமைச் சட்டத்தின் கீழ் விற்பனைக்குரிய ஒரு சொத்தை பிறத்தியார் வாங்கும் உரிமையைத் தடுக்கப்பட்டுள்ளது. ஒரு தமிழர் தென்னிலங்கையில் காணி வாங்கத் தடையில்லை ஆனால் சிங்களவர் வட இலங்கையில் காணி வாங்க தேசவழமைச் சட்டம் பேரளவு தடையாக இருக்கிறது என்பதே அவர்களது வாதமாகும்.

ஒரே நாடு ஒரே சட்டம், காலப் போக்கில் ஒரே மதம், ஒரே இனம் என்ற கோட்பாட்டுக்கு இட்டுச் சென்றால் அதையிட்டு வியப்படையத் தேவையில்லை.

ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் நாற்பதுகளில் இருந்து முடுக்கிவிடப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினால் கிழக்கு மாகாணத்தின் குடிப்பரம்பல் தலைகீழாக மாறியுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்கள் இரண்டாம் இடத்துக்கும் அம்பாறையில் மூன்றாவது இடத்துக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.
வெலி ஓயா (மணலாறு) குடியேற்றத்திட்டம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் தனி பிரதேச செயலாளர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. நூறு விழுக்காடு தமிழர்கள் வாழ்ந்த கொக்கிளாய் , கொக்குத்தொடுவாய் இன்று சிங்களவர்களது வாழ்விடமாக மாறிவிட்டது. வெலி ஓயா பிரிவில் 3,336 குடும்பங்கள் (11,189 பேர்கள்) வாழ்கிறார்கள்.

தமிழர்களின் மரபுவழி வாழ்விடங்களில் இன விகிதாசாரத்தை குறைக்கும் வகையிலும் சிங்கள குடியேற்றங்களை அதிகரிக்கும் வகையிலும் அரசாங்கம் செயற்பட்டு வருகிறது. **(http://nakkeran.com/index.php/2019/09/12/tamil-eelam-territory-is-getting-swallowed-by-sinhala-colonization/)**

2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னர், வவுனியா வடக்கு, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களின் எல்லையோரமாக இருந்த சுமார் 1,000 ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டு, இராணுவத்தின் ஒத்துழைப்புடன் சிங்கள குடியேற்றங்கள் இடம்பெறு வருவருகின்றன. குடியேற்றத்தை முடுக்கிவிட வவுனியா, மன்னார் மாவட்டங்களின் மாவட்ட செயலாளராக சிங்களவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மதவாச்சியில் உள்ள 1,330 சிங்களக் குடும்பங்களை வவுனியா வடக்கு பிரிவில் இணைத்து இன விழுக்காட்டை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட யாழ்ப்பாண பனை அபிவிருத்திச் சபைக்கு முதல்முறையாக ஒரு சிங்களவர் அதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். சபையை முழுமையாக சிங்களமயமாக்கும் நடவடிக்கைகள் விரைவு படுத்தப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்திலேயே இயங்கிய அதன் கணக்காய்வு பிரிவு கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளது. நிர்வாகப் பிரிவையும் கொழும்புக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

மொத்தத்தில் கிழக்கைப் போல் வடக்கையும் சிங்களப் பெரும்பான்மை பிரதேசமாக மாற்றுவதில் இராசபக்ச அரசு முனைப்போடு செயல்படுகிறது. அதனை நடைமுறைப்படுத்தும் நோக்கோடுதான் கோட்டாபய இராசபக்ச இந்த “ஓரே நாடு ஓரே சட்டம்” என்ற செயலணியை உருவாக்கியுள்ளார்.

சிறுபான்மையினரின் மத, கலாச்சார மற்றும் மொழியியல் உரிமைகள் உட்பட அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு எண்ணற்ற சர்வதேச மரபுகள் மற்றும் தீர்மானங்கள் உள்ளன, அவை பல்வேறு நாடுகள் அல்லது கண்டங்களை மட்டுமல்ல உலகளாவிய உரிமைகள் ஆகும்.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் விடுத்துள்ள அறிக்கையில் ”இவ்விதமான தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் நாட்டினுடைய ஒற்றுமை, சமத்துவம், நீதி, கௌரவம் போன்ற கருமங்களில் மிகவும் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தும்” எனப் பொருள்பட ஒரு காட்டமான அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

சிறிலங்கா ஒரு இறைமையுள்ள சுதந்திரமான நாடு. எமது நாட்டின் உள்விவகாரங்களில் ஐநாம உரிமை பேரவை தலையிடுவதை அனுமதிக்க மாட்டோம் என வெளிவிவ-கார அமைச்சர் ஜி.எல். பிரீஸ் வெட்டொன்று துண்டிரண்டாகச் சொல்கிறார்.

அப்படியென்றால் தலைவர் சம்பந்தன் உட்பட மற்றும் தமிழ்க் கட்சித் தலைவர்கள் விடும் அறிக்கைகள் உரிய பயன் தருமா?




இலங்கை செய்திகள்
Sri Lanka News

# நவம்பர் 21ம் திகதியை தமிழீழத் தேசியக் கொடி நாளாக அறிவித்தது நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

தமிழீழத் தேசியக்கொடி நாளாக நவம்பர் 21ஐ நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் பிரகடனப்படுத்தி அறிவித்துள்ளது.

24-10-2021 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றிருந்த சிறப்பு அரசவை கூட்டத்தின் போது நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்களினால் இதற்கான தீர்மானம் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்றப்பட்ட தீர்மான நகலில் தெரிவிக்கப்பட்டதாவது,

**நவம்பர் 21**
**தமிழீழத் தேசியக்கொடி நாள்**
**- முரசறைவு -**

- ஈழத்தமிழ் தேசத்தின் தேசியத்தை தமிழீழத் தேசியக்கொடி வெளிப்படுத்துவத்தைக் கருத்தில் கொண்டு

- ஈழத்தமிழ் தேசத்தின் பண்பாட்டை, தமிழீழர் தேசியக்கொடி பிரதிபலிப்பதைக் கருத்தில் கொண்டு

- ஈழத்தமிழ் தேசத்தின் இறைமையை தமிழீழத் தேசியக்கொடி எடுத்தியம்புவதை நினைவில் நிறுத்தி

- நாளை மலர இருக்கும் தமிழீழத்தின் பொதுச் சின்னமாக தமிழீழத் தேசியக்கொடி மிளிர்வதை கருத்தில் கொண்டு

- தமிழீழத் தேசிய பண்பாட்டுக் கோவையில் நாடு உருவாவதற்கு முன்பே நாட்டு மக்கள் முறைப்படி கொடிவணக்கம் செலுத்தி கொடிவணக்க பாடலை இசைத்து முதன்மை விழாக்களை, நிகழ்ச்சிகளை நடாத்துவத்தன் மூலம் தமிழீழ மண் தேசியக் கொடி வரலாற்றில் ஒரு புதுமை சேர்த்திருக்கின்றது என்ற கூற்றை கவனத்தில் எடுத்துக்கொண்டு

- தமிழீழத் தேசியக்கொடி மாவீரர்களின் குருதியால் நெய்யப்பட்டது என்பதையும் கருத்தில் கொண்டு

- தமிழீழத் தேசியக்கொடி, சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத்தை அமைப்பதில் எமக்குள்ள உறுதியை உலகிற்கு பறை சாற்றுவதை கருத்தில் கொண்டு

- கொடி வணக்கம் தேசப்பற்றுக்கு (patriotism) வலுச்சேர்க்கும் என்பதையும் கருத்தில் கொண்டு

- நாளை மலரவிருக்கும் தமிழீழம் ஐக்கிய நாடுகள் சபை உட்பட அனைத்துலக பரப்பில் இறைமையினதும் சமத்துவத்தினதும் அடிப்படையில் மற்றைய நாடுகளுடன் நிமிந்து நிற்கும் என்ற செய்திக்கு கட்டியம் கூறுவதாக தமிழீழத் தேசியக்கொடி பறப்பதை கவனத்தில் கொண்டு

- எமது சுயநிர்ணய உரிமையையும், சுதந்திரத்தையும், இறையாண்மையையும் (to realize our sovereignty and L right to self determination) எமது போராட்ட வரலாற்றை இரண்டாம் தலை முறைக்கும் எதிர்கால சந்ததிகளுக்கும் எடுத்துச் செல்லும் சாதனமாக தமிழீழ தேசிய கொடி திகழ்வதை கருத்தில் கொண்டும்

- தாயகத்திலும் புலத்திலும் பரவி வாழும் ஈழத்தமிழர்களை ஒன்றுபடுத்தும் உன்னதமான கருவியாக தமிழீழத் தேசியக்கொடி திகழ்வதை கருத்தில் கொண்டும்

- ஓகஸ்ற் 31ம் தேதி, பிரித்தானிய உள்துறை அமைச்சால் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தடை தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடிக்கும், தமிழீழத் தேசியக்கொடிக்கும் உள்ள வேறுபாட்டை குறிப்பதின் மூலம், தமிழீழ தேசிய கொடியின் தனித்துவத்திற்கு கிடைத்த உள்ளடக்கமான அங்கீகாரத்தை (implicit recognition) கவனத்தில் எடுத்துக்கொண்டு

- தமிழீழத் தேசியக் கொடி பயன்பாட்டுக்கோவையில் குறிப்பிட்டவாறு எமது தேசியக்கொடியை மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை ஆகிய நான்கு நிறங்கள் அழகுபடுத்துகின்றன. தனிப்பாங்கான தேசிய இனமான தமிழீழத் தேசிய இனம் தனது சொந்த மண்ணில் தன்னாட்சி அமைத்துக்கொள்ள விழைவது அதனது அடிப்படை அரசியல் உரிமையும் மனித உரிமையுமாகும். தமிழீழ மக்கள் நடத்துகின்ற தேசிய விடுதலைப் போராட்டம் அறத்தின்பாற்பட்டது, நியாயமானது என்பதையும் தமிழீழத்தேசம் எப்பொழுதும் அறத்தின் பக்கம் நிற்குமென்பதையும் மஞ்சள் நிறம் குறித்து நிற்கிறது என்பதை கருத்தில் கொண்டு

- தமிழீழத் தேசியக்கொடி பயன்பாட்டுக்கோவையில் குறிப்பிட்டவாறு தேசிய விடுதலை பெற்ற தமிழீழத் தனியரசை அமைத்துவிடுவதால் மட்டும் முழுமையான விடுதலையைப் பெற்றுவிட்டதாகக் கொள்ளமுடியாது. தமிழீழக் குமுகாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்படவேண்டும். சாதிய, வகுப்பு முரண்பாடுகள் அகற்றப்படவேண்டும். பெண்ணடிமைத்தனம் நீக்கப்படவேண்டும். இதற்குக் குமுகாய அமைப்பிற் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும். சமன்மையும் சமதருமமும் குமுகாய நீதியும் நிலைநாட்டப்படவேண்டும். இத்தகைய புரட்சிகரமான குமுகாயமாற்றத்தை வேண்டிநிற்கும் எமது அரசியல் இலக்கைச் சிவப்பு நிறம் குறியீடு செய்கின்றது என்பதையும் கருத்தில் கொண்டு

- தமிழீழத் தேசியக்கொடி பயன்பாட்டுக்கோவையில் குறிப்பிட்டவாறு விடுதலைப்பாதை கரடுமுரடானது சாவும் அழிவும் தாங்கொணாத் துன்பங்களும் நிறைந்தது. இவற்றைத் தாங்கிக் கொள்ளவும் விடுதலையடைந்தபின் ஏற்படப்போகும் நெருக்கடிகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு தேசத்தைக்கட்டியெழுப்பவும் பாதுகாக்கவும் உருக்குப் போன்ற உறுதியான உள்ளம் வேண்டும் அசையாத நம்பிக்கை வேண்டும்




தளராத உறுதி வேண்டும். இவற்றைக் கறுப்பு நிறம் குறித்துக் காட்டுகின்றது என்பதையும் கருத்தில் எடுத்து

- தமிழீழத் தேசியக்கொடி பயன்பாட்டுக்கோவையில் குறிப்பிட்டவாறு விடுதலை அமைப்பும் மக்களும் தலைவர்களும் தூய்மையையும் நேர்மையையும் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை வெள்ளை நிறம் குறித்து நிற்கிறது என்பதையும் நினைவில் நிறுத்தி

- தமிழீழத் தேசியக்கொடி பயன்பாட்டுக்கோவையில் குறிப்பிட்டவாறு எமது தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் உருவாக்கப்பெற்ற புலிக்கொடி 1977 ஆம் ஆண்டு முதல் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கொடியாக இருந்துவருகிறது. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கொடியிலுள்ள எழுத்துக்கள் நீக்கப்பெற்ற கொடி தமிழீழத் தேசியக்கொடியாகத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் 1990 ஆம் ஆண்டு அறிவிக்கப்பெற்றது. தமிழீழ விடுதலைப் போரில் வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவுகூர்ந்த இரண்டாவது மாவீரர் நாளில் அதாவது 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் நாள் முதல் தடவையாகத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் அவரது பாசறையில் ஏற்றிவைக்கப்பெற்றது என்பதையும் நினைவில் நிறுத்தி

- நவம்பர் மாதம் 21 ஆவது நாளை, தமிழீழத் தேசியக்கொடி நாளாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அசரவை ஒக்ரோபர் 24ம் நாளன்று முரசறைகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கனடா உதயன் பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டில் மலேசியா வாழ் தமிழ்க் குழந்தைகளின் நாவன்மை ஆற்றலை மேம்படுத்தும் நிகழ்ச்சி

கனடா உதயன் பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டில் உதயன் நிறுவனம் தொடர்ச்சியாக நடத்தி வரும் பல்வேறு கலை இலக்கிய மொழி சார்ந்த நிகழ்ச்சிகளில் மலேசியா வாழ் தமிழ்க் குழந்தைகளின் நாவன்மை ஆற்றலை மேம்படுத்தும் இந்த நான்காவது அரங்கிற்கு கனடா வாழ் கலை இலக்கிய அன்பர்கள் மற்றும் தமிழ்ப் பெற்றோர் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்- கனடிய நேரம் 31-10-2021 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பம்.

---

**கனடா உதயன் பத்திரிகையின் வெள்ளி விழாக்குழு**



# கனடாவில் ஒரே நாளில் ஒரே மேடையில்

அதிபர் பொ. கனகசபாபதி அரங்கில்

POWERED BY VIBRANT HOSPITALITY GROUP Shankar Nallathamby

Presenting Sponsor Remitbee Online Money Transfer

## உதயன் வெள்ளி விழாவும் நண்பன் WORLDWIDE விருது விழாவும்

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக... Tasty தமிழா

Covid-19 கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப அழைக்கப்படுவோரின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படும்

30.10.2021 சனிக்கிழமை மாலை 6.00 மணி தொடக்கம்

கலை நிகழ்ச்சிகள், இசை, விருதுகள் வழங்கல், இராப்போசன விருந்து

Netwyn.Place Auditorium
10. Thornmount Drive
Scarborough ON, M1B 3J4

அனுமதிச் சீட்டுகளுக்கு 416 732 1608 அல்லது 647 762 9512


An Authentic Tamil Take-out & Catering Restaurant — Spice Land

BUY - SELL - INVEST - LEASE
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Rajeef Koneswaran, Manager (416) 282-4444
1265 Morningside Ave Suite 203, Toronto, ON M1B 3V9

Sugshe Finance Canada Inc. Sughsi Group of Companies
Ganesan Sugumar Tel: 416 363 2624
220 Duncan Mills Rd, Unit #83, North York, ON. M3B 3J5

Siva & Joy Real Estate Team 416-267-9700
Homelife/Future Realty Inc, Brokerage

NO.1 NORTH AMERICAN PROFESSIONAL SECURITY COMPANY
CAMSONICS — PROTECT YOUR HOME AND BUSINESS ANY TIME ANY WHERE IN THE WORLD.
WE ONLY DO PROFESSIONAL INSTALLATIONS AND CONCEAL WIRES IN THE ATTIC OR BEHIND THE WALLS.
CAMSONICS :- 905 216 8966

PACE LAW — FOR 40 YEARS — SERIOUS INJ
DESMOND & POORANI 647.968.7059
PACE LAW SERIOUS INJURY LAWYER
191 The West Mall Suite 1100, Toronto, ON M9C 5K8, Canada
Phone: 1-877-236-3060 · Fax: 416-236-1809, info@pacelawfirm.com

Ethos COMMUNICATIONS — Diversity Demystified
We wish Uthayan Publishers Team, all the very best as they celebrate 25 glorious years in Publishing and Community Service.

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel 204-7 Eastvale Drive, Markham ON L3S 4N8
416.568.4301, 905.471.4050

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran, Tax Consultant
Tel: 647-344-6600

Residential & Commercial Real Estate Services
பாலா லோகன் 647-447-1562
Bala Logendralingam RE/MAX COMMUNITY

"Invest Today Harvest Tomorrow"
Filona Thushyanthi, Real Estate Agent 647-606-1009

AGA BEAUTY LEARNING ACADEMY & SPA
Sasi Naren 647.716.5252
3 LOCATIONS TO SERVE YOU
A14, L3 - 2900 Markham Road, Scarborough ON M1X 0C8

YOUR HOME SOLD GUARANTEED AT THE PRICE YOU WANT, OR I'LL BUY IT
416-858-9633 KAYAN

MORTGAGE ALLIANCE — RIGHT TEAM
Krishna Punniyam, Mortgage Agent
Cell: (416) 710-9150
krishna@rightteam.ca

Kailain Thillainathan, Sales Representative 647-668-8276
Ragu Thillainathan, Sales Representative 416-629-5800

CANADIAN HOME APPRAISAL INC.
S.K.Bales, President
Bus:- 416- 438- 2200
Cell:- 416- 801- 3219
Email:skbales@hotmail.com

Award Winning Team
Amal 416.829.9993
Abi 416.732.1810
Homelife /Future Realty Inc., Brokerage

JRB universal inc
R.R.Rajkumar 647-289-6164

SANTHA — FULL SERVICE FACILITIES OF GENERAL CONTRACTORS
Santha Tel: 416-200-5470
info@santha.ca
www.santha.ca

Sharuthie Windows
1755 Bough Beeches Blvd, Mississauga, ON. L4W 2B9
Tel: 416 844 4373

அம்மா AMMA PAWN BROKER
1.0% 1.5%
416-757-0034 416-994-3861
105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com

Chapel Ridge
Christeen Seevaratnam - 416-258-6759
Serving the Tamil Community of Greater Toronto
www.chapelridgefh.com

Debt Problems ?
V. SRI
CREDIT SOLUTION CENTRE
416.439.0224

Mortgage Architects
Sabesan Sivasubramaniam, Mortgage Agent
Dir: 416.834.3226

HONDA Formula Honda — Where You're Treated like Family.
2240 Markham Road, Scarborough
1-888-496-7156 www.formulahonda.com

Buy · Sell · Invest
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

TECHSOURCE Computer & Electronics Liquidator
TEL: (416)757-9111
EMAIL: SCARBOROUGH@TECHSOURCECANADA.CA
1260 KENNEDY RD, SCARBOROUGH, ON M1P 2L4

பஞ் சொக்கலிங்கம் வீடு விற்க 416.786.2463 416.PUNCH ME RE/MAX

Keith Sanmugathas — Sun Sanmugathas
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
416-666-9464 416-291-0005

சங்கர் அன் கோ.
SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE, EAST UNIT # 6 SCARBOROUGH ON (Kennedy & Eglinton)
Tel: 416 759 5100 Fax: 416 759 4916


TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY
டாக்டர் திருமதி வசந்தகுமார் Acupuncture Specialist
5200 Finch Ave East #313 Scarborough (Middelfield & Finch)
416-754-4024

ANGELS FASHION CENTRE — Majestic City Mall
Sarees & Jewellery
Tel: 416-854-5622
Unit: G3 2900 Markham Road Scarborough ON, M1X 0C8

Designs 2 Prints Ltd — Design Solutions For Any Media
Logos, Flyers, Business Cards, Posters, Banners, For sale sign, Lawn sign, Bag Sign, specially Social media ad, website designing and More...
Prabagar - 647.858.2290 / 416 292 4999
www.designs2prints.com · info@designs2prints.com
2900 Markham Road, Unit G1, Scarborough, ON M1X 0C8

Seithy.com · east FM 102.7 · ஈழநாடு · GTA தமிழ் · Easy 24 News


HSB CANADA
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
Diwali
FULL DAY BUFFET
(ONLY WALK-IN)
LUNCH BUFFET MENU
(11:30 AM TO 4:00 PM)
MIX VEG SAMBAR | CAULIFLOWER RASAM | VEN POOSINI KOOTU | DRUMSTICK VATRAL KULAMBU | BUN ROAST PORIYAL | BEANS PORIYAL | BISIBELABATH | WHITE RICE CURD | CARROT & CABBAGE RAITHA | SOYA BIRIYANI KADAI PANEER | APPALAM | ONION VADA PINEAPPLE KESARI | GAJAR HALWA | TIFFIN SAMBAR WHITE & GREEN CHUTNEY | CHANNA MASALA PLAIN DOSA | POORI | DRY CHILLIES | PICKLE
DINNER BUFFET MENU
(5:00 PM TO 10:00 PM)
MIX VEG SAMBAR | CAULIFLOWER RASAM | WHITE RICE | CURD JEERA PULAO | SOYA VEGETABLE BIRIYANI | DHAL BUTTER FRY PANEER BUTTER MASALA (JAIN) | NAAN | GOBI MASALA | SWEET CURD VADA | BISIBELABATH | MASALA PAPAD | BOONDI RAITHA GOBI 65 | JILEBI | RICE KHEER | DRY CHILLIES | TIFFIN SAMBAR PICKLE | PLAIN DOSA | WHITE & GREEN CHUTNEY
THURSDAY, NOVEMBER 4
ONLY AT SCARBOROUGH
Order Online: www.saravanabhavan.ca
SARAVANAABHAVANCANADA
SCARBOROUGH: 416 293 7755
SCARBOROUGH: WOODSIDE SQUARE, FINCH AND MCCOWAN INTERSECTION.
1571 SANDHURST CIRCLE, UNIT 153, SCARBOROUGH,
ON. M1V 1V2


இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!
Happy Deepavali from
the Ontario NDP Caucus!
Andrea Horwath
Leader of the
Official Opposition
Ontario NDP
NPD de l'Ontario


Hon.
MARY NG, MP
MARKHAM – THORNHILL
905-479-8100
Mary.Ng@parl.gc.ca
16 Esna Park Drive, Unit 107
Markham, ON L3R 5X1
Happy Diwali
மகிழ்ச்சியான தீபாவளி
வாழ்த்துக்கள்

Greater Toronto

Shine On

# Multi-Employer

# Virtual Job Fair

## Wednesday, Nov 3, 2021
## 11:00 am - 4:00 pm

For more info call: 416-335-5490 or 416-609-9622

## Positions Available

- Recruiter
- Sales Reps.
- Pre-Loader
- Packers, Material Handler, Compounder
- Cleaners
- Receiving Clerk Maintenance Technician
- Crew/Team Member, Kitchen Helper
- Heavy Lifter/ General Labour
- Registered Practical Nurse
- Order Assembly, Stocker, Machine Operator
- Early Childhood Educator
- IT Analysist

- Call Centre Reps.
- Package Handler
- Seasonal Helper
- Sanitation Workers
- Panel Builders
- Lab Technician
- Order Assembly, Stocker
- Baker & Overnight Baker
- Personal Support Workers
- Cashiers, Replenishment
- Merchandising
- Business Development Officer
- Early Childhood Assistant
- Business Development Officer

- Customer Service Reps.
- Local Sorter
- Drivers, Drivers Helpers
- Forklift Operators
- Shipping Clerk
- Estimating Specialist
- Security Guards, Mobile Patrol, Concierge
- Personal Banking Associate
- Drive Thru, Dishwasher Host, Garnisher Line Cook/Cooks, Barista
- Warehouse Manager & Assistant
- Fleet Mechanic
- Framing Department Manager
- Snow Removal &Landscaper

**Register in advance for the 11-1PM meeting:**

https://zoom.us/meeting/register/tJMqduiorzItH9GbspNnAHd3X0jfj4FQXP_L

**Register in advance for the 2-4PM meeting:**

https://zoom.us/meeting/register/tJclce-vqzorHtVk6kQNY0NstpNPKYFLJ3EG

OPTIMA Communications International Inc. · REGAL Security · Connect6 Group · SinglePoint · Tim Hortons · Maple Leaf · Securitas · Harvey's · UPS · M'ZAAR · EVVIVA · Kelly Services · World One Import Inc. · Michaels · Zedd customer solutions · Swiss Chalet · Elite Residential Concierge · ASP · 4 Grounds Landscaping (647) 601-5983 · Crane · Burger King · Arcadia home care · Carefirst · ZeMaas · amazon · Prologix · Paragon Security · TTM Technologies · AGF Rebar · Innunco · aroma espresso bar · Rex Pak Limited · Chicken Hans · TD · Canadian Tire


Happy Diwali
இனிய
தீபாவளி
வாழ்த்துக்கள்
ONTARIO
Aris Babikian
MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT
Constituency Office:
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
Tel: 416-297-6568 Email: aris.babikianco@pc.ola.org

# சுந்தரமூர்த்தி (MS மூர்த்தி, J.P.) அவர்களின் முதலாண்டு நினைவுப் பதிவு



ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்து மூன்றில் யாழ் - சண்டிலிப்பாய் கிராமத்தில் முத்து - வள்ளியம்மை தம்பதிகளுக்கு இளைய மகனாக பிறந்து பள்ளிப்படிப்பை முடித்து படிப்படியாக ஒரு சிறந்த தொழிலதிபராக உயர்ந்து தனது எண்பத்தேழாவது வயதில் இயற்கையெய்திய திரு.முத்து சுந்தரமூர்த்தி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தொடர்பான பதிவுகள்.

திரு.சுந்தரமூர்த்தி அவர்கள் தனது இரண்டாம் நிலை பள்ளிப்படிப்பை தொடர்ந்து கொண்டிருக்கையிலேயே அவரது இருபதாவது வயதில் தொழில்துறை மீதிருந்த நாட்டத்தால் இரும்புவேலை சம்பந்தமான கடைச்சல் மெசின் தொழிலை ஆர்வமுடன் ஒரு நல்ல ஆசானிடம் கற்றுத் தேர்ந்தார். முழு அனுபவம் கிடைத்ததும் ஆசானின் ஆசியுடன் தனது இருபத்தைந்தாவது வயதிலேயே "பைனல் ரேணிங் வேக்ஸ்" என்ற ஸ்தாபனத்தை யாழ். கஸ்தூரியார் வீதியில் (வின்ஸர் திரையங்கிற்கு முன்பாக) ஆரம்பித்தார்.

பையல் ரேணிங் வேக்ஸ் ஒரு முழு தொழிற்சாலையாக அப்போதைய காலகட்ட தேவைகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது எனலாம். அறுபது, அறுபத்தைந்தாம் ஆண்டுகளில் இயந்திரக் கருவி திருத்த வேலைகளுக்கு இந்த தொழிற்துறை மிக அத்தியாவசியமாக இருந்தது. அது மட்டுமில்லாது பல பேருக்கு தொழில் வாய்ப்புக்களையும் முறையான பயற்றுவித்தலையும் கொடுத்ததன் மூலம் அவர்கள் தனியாக தொழில் தொடங்க முன் உதாரணமாக இருந்தார்.

இவர் தொழிற்சாலையோடு M.S.M. இண்டஸ்றீஸ், M.S.R. காட்வேயர்ஸ் என்று இதர பல தொழில்களிலும் கால்பதித்தார். தனது முப்பதாவது வயதில் தனிய தொழிற்துறையோடு நின்றுவிடாமல் மன்னார் பட்டின சபை கலை அரங்கில் "லிபேர்டி சினிமா" திரையரங்கை சுமார் மூன்று வருடங்கள் வெற்றிகரமாக நடாத்திவிட்டு யாழ். தொழிற்சாலையை கவனிக்கும் பொருட்டு இணுவிலில் "காலிங்கன்" திரையரங்கை பங்காளராக நடாத்தி வந்தார்.

இந்த காலகட்டத்தில் எழுபத்திமூன்றாம் ஆண்டு தனது வதிவிடமான மானிப்பாய் என்ற ஊருக்கும் ஒரு தியேட்டரை நிறுவ பலத்த போராட்டங்கள், எதிர்ப்புகள், இடையூறு களுக்கும் மத்தியில் 'வெஸ்லி' சினிமாவை இன்னோர் பங்காளருடன் தொடங்கி அதிலும் வெற்றி கண்டார்.

திரு.சுந்தரமூர்த்தி அவர்கள் தொழில் துறைகளுடன் மட்டும் நின்றுவிடாமல் சமூக சேவைகளிலும் தம்மை ஈடுபடுத்தி வந்தார். இவர் மானிப்பாய் கிராம சபையில் பதினொரு ஆண்டுகள் உபதலைவராகவும் சண்டிலிப்பாய், பனம் பொருள் அபிவிருத்தி சபையில் சில வருடங்கள் தலைவராகவும் இருந்தார். சமூக ஏற்றத்தாழ்வு களை அகற்றுவதற் கும் சமத்துவத்தை நிலைநாட்டுவ தற்கும் அயராது பாடுபட்டார். அதன் காரணமாக கல்வி



கற்க வசதி அற்ற பல பிள்ளைகளுக்கு தளபாடங்கள், உபகரணங்களுடன் அவர்கள் உயர் கல்வி கற்க பேருதவியாக இருந்தார். அடிநிலை மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கும் அயராது பாடுபட்டார்.

இந்த காலட்டத்தில் இலங்கை அரசாங்கத்தால் தொழிலபதிபர் சான்றிதழ் வளங்கப்பெற்று இவர் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் சமூகப் பொறுப்புக் களையும் சமூக சேவைகளையும் கருத்தில் கொண்டு சமாதான நீதவான் (J.P) நியமனம் வழங்கப்பட்டது.

அவரின் விடாமுயற்சியும் நுட்பமான அறிவுத்திறனும் இரும்புத் தொழிற்சாலை, தியேட்டர் தொழிற்துறை, விவசாயம் என்று நின்றுவிடாமல் நகைக்கடை வியாபாரத்திலும் முத்திரை பதித்தார். அறுபது, எழுபதுகளில் யாழில் கன்னாதிட்டி வீதியில் மட்டுமே அமைந்திருந்த நகைக்கடைகள் எண்பதுகளில் கஸ்தூரியார் வீதிக்கும் விஸ்தரிக்கப்பட்டு வரும்போது எண்பத்தி ஆறாம் ஆண்டில் பைனல் ரேணிங் வேக்ஸ் கட்டிடத்தை சுமார் எட்டு நகைக்கடை தொகுதியாக விஸ்தரித்து அதில் ஒரு நகைக்கடையை "ஈஸ்வரி யுவலர்ஸ்" என்ற பெயரில் இன்னொரு பங்காளருடன் சேர்ந்து ஆரம்பித்து நடத்தினார்.

எண்பது, தொண்ணூறுகளில் இனப்பிரச்சினை உச்சமாக இருந்த கால கட்டத்திலும் பல சவால்களுக்கு முகம் கொடுத்து, எதிர்கொண்டு, ஈடுகொடுத்து தொழில் துறையை விடாமல் தொடர்ந்து நடாத்தி வந்தார் என்பது அவரது மனத்துணிவுக்கும், மனோபலத்திற்கும் ஓர் சான்று. இவரது குடும்ப வாழ்வைப் பொறுத்தவரை ஆயிரத்து தொளாயிரத்து அறுபத்து ஒன்றில் தனது



27ஆவது வயதில் தவசி - காமாட்சி தம்பதிகளின் மூத்த மகள் புவனேஸ்வரியை மணம் முடித்து ஆறு பிள்ளைகளுக்கு தந்தையானார். பிள்ளைகளின் வளர்ப்பிலும் கல்விச் சிறப்பிலும் சிறந்த வழிகாட்டியாகவும் அதேவேளை கண்டிப்பும் கவனிப்பும் அரவணைப்பும் மிகுந்த ஒரு சிறந்த தந்தையாகவும் விளங்கினார்.

யாழ் கோட்டை முனீஸ்வரன் கோயிலில் இருந்த அதீத பற்றால், தான் தொழில் துறை ஆரம்பித்த 1958இல் இருந்து அந்த கோவிலை விஸ்தீரணிப்படுத்தியலும் புணருஸ்தாரணம் செய்ததிலும் இவர் வழங்கிய பங்கு மிக முக்கியமானது, பலரும் அறியாத துமாகும். நாட்டில் இனப்பிரச் சினையும் மொழிப் பிரச்சினையும் அதனால் ஏற்பட்ட இடப் பெயர்வுகளும் இல்லாதிருந்திருப்பின் இவரின் தனித்துவத்திற்கும் ஆளமை களுக்கும் இன்னும் பல சான்றுகள் அமைந்திருக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. முத்துவிற்கு ஒரு முத்தாக பிறந்து சுயம்பாக வளர்ந்து வாழ்ந்து மறைந்தும் இன்றும் எல்லோர் இதயங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் உயர்திரு. முத்து சுந்தரமூர்த்தி அவர்களின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.



தகவல்: திவ்வியராஜன்.


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக் கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும் உணவுப் பதார்த்தங்களும்.....
மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைன்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைன்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...
தமிழ் மக்களின் நம்பிக்யைப் பெற்ற வெற்றிகரமான வர்த்தக நிறுவனமாக விளங்கும் 'சங்கர் அன் கோ' தனது வாடிக்கையாளர்களில் எதிர்பார்ப்பு கருதி, எதிர்வரும் தீபாவளி பண்டிகைக்குத் தேவையான அனைத்து பொருட்களும் இறக்குமதி செய்துள்ளார்கள்.
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி நல் வாழதத்துக்கள்!
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# தமிழக மீனவர்கள் இரத்தம் சிந்தியதை தமிழ் தேசியக் கூட்டமைப்பு மறக்கலாமா?: தமிழ் இந்துவில் தீபச்செல்வன்

**- தீபச்செல்வன், ஈழக் கவிஞர், எழுத்தாளர்**

ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் இடையில் இருக்கும் உறவு என்பது வெறும் வார்த்தைகளால் ஆனதல்ல. ஈழமும் தமிழகமும் நிலத்தாலும் இனத்தாலும் தொப்புள்கொடி உறவைக் கொண்டிருக்கிறது. முன்னொரு காலத்தில் இந்த இரண்டு நிலங்களும் நிலத்தால் ஒன்றுபட்டிருந்தன என்று சொல்லப்படுகிறது. இன்றைக்கு கடலால் பிரிக்கப்பட்ட போதும் ஈழத்தை அண்டிய தமிழக நிலத்தின் பண்பாட்டிற்கும் ஈழத்திற்கும் ஒரு இடையறாத தொடர்பு காணப்படுகிறது. நில அமைப்பிலும்கூட தமிழகத்தின் குழந்தைபோல ஈழத்தின் அமைப்பு இருப்பதும் இரண்டு நிலங்களுக்கும் இடையலான நெகிழ்வைக் காட்டுகிறது.

ஈழத்தில் சிங்கள அரசினால் தமிழ் மக்கள் அழிக்கப்படுகிறபோதெல்லாம் தமிழகம் பெரும் சினம் கொண்டிருக்கிறது. இனவழிப்பை தடுக்கவும் தமிழர் உரிமையை மீளளிக்க வேண்டும் என்றும் தமிழகம் உருக் கொண்டிருக்கிறது. ஈழத்தில் நாங்கள் பேச முடியாது வாய்க்கள் கட்டப்பட்டு ஒடுக்கப்படுகின்ற காலத்தில் எங்கள் குரலாக தமிழகம் இருந்திருக்கிறது. ஈழம் என்ற விடயத்தில் மாத்திரம், தமிழகத்தின் கட்சிகள் வேறுபாடின்றி இணைந்து செயற்பட்டுள்ளன. தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஈழம் உணர்வுபூர்வமான இடத்தை வகிக்கிறது.

ஈழத்தில் நடந்தது இனப்படுகொலை என்றும் அதற்கு பன்னாட்டு விசாரணை நடத்த வேண்டும் என்றும் ஈழத்திற்கு வெளியில் இருந்து முதலாவது சட்டபூர்வமான தீர்மானத்தை தமிழக அரசு நிறைவேற்றியது வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வாகும். ஈழத்தில் நடந்த இனப்படுகொலை குறித்து அதிக உரையாடல்களும் கவனப்படுத்தல்களும் போராட்டங்களும் தமிழகத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அண்மையில் ஈழத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு போராட்டத்தை அறிவித்திருந்தது. எமது கடல்வளத்தை பாதுகாப்போம் என்ற தலைப்பில் நடத்தப்பட்ட அந்தப் போராட்டம் தமிழக மீனவர்களுக்கு எதிரானது என்பதுதான் பெருத்த துயரமானது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களும் கட்சி ஆதரவாளர்களில் சிலர் மாத்திரம் கலந்து கொண்ட அந்தப் போராட்டத்திற்கு மக்கள் ஆதரவு வழங்கவில்லை. ஏனென்றால் தாய் தமிழகத்திற்கு எதிராக இப்படியொரு போராட்டத்தை நடத்துவதை ஈழமக்கள் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்திருந்தால் இத்தகையவொரு போராட்டம் நடக்குமா?

உண்மையில் தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் இடையிலான கடல் என்பது தமிழக மக்களும் ஈழமக்களும் பாரம்பரியமாக பகிர்ந்து கொண்ட கடல் வளம். இன்றைக்கு சிங்கள அரசு ஈழத்தைக் கைப்பற்றிய பிறகுதான் ஈழக் கடலில் தமிழக மீனவர்கள் கடல் வளத்தை அபகரிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு எழுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தில் இந்தக் குற்றச்சாட்டு எழவில்லையே? தற்போதைய எண்ணிக்கையின் படி இதுவரையில் 800 தமிழக மீனவர்களை சிங்கள கடற்படை பலியெடுத்திருக்கிறது. அண்மையில்கூட ராஜ்கிரன் என்ற தமிழக மீனவர் கொல்லப்பட்ட நிலையில் ஈழத்தில் இப்படி ஒரு போராட்டத்தை தமிழ் தலைவர்கள் ஏற்படுத்தியமை வரலாற்றுத் தவறாகும்.

ஏனென்றால் தமிழகத்தையும் ஈழத்தையும் பிரித்துவிட வேண்டும் என்பதில் சிங்கள அரசு குறியாக இருக்கிறது. இதனால் கடலில் ஈழ-தமிக மீனவர்களுக்கு இடையில் பிரச்சினையை ஏற்படுத்துவதன் வாயிலாக இரண்டு விடயங்களை சாதிக்க சிங்கள அரசு முற்படுகிறது. ஈழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கும் தமிழக குரலை இல்லாமல் செய்வது ஒரு நோக்கம். இரண்டாவது இலங்கை அரசு மேற்கொண்ட தமிழக மீனவர் படுகொலையை நியாயப்படுத்துதல் இரண்டாவது நோக்கமாகும். இதில் துயரம் என்னவெனில் இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு துணைபோகும் வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் போராட்டம் முனைந்ததுவே.

தமிழக-ஈழ கடல் சார்ந்த சிக்கல்கள் இருந்தால் அதனை தமிழக மற்றும் வடக்கு கிழக்கு மாகாண தமிழ் தாலைவர்கள் இணைந்து பேச்சுவார்த்தை நடாத்தி தீர்த்துக் கொள்ள வேண்டும். அரசியல் ரீதியாகவும் சட்டபூர்வமாகவும் இரண்டு நிலங்களுக்கும் இடையிலான உறவை அப்படித்தான் போண வேண்டும். இன்றும்கூட ஈழத்தில் நடக்காத அளவில் தமிழகத்தில் தான் ஈழ விடுதலைக்கான போராட்டங்கள் நடக்கின்றன. மே 17 இனப்படுகொலை நினைவேந்தல், மாவீரர் நாள் என்பன இப்போதும் தமிழகத்தில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்படுகின்றன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பின் தளமாக தமிழகமே செயற்பட்டு இருக்கின்றது. அதில் தமிழக மீனவர்களின் பங்களிப்பும் தென் தமிழகத்தின் பங்களிப்பும் அளப்பெரியது. ஒருவகையில் சொன்னால் தமிழக மீனவர்கள் ஈழ விடுதலைப் போராட்டத்திற்காக இரத்தம் சிந்தியுள்ளார்கள். தமிழக மீனவர்கள் இல்லை என்றால் ஈழவிடுதலைப் போராட்டம் இல்லை என்றே கூற வேண்டும். காயப்பட்ட போராளிகளுக்கு மருத்துவம் செய்வதற்காக விரைந்த தமிழக மீனவர்களின் படகுகளும் அதனால் காயம்பட்டு இரத்தம் சிந்திய மீனவர்களும் இருக்கிறார்கள்.

ஆரம்ப காலத்தில் ஈழவிடுதலை போராட்டத்தின் பெரும்பாலான செயற்பாடுகள் தமிழகத்தில்தான் முன்னெடுக்கப்பட்டன. புரட்சிப் பாடல்கள் அங்குதான் தாயாரிக்கப்பட்டன. விடுதலை சம்பந்தமான புத்தகங்கள் அங்குதான் பதிப்பிக்கப்பட்டன. விடுதலைப் போராட்ட நிர்வாகம் சார்ந்த கட்டமைப்புக்கள் தொடர்பாக பல்வேறு முன்னெடுப்புக்கள் தமிழகத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டன. அப்போது விடுதலைப் போராளிகளின் போக்குவரத்துச் செயற்பாடுகளில் தமிழக மீனவர்களின் பங்களிப்பும் இரத்தம் சிந்துதலும் இருந்தது வரலாறு.

அதைப் போல ஈழத்தில் போர் மூண்ட தருணங்களில் எல்லாம் மக்கள் கைகளில் கிடைத்தவற்றை எடுத்துக் கொண்டு தமிழகத்திற்கு புலம்பெயர்ந்தார்கள். சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் இதுவரையில் கடல்வழியாக புலம்பெயர்ந்து வந்ததாக சொல்லப்படுகிறது. இவர்கள் எல்லோரையும் கடலில் கொண்டு சென்றவர்களும் கடலில் மீட்டவர்களும் தமிழக மீனவர்கள்தான். ஈழத்தில் பெரும் ஆபத்துக்களை சந்தித்த எழுத்தாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் தமது உயிரை காக்க அந்தரித்த தருணங்களில் அவர்களை தமிழகத்திற்கு கொண்டு சேர்த்தவர்களும் தமிழக மீனவர்கள்தான்.

ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் இடையிலான பாரம்பரிய உறவுக்கு எத்தனையோ ஆதாரங்கள் இருக்கின்றன. எத்தனையோ கதைகள் இருக்கின்றன. எத்தனையோ வரலாறுகள் இருக்கின்றன. சங்ககாலத்தில் ஈழத்தில் இருந்து சென்று தமிழகத்தில் சங்கக் கவிதை இயற்றிய பூதந்தேவனார் தொட்டு தமிழ் நவீன கவிதையின் பிதாமகனாக கருதப்படுகின்ற பிரமிள் வரை இலக்கியத் தொடர்புகூட நீண்ட பாரம்பரியம் கொண்டது. சம காலத்தில் என்னைப் போன்ற எழுத்தாளர்களின் இலக்கியப் பதிப்புக்கள் கூட தமிழகத்தில் தான் நடக்கின்றன.

இந்தப் பாரம்பரிய உறவில் விரிசலை ஏற்படுத்தி அதில் அரசியல் ஆதாயம் பெற முனைவதுதான் இலங்கை அரசின் எண்ணம். அதற்கு இனி ஒருபோதும் இலங்கை தமிழ் தலைவர்கள் துணைபோகக் கூடாது. ஈழத்தில் சிங்கள மீனவர்கள் ஈழக் கடலையும் ஆக்கிரமித்து, ஈழ நிலத்தையும் ஆக்கிரமித்து மக்களை குடிபெயரச் செய்து மேற்கொள்ளுகின்ற ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்துவதில் தான் தமிழ் தலைமைகள் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

ஈழக் கடலில் ஈழ மீனவர்களை விரட்டி மீன் பிடித்து மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பால் ஈழ மீனவர்களின் வாழ்வாதாரம் மாத்திரமின்றி வாழ்நிலமும் பறிபோகிறது. அதை தடுப்பதில்தான் தமிழ் தலைவர்களின் அக்கறை இருக்க வேண்டும். அதைவிடுத்து தமிழக-ஈழ மக்களிடையே விரிசலை ஏற்படுத்தி தமிழக மீனவர் படுகொலையை நியாயப்படுத்த முனையும் இலங்கை அரசின் எண்ணத்திற்கு துணைபோகாமல், தமிழகத்திலிருந்து எழுகின்ற ஈழ ஆதரவுக் குரலுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

## வீணாவின் கவிக்கணை

வண்ண வண்ண பூக்கள் எல்லாம்
காணவே அழகு,
கனிகளோ விதம் விதமாய்
ருசிப்பதற்கு இனிது,
ஆனால் அவை அனைத்தையும்
தாங்கிப்பிடிக்கும் வேரோ
பார்க்க கரடுமுரடு,
நீ பூத்துக் காய்க்க வேராக
உன்னைத்தாங்குவதோ
உன் பெற்றோர்கள்தான்,
நீ வெட்டி எறியவோ,
விட்டு விலகவோ சாத்தியமில்லை,
காரணம் அவர்கள் உன்னை
சார்ந்தவர்களல்ல, நீ தான்
அவர்களை சார்ந்துள்ளாய்.



# நவம்பர் 1 — தமிழ்நாட்டின் பிறந்த நாளைக் கொண்டாடுக!

## உலகத் தமிழர்களுக்கு பழ. நெடுமாறன் அவர்கள் வேண்டுகோள்

சங்க காலத்திலிருந்து சேர, சோழ, பாண்டிய நாடுகளாகவும், பின்னர் பல்வேறு வகையிலும் பிரிவுப்பட்டுக் கிடந்த தமிழ்நாடு முதன்முதலாக 1956ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள் ஒன்றுபட்டத் தமிழகமாகப் பிறந்தது. இந்த நாளை சிறப்பாகக் கொண்டாட வேண்டியது தமிழர்கள் அனைவரின் கடமையாகும். அந்த வகையில் இந்த ஆண்டும் தமிழ்நாடு பிறந்த நவம்பர் முதல் நாளை சிறப்பாகக் கொண்டாடும்படி அனைவரையும் வேண்டிக் கொள்கிறேன்.

**அன்புள்ள,**

**(பழ. நெடுமாறன்)**
**தலைவர்.**

# 20/20 CA$H RU$$H

- Western Union- Money Transfer, Payout, Bill Payments
- Buying Used Gold-Top Dollar paid
- Pawning
- Small Loans
- Cheque Cashing rate of 2.5%

நகைகள் திருத்தம் செய்து கொடுக்கப்படும்

இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ள இலக்கங்களை கொண்ட வாடிக்கையாளர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு அடவுகளை மீட்கவும்.
Kindly redeem the following pawn ticket number immediately
**#4986,4980,#0372,#1520,#4993,#4998,Cr53,Cr245,Cr50,Cr66,Cr54,Cr246,Cr226,Cr157,Cr167,Cr187**

இலங்கையில் உள்ள உங்கள் உறவுகளுடன் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்வதற்கான Pre-paid Top up ஐ எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**We offer:**
**Gift cards and all top up (domestic and international)**



தொடர்புகளுக்கு :

**Tel : 416-291-CASH (2274)**

**Fax : 416-291-2276**

E-mail : 2020cashrusshcorp@gmail.com | www.2020cashrussh.ca

**4049 Sheppard Ave., East Scarborough. ON. M1S 1S8**



# MONEY PROBLEMS?
## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CRPLAN

**0%வட்டி**

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




**தமிழில் தொடர்புகளுக்கு:**

**வசந்தி சிவராஜா - 416-616-3077**

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

**எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்**

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

**4 இடங்களில் சேவை**
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# "அற்புதமான கலைஞர் வர்ண ராமேஸ்வரன் இல்லாத தமிழிசை இசை உலகத்தையும் அதன் எதிர்காலத்தையும் எண்ணி நாம் கவலைப்படுகினறோம்"

## மொன்றியால் அஞ்சலி நிகழ்வில் மொன்றியால் "நாட்டிய சுருங்கா" நடனப் பள்ளியின் அதிபரும் குருவுமாகிய ஸ்ரீமதி தாரகா சற்குணபாலா கண்ணீருடன் தெரிவிப்பு






"எங்கள் மத்தியில் இசையின் பல வடிவங்களையும் அறிந்த ஒருவராய் மற்றும் இசைக் கலைஞனாகவும் மிருதங்க வித்துவானாகவும் திகழ்ந்த அற்புதமான கலைஞர் வர்ண ராமேஸ்வரன் திடீரென எம்மை விட்டுப் பிரிந்து விட்டார். நாங்கள் எவருமே எதிர்பாக்காக ஒன்றாக அவரது இழப்பு சம்பவித்து விட்டது. தற்போது அவர் இல்லாத தமிழிசை இசை உலகத்தையும் அதன் எதிர்காலத்தையும் எண்ணி நாம் கவலைப்படுகினறோம். அதன் எதிர்காலம் எவ்வாறு இருக்கப்போகின்றது என்பதும் ஒரு கேள்விக் குறியே ஆகும்".

இவ்வாறு மொன்றியால் மாநகரில் இடம்பெற்ற மறைந்த கலைஞர் வர்ண ராமேஸ்வரன் அவர்களுக்கான அஞ்சலி நிகழ்வில் உரையாற்றிய மொன்றியால் "நாட்டிய சுருங்கா" நடனப் பள்ளியின் அதிபரும் குருவுமாகிய ஸ்ரீமதி தாரகா சற்குணபாலா கண்ணீருடன் தெரிவித்தார்.





மொன்றியால் வாழ் நடன மற்றும் இசைக் கலைஞர்கள் மற்றும் தமிழ் உணர்வாளர்கள் ஆகியோரோடு இணைந்து அவர் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் மொன்றியாலிலிருந்து நூற்றுக்கணக்கானவர்களும் ரொறன்ரோவிலிருந்து "மிருதங்க ஞானவாருதி" வாசுதேவன் ராஜலிங்கம் அவர்களும் "உதயன்" பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்களும் சில நண்பர்களும் கலந்து கொண்டார்கள். திருமதி உமா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.








முதலில் அங்கு கலந்துகொண்ட அனைவரும் மலரஞ்சலி செய்தனர். குறிப்பான இசை நடன ஆசிரியர்கள் மற்றும் அழைக்கப்பெற்ற பேச்சாளர்கள் என பலரும் வர்ண ராமேஸ்வரன் அவர்களின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செய்தனர்.

தொடர்ந்து இசை அஞ்சலியை பல இசையாசிரியைகளின் மாணவ மாணவிகள் நிகழ்த்தினர். அவர்களுக்கு பக்கவாத்தியமாக மிருதங்க வாத்தியத்தை "மிருதங்க ஞானவாருதி" வாசுதேவன் ராஜலிங்கம் அவர்கள் வழங்கினார்.

பின்னர் சிவஸ்ரீ வெங்கடேஸ்வரக் குருக்கள் அவர்கள் அஞுசலி உரையாற்றினார். அவர் வர்ணராமேஸ்வரன் அவர்கள் இசையாற்றல் பற்றியும் தேசப் பற்று தொடர்பாகவும் தனது வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்டார். தொடர்ந்து அஞ்சலி உரையாற்ற உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அழைக்கப்பட்டார்.

அவர் தனது உரையில் வர்ண ராமேஸ்வரன் அவர்கள் தமிழிசையையும் தமிழின விடுதலையையும் தனது இரண்டு கண்களாகக் கொண்டு செயற்பட்டவர் என்றும் தன் சக கலைஞர்களை எப்போதும் ஊக்குவித்து வந்தவர் என்றும் தெரிவித்து தனது அஞ்சலியாக தான் எழுதிய கவிதை வரிகளையும் வாசித்து சமர்ப்பணம் செய்தார்.

அடுத்து உரையாற்றிய மொன்றியால் வாழ் எழுத்தாளர் வீணைமைந்தன் கே.ரி. சண்முகராஜா அவர்கள் அஞ்சலிக் கவிதையொன்றையும் வாசித்து தொடர்ந்து உரையாற்றினார். அவர் தனது உரையில் மறைந்த வர்ண ராமேஸ்வரன் அவர்கள் எமது தமிழ்ச் சமூகத்தின் இசைப் பரப்பில் ஒரு பூரணமான கலைஞருக விளங்கினார் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து அஞ்சலியுரையாற்ற அழைக்கப்பட்ட திருமதி கிருபா கருணராஜா அவர்கள் மறைந்த கலைஞர் வர்ண ராமேஸ்வரன் அவர்களின் மாணவி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அவர் தனது உரையில் ஒரு இசையாசிரியராக தனக்கு வாய்த்த வர்ணராமேஸ்வரன் அவர்கள் ஒரு சிறந்த குருவாக மட்டுமல்ல தனது கலைப் பயணத்திற்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கினார் என்றும் தெரிவித்தார். அத்துடன் மறைந்த தனது குரு அவர்கள் தமிழ் மொழியும் தமிழிசையும் உள்ளவரை என்றும் மறக்கப்பட மாட்டார் என்றும் அவர் ஈழத்தில் வாழும் கலைஞர்கள் அனைவரதும் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும் என்று கனவுகளோடு சேர்ந்துதான் மறைந்துவிட்டார் என்று தெரிவித்தார்.

மறைந்த வர்ண ராமேஸ்வரன் அவர்களது மாணவியும் இசையாசிரியையுமான திருமதி ஆரதி முகுந்தனும் ஒரு பாடலைப் பாடி இசையஞ்சலி செய்தார்.

இன்னும் பலரும் அங்கு அஞ்சலியுரையாற்றினர்.

**- செய்தியும் படங்களும்: சங்கர் சிவானந்தன்**

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization
www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647)-619-3619

அறிவித்தல்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம், மாவீரர் தொடர்பான விபரங்களையும், மாவீரர்களது பெற்றோர், சகோதரர்கள் தொடர்பான விபரங்களையும் திரட்டுகின்றது.

கனடிய மண்ணுக்கு அண்மைக் காலத்தில் வருகை தந்த மாவீரர்களின் குடும்பத்தினர்,தற்போது புதிய முகவரியில் வாழும் மாவீரரின் குடும்பத்தினர்,புதிய தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தும் மாவீரர்களது குடும்பத்தினர் அனைவரும் தங்களது முகவரி, தொலைபேசி இலக்கம். போன்ற விபரங்களைத் தந்துதவுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

நன்றி.
வணக்கம்.
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.
தொடர்பு இலக்கம்: 647 619 3619
**ctro@tamilremembrance.com.**

# உலகின் உயரமான மலை ஹவாய் தீவில்தான் இருக்கிறது என்றால் நம்புவீர்களா?

குரு அரவிந்தன்




"உலகிலே அதி உயரமான மலையின் உச்சியில் இப்போது நீங்கள் நிற்கிறீர்கள்" என்று சொல்லி எனக்கு அதிர்ச்சி தந்தாள் வரவேற்பில் நின்ற, தலைமுடியில் ஒற்றைப்பூ செருகிய இளம் பெண்மணி. ஹவாயில் உள்ள மௌனாகியா மலையின் உச்சியில் நாங்கள் அப்போது நின்றிருந்தோம். இமயமலை ஆசியாவில்தான் இருக்கிறது என்ற எனது நம்பிக்கையை ஒரு கணம் கேள்விக்குறியாக்கினாள். நேபாளத்திற்கும், தீபெத்திற்கும் இடையே உள்ள இமயமலையின் எவரெஸ்ட் சிகரம்தான் உலகிலே அதிக உயரமான சிகரம் என்பதும், அதன் உயரம் 29,028 அடி என்பதும் மாணவப்பருவத்தில் இருந்தே என் மனதில் பதிந்திருந்தது. அதன்பின் இன்றுவரை இமயமலை 4 அங்குலம் வளர்ந்திருந்ததும் தெரியும். வரவேற்பில் நின்ற பெண்மணிக்கு அனுபவம் போதவில்லை, எவெரெஸ்ட் பற்றி இவர் அறிந்திருக்கவில்லை என்ற நினைவோடு, அவரைப் பார்த்தேன். எனது பார்வையைப் புரிந்து கொண்ட அவரோ அருகே இருந்த பதாதையை நோக்கிச் சுட்டுவிரலை நீட்டினார். மௌனாகியா மலையின் படத்தையும் அதைப்பற்றிய குறிப்பையும் வாசித்த போது என்னால் ஏற்றுக் கொள்ள முடியாமல் ஒருகணம் தடுமாறிப் போனேன்.

ஹவாய் தீவுகளில் ஒன்றான பிக்ஜலண்டில் உள்ள மௌனாகியா மலையில் மிகப்பெரிய தொலை நோக்கிகள் இருப்பதாக ஏற்கனவே படித்திருந்தேன். கண்ணுக்குத் தெரியாத, எத்தனையோ ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் உள்ள கருந்துளைகளைக் கண்டறிவதற்கும், சமீபத்தில் வியாழனைவிடப் பெரிய கிரகம் ஒன்று 6500 ஒளி ஆண்டுகள் தூரத்தில் இருப்பதையும் இந்தத் தொலைநோக்கிகள் தான் கண்டுபிடித்திருந்தன. எனவே ஒரு நாள் அதற்காக நேரத்தை ஒதுக்கி அங்கு சென்று பார்த்தோம். சுமார் பதின்மூன்று பிரமாண்டமான தொலைநோக்கி நிலையங்கள் இங்கே இருக்கின்றன. தொலைநோக்கி நிலையத்தில் நின்றபோது எங்களோடு உரையாடிய பெண்மணி அதைப்பற்றி விளக்கம் தந்தபோது எனக்கு உடம்பு சிலிர்த்தது. அவர் சொன்னது




உண்மைதான், அதாவது மௌனாகியா மலையின் உயரம் 33,480 அடிகள் என்று அங்கே பதியப்பட்டிருந்தது. எவெரெஸ்ட் உச்சியை விட சுமார் 4000 அடிகள் மேலே உலகத்தின் உச்சியில் நிற்கிறோம் என்று பெருமையாக மனைவியிடம் சொன்னேன். மனைவிக்கு அதில் நம்பிக்கை ஏற்படவில்லை. "இவ்வளவு சுலபமாக உலகத்தின் உச்சியைத் தொடமுடியுமா, எத்தனை பேர் எவெரெஸ்டில் ஏறமுடியாமல் திரும்பி இருக்கிறார்கள் தெரியுமா?" என்றார். எனக்கும் அதில் சந்தேகம் இருந்தது. பிரமனும் திருமாலும் அடிமுடி தேடியகதை போல நானும் எது சரி என்பதை கண்டறிவதற்காகக் கணனியில் தேடிப் பார்த்தபோது இந்தத் தகவல் கிடைத்தது. Most of the mountain is under water; when measured from its oceanic base, Mauna Kea is over 33,480 ft tall and is the tallest mountain on Earth. தண்ணீருக்கு அடியில் இருந்தாலும், ஹவாயில் இருப்பவர்கள் மௌனாகியா மலைதான் உலகத்திலே உயரமானது என்பதை எந்தக் காரணம் கொண்டும் விட்டுக் கொடுப்பதாக இல்லை.

எரிமலையான மௌனாகியாவின் உச்சியில், கடல் மட்டத்தில் இருந்து 13,803 அடி உயரத்தில் இந்த தொலைநோக்கிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் ஒழுங்கு செய்திருந்த வண்டியில்தான் மேலே செல்ல முடிந்தது. சாதாரண வண்டிகள் அந்தப் பாதையில் செல்வது கடினமானது. அவர்கள் குறிப்பிட்ட தரிப்பிடத்தில் எங்கள் வண்டியை நிறுத்தி விட்டு அவர்கள் ஒழுங்கு செய்த வண்டியில் மேலே சென்றோம். இந்த இடத்திற்குச் செல்வது என்பது மலையைச் சுற்றிச் சுற்றி மேலே செல்வதைப் போன்றது. இந்த மலையை மௌனா ஓ வாக்கியா (Mauna O Wakea - the mountain of the god Wakea) என்றும் பழங்குடி மக்கள் அழைக்கின்றார்கள். இது ஹவாய் பழங்குடி மக்களின் புனிதமான இடமாகையால் அவர்களின் வழிபாட்டுச் சின்னங்களையும் காணமுடிந்தது. நெடுஞ்சாலையின் இரண்டு பக்கமும் எரிமலை லாவாக் குளம்புகள் இறுகியதால் ஏற்பட்ட கறுப்பு நிறப் பாறைகளையும், கற்களையும் காணமுடிந்தது. இங்குள்ள ஜெமினி நோர்த், ஜேம்ஸ் கிளார்க் மக்ஸ்வெல், கனடா-பிரான்ஸ் தொலைநோக்கி போன்ற தொலைநோக்கிகளில் கனடாவின் பங்கும் கணிசமானளவு இருக்கின்றது.



திரும்பி வரும்போது, பார்வையாளர்களுக்கான தகவல் பரிமாற்ற நிலையத்திற்குச் (The Onizuka Center for International Astronomy Visitor Information Station) சென்றோம். இங்கிருந்து வானத்தைத் தெளிவாகப் பார்ப்பதற்காக ஏனைய விளக்கு வெளிச்சங்களைத் தடை செய்திருக்கின்றார்கள். தரையில் மட்டும் ஆங்காங்கே சிறிய சிகப்பு விளக்குகள் பொருத்தியிருப்பதால் அந்த வெளிச்சத்தைக் கொண்டுதான் நாங்கள் நகரவேண்டி இருந்தது. நாங்கள் பாதையை இனம் காண்பதற்காக செல்போன் வெளிச்சத்தைப் பாவித்தோம். உயரச் செல்லும்போது பிராணவாயு குறைவாக இருப்பதால், முதியோருக்கு ஏறிச் செல்லும் போது, சுவாசிப்பது சற்று கடினமாக இருக்கலாம். இரவுதான் இங்கே நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கின்றன. சிறியதொரு உணவகமும் அங்கே உண்டு. அங்கே கடமையில் இருந்த ஒரு பெண்மணி தன்னிடம் இருந்த நீலநிற ஒளிபாய்ச்சும் அதிசக்தி வாய்ந்த லேசர்கதிர் விளக்கைப் பாவித்து வானத்தில் தெரிந்த ஒவ்வொரு நட்சத்திரங்களைப் பற்றியும் விளக்கம் தந்தார். அங்கே இருள் சூழ்ந்து இருந்ததால் வானத்து நட்சத்திரங்கள் தெளிவாகத் தெரிந்தன. லேசர் கதிர்விளக்கால் வானத்தைச் சுட்டிக்காட்டி "அதோ அங்கே பாருங்கள் அதுதான் செவின்சிஸ்ரேஸ்!" என்றார். தொலைநோக்கியால் பார்த்தபோது ஏழு பிரகாசமான நட்சத்திரங்கள் கூட்டமாக மிக அருகே தெரிந்தாலும் அவற்றைச் சுற்றிவர நிறைய புள்ளிகளாக நட்சத்திரங்கள் தெரிந்தன. எங்கள் கண் பார்வைக்கு அவை எல்லாம் ஒரே இடத்தில் இருப்பது போலத் தெரிந்தாலும் எத்தனையோ கோடி மைல்களுக்கப்பால் ஒவ்வொன்றும் தனித்தனியே இருந்தன.



இன்னும் ஒருநாள் கௌலா ரேஞ் என்ற இடத்திற்குச் சென்றிருந்தோம். (Kualoa Ranch, on the Hawaiian island of Oahu) வண்டியில் ஏறுமுன்



கூட்டமாக எல்லோரையும் படம் எடுத்தார்கள். ஐந்து வண்டிகளில் எல்லோரும் ஏறியதும் ஒன்றின் பின் ஒன்றாக வண்டிகள் புறப்பட்டு மலைப்பாதையில் சென்றன. நீண்ட காலத்தின் முன் அழிந்து போய்விட்டதாகச் சொல்லப்பட்ட டைனஸோக்கள் எப்படி இருந்திருக்கும் என்பதை அங்கே காணமுடிந்தது. எப்படி என்று நினைக்கிறீர்களா? யுராசிக்பாக் என்ற பதாதை வாசலில் இருந்தது. இந்த உயரமான காட்டுப் பகுதியில்தான் ஸ்ரீவன் ஸ்பில்பேர்க்கின் நெறியாள்கையில் 1993 ஆம் ஆண்டு வெளிவந்த யுராசிக்பார்க் (Jurassic Park) படப்பிடிப்பு நடைபெற்றது. அதில் இடம் பெற்ற வாசல் கதவு, டைனஸோவின் நகக்கீறலுடன் கூடிய மதில் எல்லாம் அப்படியே இருக்கின்றன. டைனஸோவின் பெரியதொரு எலும்புக்கூட்டையும் பெரிதாக அங்கே வைத்திருந்தார்கள்.

மீண்டும் எங்கள் பயணம் தொடர்ந்தது. சற்றுத்தள்ளிக் காட்டுப் பகுதியில் ஹெலிக்கொப்டர் ஒன்று தரையில் உடைந்து விழுந்து கிடந்தது. அதற்கு அருகே கிங்கொங் படத்தில் இடம் பெற்ற ஹெலிக்கொப்டர் என்று அதைப் பற்றிய விபரங்கள் எழுதியிருந்தார்கள். wreckage of a military chopper in Kong: Skull Island movie அந்த இடத்திலும் இறங்கிப் படங்கள் எடுத்துக் கொண்டோம். "கொங்" படத்திற்கான சில காட்சிகளின் படப்பிடிப்பு அங்கு நடைபெற்றதாக வழிகாட்டிப் பெண்மணி குறிப்பிட்டார். யுராசிக்வேள்ட், பேர்ள்ஹாபர், கொட்சிலா போன்ற படங்களையும் இங்கேதான் எடுத்தார்கள். சென்ற வருடம் வெளிவந்த "யுமாஞ்சி" என்ற படமும் இங்கேதான் எடுத்தார்கள் என்பதால் அந்தப் படத்தையும் ஹவாய் திரையரங்கில் பார்த்து மகிழ்ந்தோம். இதைவிட சின்னத்திரை நாடகங்கள்போல, பிறமொழிகளில் பல படங்கள் இங்கே எடுத்திருக்கிறார்கள். அதிசயக்கத்தக்க தீவுகளாகக் ஹவாய் தீவுகள் இருக்கின்றன.



சரணம் சரணம் சாய் சரணம்

எங்களது S7 PRODUCTIONS நிறுவனம் சாய் பாபாவின் அற்புதங்கள், திரைப்படத்தை 5 மொழிகளில் பிரம்மாண்ட முறையில் தயாரிக்க உள்ளோம்.

சாய் பாபா பக்தர்கள் 1 ரூபாய் முதல் நன்கொடை வழங்கலாம்.

சாய்பாபா பக்தர்கள் தங்கள் வாழ்வில் சாய்பாபா நிகழ்த்திய அற்புதங்களை எங்களுக்கு எழுதி அனுப்பவும். நாங்கள் அதனை பரிசீலித்து திரைப்படத்தில் காட்சிகளாக வைக்கப்படும்.

Accounts Details
The South Indian Bank Limited
ST. THOMAS MOUNT Branch, Chennai - 16.
A/C No.: 0500730000000351
IFSC.: SIBL0000540 (or)
Cheque / DD: S7 PRODUCTIONS
G-Pay & Phone Pay :9445859988

தொடர்புக்கு முகவரி:
S7 PRODUCTIONS
No.24/25, AVM Studio,
Cine Lab Campus, NSK Salai,
Vadapalani, Chennai - 26.
Tamilnadu, India.
Contact & Whatsapp:
044-48685857 / 9445859988



# நல்ல படைப்புக்களை நாம் படிக்க வேண்டுமானால் நாம் சிரமப்பட்டே அதைச் செய்ய வேண்டும்

## "சிந்தனைப் பூக்கள்" நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் அ. சந்திரகாந்தன் தெரிவிப்பு



"தமிழர்கள் மத்தியில் ஆய்வுகள் இடம்பெறுவதும் ஆய்வுகள் தொடர்பான நூல்கள் வெளிவருவதும் அதிதாகவே உள்ளன. நல்ல நூல்களை நாம் படிப்பதற்கு சிரமப் பட்டே அதைச் செய்யவேண்டும். அல்லாவிடில் படித்து முடிக்க முடியாது. மேலும், நூல்களைப் படிப்பதற்கும் வாசிப்பதற்கும் வேறுபாடுகள் உண்டு. வாசிப்பதிலும் பார்க்க படிப்பதினாலேயே அதிக பயன் உண்டு என்பது எனது நம்பிக்கையும் அனுபவமும் ஆகும். இந்த வகையில் நண்பர் "சிந்தனைப் பூக்கள்" பத்மநாதன் அவர்களது நூல்கள் அனைத்தும் படித்து இன்புறக்கூடியவையே".


இவ்வாறு தெரிவித்தார் ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர் பேராசிரியர் அமுது சந்திரகாந்தன் அவர்கள். கடந்த 22ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை ஸ்காபுறோ தமிழிசைக் கலாமன்ற மண்டபத்தில் நடைபெற்ற "சிந்தனைப் பூக்கள்" நூல்கள் 4ம் மற்றும் 5ம் பாகம் ஆகியவற்றின் வெளியீட்டு விழாவில் நயவுரையாற்றியபோது இவ்வாறு தெரிவித்தார்.

கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

தொடக்கவுரையாற்றிய ஒலிபரப்பாளரும் திரைப்பட இயக்குனருமான பி. எஸ். சுதாகரன் அவர்கள் தனது உரையில் ஒன்றரை வருட காலம் தூரத் தூர இருந்து விட்டு இன்று அருகருகே அமர்ந்திருந்து இந்த இலக்கிய விழாவில் அனைவரும் கலந்து கொள்வதும் சிறப்புக்குரியதாகும் என்றார்.

கவிஞர் குமரகுரு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.











தலைமையுரையாற்றிய கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்கள். நூலாசிரியர் "சிந்தனைப் பூக்கள்" பத்மநாதன் அவர்களைப் பாராட்டியதோடு, அவரது நூல்கள் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானவை என்றும் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் "எம் தமிழ்ச் சமூகத்தியிருந்து வெளிவரும் பத்திரிகைகள். சஞ்சிகைகள் மற்றும் நூல்கள் ஆகியவை சமூகத்தின் அனைத்து தரப்பினருக்கும் பயனுள்ளவையாக இருக்க வேண்டும். இதற்குரிய காரணத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

எமது இளைஞர்கள் மத்தியில் பல விடயங்களில் வழிகாட்டல்கள் தேவைப்படுகின்றன. அவர்களின் பெற்றோர்களால் மாத்திரம் அதைச் செய்து விட முடியாது. இளைஞர்கள் தொடக்கம் திருமணமானவர்கள் வரை தங்கள் வாழ்க்கையை சீரழித்த வண்ணம் நாட்களைக் கழிக்கின்றார்கள். ஆனால் ஒவ்வொரு நாளும் அவர்களின் வாழ்நாட்கள் பயனற்றவையாகவே கழிகின்றன. பல இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகி தங்கள் குடும்பங்களுக்கும் சமூகத்திற்கும் பயனற்றவர்களாகிவிட்டார்கள். இந்த நிலையை மாற்ற எமது தமிழ் மொழி ஊடகங்களும் அமைப்புக்களும் உடனடியாக செயலாற்ற முன்வரவேண்டும். எமது "சிந்தனைப் பூக்கள்" நூலாசிரியர் பத்மநாதன் அவர்களது தான் எழுதும் கட்டுரைகள் மற்றும் நூல்கள் வாயிலாக நான் குறிப்பிட்ட உடல் சார்ந்து உளம் சார்ந்த பணிகளைச் செய்து வருகின்றார் என்றே நான் கூறுவேன்" என்றார்.

அடுத்து வாழ்த்துரை வழங்கிய உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் உரையாற்றும் போது, "சிந்தனைப் பூக்கள்" நூலாசிரியர் பத்மநாதன் அவர்கள் பல்வேறு தளங்களில் கால் பதித்து பல தரப்பினரையும் அணைத்த வண்ணம் தனது கலை இலக்கியப் பயணத்தையும் சமூகப் பணியையும் ஆற்றிவருகின்றார் சக எழுத்தாளர்கள் கவிஞர்கள் போன்றவர்களோடு தொடர்ச்சியான தொடர்புகளைப் பேணுவதோடு, அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆலோசனைகளை வழங்கியும் வருவபவர். சமூக அக்கறையோடு இலக்கியம் படைத்து வரும் அவருக்கு நாம் அனைவரும் கடமைப்பட்டவர்கள் ஆவோம்" என்றார்.

இதேவேளை. ஒன்றாரியோ மாகாணத்தின் சட்டசபை உறுப்பினரான விஜய் தணிகாசலம் அவர்கள் வாழ்த்துரை வழங்கி பின்னர் மாகாண அரசு சார்பான பாராட்டுப் பத்திரத்தையும் நூலாசிரியர் பத்மநாதன் அவர்களுக்கு வழங்கினார்.

தொடர்ந்து எழுத்தாளர்கள் அகணி சுரேஸ். டாக்டர் போல் ஜோசப். குரு அரவிந்தன். ஆகியோரும், சட்டத்தரணி தம்பையா ஸ்ரீபதி. திரு சாமி அப்பாத்துரை. த. சிவலோகநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.

நூல்களின் முதற் பிரதியை வீடு விற்பனை முகவர் நிறுவனத்தின் தலைவரும் தொழிலதிபருமான செல்வா வெற்றிவேல் நூலாசிரியரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.







































தொடர்ந்து சிறப்புப் பிரதிகளை "விளம்பரம்" மற்றும் "தாய்வீடு" பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் சங்கர் நல்லதம்பி. கேதா நடராஜா. சங்கர் மாணிக்கம். சசிகலா நரேன். சிவா கணபதிப்பிள்ளை கிருபா கிசான் ஆகியோர் உட்பட பலர் அன்பர்கள் நூலாசிரியரிடமிருந்து பெற்றுக்கொண்டனர்.

இறுதியில் நூலாசிரியர் பத்மநாதன் அவர்களது ஏற்புரை இடம்பெற்றது.

**- செய்தியும் படங்களும்: சத்தியன்**

# இல்லம் தேடிக் கல்வி திட்டம்: மாற்றுக் கருத்துகளைக் கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளோம் முதல்வர் ஸ்டாலின்

இல்லம் தேடிக் கல்வி திட்டம் குறித்து ஊடகங்கள் வாயிலாக சில மாற்றுக் கருத்துகள் அரசின் கவனத்திற்குத் தெரிய வந்துள்ளது. அவற்றை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளது என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து முதல்வர் ஸ்டாலின் இன்று வெளியிட்டுள்ள அறிக்கை:

‘’மானுடம் இதுவரை சந்தித்திராத ஒரு பெருந்தொற்றிலிருந்து படிப்படியாக மீண்டு வருகிறோம். இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில் அதிக இழப்பைச் சந்தித்தவர்கள் பள்ளிக் குழந்தைகளே. பெருந்தொற்றால் பள்ளிகள் மூடப்பட்டதன் காரணமாக, மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள கற்றல் இழப்பை ஆய்வு செய்த கல்வியாளர்களும், யுனெஸ்கோ உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புகளும், தமிழ்நாடு அரசின் பொருளாதார ஆலோசனைக் குழுவிலுள்ள வல்லுநர்களும் அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறை மூலமாக, முழுவதும் மாநில அரசின் நிதியில் செயல்படுத்த இருக்கும் “இல்லம் தேடிக் கல்வி” திட்டம் நேற்று (27102021) தொடங்கப்பட்டுள்ளது.இல்லம் தேடிக் கல்வித் திட்டம் மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும், கல்வியாளர்களிடையேயும் சிறப்பான வரவேற்பைப் பெற்று வருகிறது.

பள்ளிகள் பல மாதங்களாக மூடப்பட்டிருந்த நிலையில் ஏற்பட்டுள்ள கற்றல் பாதிப்பினைக் குறைக்கவும், சரிசெய்யவும், வேறு எந்த மாநிலமும், எந்தவொரு திட்டத்தினையும் செயல்படுத்தாத நிலையில், ஒரு முன்னோடித் திட்டமாக மாணவச் செல்வங்களும், அவர் தம் பெற்றோர்களும் எளிதில் அணுகிப் பெறும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.இத்திட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டு மாணவர்களின் கல்வியினை மேம்படுத்துவதில் ஆர்வம் கொண்டவர்களைத்



தன்னார்வலர்களாகத் தேர்வு செய்து, அவர்களுக்கு உரிய பயிற்சி வழங்கி இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இதுவரை 67 ஆயிரத்து 961 பெண்களும், 18 ஆயிரத்து 557 ஆண்களும், 32 திருநங்கையரும் என மொத்தம் 86 ஆயிரத்து 550 நபர்கள் இத்திட்டத்தில் சேவையாற்றப் பதிவு செய்துள்ளனர்.இவ்வாறு பதிவு செய்தவர்களின் கல்வித் தகுதி, இருப்பிடம், முன்னனுபவம் போன்ற பல்வேறு அளவீடுகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மூலம் நேரடியாகத் தேர்வு செய்யப்படுவர். இந்தப் பள்ளி மேலாண்மைக் குழுவில் பள்ளித் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், பெற்றோர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் இடம் பெறுவர். தேர்ந்தெடுக்கப்படும் தன்னார்வலர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

மாணவர்களின் எதிர்கால நலன் கருதி, கரோனா பெருந்தொற்றால், கடந்த 19 மாத காலத்தில், கற்றலில் ஏற்பட்ட இழப்பைச் சரிசெய்யும் பெரும்பணியில் ஈடுபடவிருக்கும் ஆசிரியர்களுக்கு உறுதுணையாக விளங்கும் வகையிலேயே இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.ஆனால், இத்திட்டம் குறித்து ஊடகங்கள் வாயிலாக சில மாற்றுக் கருத்துகள் அரசின் கவனத்திற்குத் தெரிய வந்துள்ளது. அவற்றை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளது.

தன்னார்வலர்களைத் தேர்வு செய்யும் முறை, அவர்களுடைய பங்களிப்பு, அவர்களால் கற்பிக்கப்படும் மாணவ மாணவியரின் கற்றல் மேம்பாடு ஆகியவை தொடர்ந்து கல்வியாளர்கள் கொண்ட குழுவால் கண்காணிக்கப்படும். அரசின் வழிகாட்டுதல்களை முறையாகக் கடைப்பிடிப்பவர்கள் மட்டுமே தன்னார்வலர்களாகத் தொடர அனுமதிக்கப்படுவர்.

இதுமட்டுமல்ல; இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தின் வாயிலாக தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு இல்லத்திற்கும் நேரடியாகச் சென்று பள்ளி செல்லும் வயதுள்ள குழந்தைகள் அனைவரும் தொடர்ந்து பள்ளிக்கு வருவது உறுதி செய்யப்படும். மேலும், வருகிற கல்வியாண்டில் குறைந்தபட்சம் ஒரு லட்சம் மாணவர்கள் அரசுப் பள்ளிகளில் கூடுதலாகச் சேர்க்கப்பட வேண்டும் என்பதையும் இலக்காகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.மத்திய அரசு அறிமுகப்படுத்தியிருக்கும் புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப் போவதில்லை என்பது ஏற்கெனவே பலமுறை தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

மேலும், மாநில அளவிலான கல்விக் கொள்கையினை வகுத்திட கல்வியாளர் அடங்கிய குழு ஒன்று விரைவில் அமைக்கப்படும். மாணவர்களின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு, தன்னார்வலர்கள் அரசுப் பள்ளிகளின் நல்லெண்ணத் தூதுவர்களாக, ஆசிரியர்களுக்கும், பள்ளிகளுக்கும், சமூகத்திற்கும் இணைப்புப் பாலமாகச் செயல்படுவர். எனவே, இத்திட்டத்தின் நோக்கத்தினைப் புரிந்துகொண்டு, அனைத்துத் தரப்பு மக்களும், இத்திட்டத்தினை ஆதரித்து, நம் மாணவச் செல்வங்களின் எதிர்காலத்திற்கு உதவிடும் வகையில், அரசுப் பள்ளிகளை வலுப்படுத்திடக் கைகோத்திட வேண்டும்‘’.இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# வெள்ளத்தில் சிக்கிய தாய் சேயை மீட்டவர்: தொலைபேசியில் கமல் பாராட்டு



துணிச்சலை மட்டும் கைவிட்டு விடாதீர்கள் என்று வெள்ளத்தில் சிக்கிய தாய் சேயை மீட்டவருக்குத் தொலைபேசி வாயிலாக கமல் பாராட்டு தெரிவித்துள்ளார்.சேலம் மாவட்டத்தில் குற்றாலம் எனப்படும் அருவி, கல்வராயன் மலை அடிவாரத்தில் வனப்பகுதியில் அமைந்துள்ளது. இந்தச் சுற்றுலாத் தலத்துக்கு சேலம் மாவட்டத்தைச் சுற்றியுள்ள மக்கள் அதிக எண்ணிக்கையில் வந்து செல்வது வழக்கம். சில தினங்களுக்கு முன்பு வளிமண்டல மேலடுக்குச் சுழற்சி காரணமாக சேலம் மாவட்டத்தில் தினந்தோறும் ஆங்காங்கே மழையும், ஓரிரு இடங்களில் மிக கனமழையும் பெய்தது. இதனை ஆனைவாரி அருவியில் வழக்கத்தை விட அதிகமாக நீர் கொட்டியது.

அக்டோபர் 24ம் தேதி மாலையில் பலர் குளித்துக் கொண்டிருந்த நிலையில், செந்நிறத்தில் நீர் கொட்ட ஆரம்பித்தது. இதனைக் கவனித்த வனத்துறையினர், அருவியில் குளித்துக் கொண்டிருந்தவர்களை உடனடியாக வெளியேற அறிவுறுத்தினர்.திடீரென வெள்ளம் பெருக்கெடுத்ததால், அருவியில் குளித்துக் கொண்டிருந்தவர்களில் குழந்தையுடன் இருந்த பெண் ஒருவர் உள்பட 5 பேர் அருவியின் மறு கரையில் ஒதுங்கினர்.

வெள்ளம் அதிகரித்ததால், அவர்களில் இருவர் அங்கிருந்த பாறை மீது ஏறிக் குழந்தை, பெண் ஆகியோரை மீட்டனர். மற்ற இருவர் பாறை மீது ஏற முயன்றபோது, தவறி வெள்ளித்தில் விழுந்தனர். சிறிது தூரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட இருவரும் சற்று தூரத்தில் கரை ஒதுங்கித் தப்பித்தனர்.இந்த வீடியோ பதிவு இணையத்தில் வைரலானது. தாயையும், குழந்தையையும் காப்பாற்றியவர்களுக்குப் பாராட்டுகள் குவிந்து வருகின்றன. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது ட்விட்டர் பதிவில், இவர்கள் கவுரவிக்கப்படுவார்கள் என்று தெரிவித்திருந்தார்.

இதனிடையே, தாயையும், குழந்தையையும் காப்பாற்றியவர்களில் ஒருவரான அப்துல் ரஹ்மானுக்கு தொலைபேசி வாயிலாகத் தனது பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார் மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவரும், நடிகருமான கமல்ஹாசன். கமல் அப்துல் ரஹ்மான் இருவரும் தொலைபேசியில் பேசிய வீடியோ பதிவு இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது.அதில் அப்துல் ரஹ்மானிடம் கமல் பேசியதாவது:’’நீங்கள் வனத்துறை அதிகாரியாக இல்லாமல் போனாலும் உதவியதில் மகிழ்ச்சி. ஏனென்றால், அனைவருக்கும் இந்தக் கடமை இருக்கிறது.

அதில் நீங்கள் புரிந்துகொண்டு துணிச்சலாகச் செய்திருக்கிறீர்கள். இந்த இருவரும் இறந்திருக்கலாம், நீங்களும் அந்த வழியில் சென்றிருக்கலாம். ஆனால், துணிந்து செய்திருப்பதுதான் நம் அரசியலுக்கும் வேண்டும், நாட்டுக்கும் வேண்டும், வீட்டுக்கும் வேண்டும்.நீங்கள் கட்சியில் சேருங்கள் என்று சொல்லவில்லை. துணிச்சலை மட்டும் கைவிட்டு விடாதீர்கள். அந்தக் கூட்டத்தில் நிறைய பேர் செல்லாதே என்று நிறைய பேர் கூறியுள்ளார்கள். எனக்கு அந்த வீடியோவைப் பார்க்கும்போது கோபமாகவே இருந்தது. நீங்கள் காப்பாற்றும்போது நிறைய பேர் வீடியோ எடுத்துக் கொண்டிருந்தது பொறுக்கித்தனம்.பிரசவம் பார்த்த மருத்துவரை விட, நீங்கள் காப்பாற்றிய குழந்தை மீது உங்களுக்கு உரிமை அதிகம். அது இயற்கை ஏற்படுத்திய உணர்வு. உங்களுக்காக ஒரு குடும்பம் காத்துக் கொண்டிருந்தது. அதெல்லாம் விட்டுப் போனீர்கள். உங்களுக்கு ஒன்றும் ஆகவில்லை என்பதற்கு இயற்கைக்கு நன்றி’’. இவ்வாறு கமல் பேசினார்.

# தஞ்சாவூர் அருகே நெல் நடவு செய்த பெண்களிடம் சென்று நலம் விசாரித்த சசிகலா

தஞ்சாவூர், மாரியம்மன் கோயில் அருகே வயலில் நெல் நடவு செய்த பெண்களிடம் சென்று சசிகலா நலம் விசாரித்தார். அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட சசிகலா, மீண்டும் கட்சியில் இணைவதில் ஆர்வம் காட்டி வருகிறார். எனினும் இதற்கு அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

சசிகலாவைக் கட்சியில் சேர்ப்பது குறித்து நிர்வாகிகள் இடையே ஆலோசித்து முடிவு செய்யப்படும் என்று ஓபிஎஸ் கூறியிருந்த நிலையில், தென் மாவட்டங்களுக்கு ஒரு வார கால அரசியல் சுற்றுப் பயணத்தை சசிகலா நேற்று தொடங்கினார். அதிமுக கொடி கட்டிய காரில் சென்னை, தி.நகர் வீட்டில் இருந்து கிளம்பிய சசிகலாவுக்கு,



ஆதரவாளர்கள் ஆரத்தி எடுத்து வழியனுப்பி வைத்தனர். அவருடன் இளவரசியும் சென்றார்.

இந்நிலையில் தஞ்சாவூர் அருகே பூண்டி புஷ்பம் கல்லூரியில் இன்று (அக்.27ஆம் தேதி) டிடிவி தினகரனின் மகள் ஜெயஹரிணிக்கும், தஞ் சாவூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர் டி.கே.கிருஷ்ணசாமி வாண்டையாரின் மகன் ராமனாத துளசிக்கும் திருமண வரவேற்பு விழா நடைபெற்றது.

இவ்விழாவில் கலந்துகொள்ள நேற்று இரவு தஞ்சாவூருக்கு வந்த சசிகலா, தஞ்சாவூர் பரிசுத்தம் நகரில் உள்ள தனது வீட்டில் தங்கினார். பின்னர் இன்று மதியம் 12 மணிக்குக் கிளம்பி பூண்டிக்குச் சென்றார். செல்லும் வழியில் மாரியம்மன் கோயில் அருகே வயலில் நடவுப் பணியில் ஈடுபட்டிருந்த பெண்களைப் பார்த்து, காரை விட்டு இறங்கி அந்தப் பெண்களிடம் சென்று நலம் விசாரித்தார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு பூண்டிக்குச் சென்று திருமண வரவேற்பு விழாவில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்திவிட்டு மீண்டும் புறப்பட்டுத் தஞ்சாவூருக்கு வந்தார்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 970



## ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் திருகோணமலை

*"சிலையாக நின்றாலும் சீரான வாழ்வுதரும்*
*செம்மை சேர் எழிலரசி*
*செவ்வானம் பொழிகின்ற சிங்கார அருள்முத்து*
*தேவியுந் தன் அருளாசியே*
*நித்தமும் சித்தத்தில் நின்றுமே அருளூட்டும்*
*நீடுபுகழ் உலகரசியே*
*நத்திடும் நங்கையர் மாங்கல்யம் காத்திடும்*
*நாயகி மாதரசி நீயே."*

அன்னையின் ஆணையை ஏற்ற இராமேஸ்வரஅந்தணர், தக்கிணகைலாயமாகிய திருகோணமலைக்கு வந்து, கனவிலே குறிப்பிடப்பட்ட இடத்தைத் தேடிக்கண்டுபிடித்து, புதைக்கப்பட்டிருந்த கிடாரத்தினை வெளிக்கொண்டுவந்தபோது, அதனுள் அன்னை ஸ்ரீ பத்திரகாளியின் திருவுருவச்சிலை (தாமிரவிக்கிரகம்), மற்றும் தீபத்தட்டு, பூசைக்குப் பயன்படும் பொருட்கள், ஆகியவற்றைக் கண்டெடுத்தார். அத்திருவுருவத்தை முறைப்படி பூசை செய்து வணங்கி, வழிபட்டுத் தவத்தை மேற்கொண்டார். ஆலயத்திலே காலத்திற்குக் காலம் மாற்றங்கள் ஏற்பட்டபோதிலும், இவ்வாறு கண்டெடுக்கப்பட்ட அம்பாளின் இத்திருவுருவத்தினைத் தற்பொழுதும் ஆலயத்திலே காணலாம். சில விசேட உற்சவ காலங்களில், அம்பாளின் இத்திருவுருவத்தினை எழுந்தருளச் செய்வது வழக்கமாகக் காணப்படுகின்றது.

ஆலயத்திலுள்ள சிங்க வாகனம்பற்றிய கதையும் அற்புதமானது. ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அருளைப் புலப்படுத்துவதாக இக்கதை காணப்படுகின்றது. ஆலயத்திலுள்ள சிங்கவாகனம் கடல் அன்னை அளித்த பரிசாகும். ஒரு சந்தர்ப்பத்தில் இந்தியாவிலிருந்து சிங்க வாகனம் ஒன்றை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட கப்பல், திருகோணமலைக் கடற்பரப்பில், ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு நேராக வந்ததும் ஓட மறுத்துவிட்டது. அம்பிகையின் அருளால் கப்பல் தலைவன் தான் கண்ட சொப்பனத்தின்படி, கப்பலில் இருந்த சிங்க வாகனத்தை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் சேர்த்தபின்னரே மீண்டும் கப்பல் ஓடத் தொடங்கியது. இவ்வாறு, ஆலயத்திற்குச் சிங்க வாகனம் வந்தது பற்றிய கர்ணபரம்பரைக்கதை வழங்கிவருகின்றது. மிகப் பயங்கரமான தோற்றத்துடன் குழந்தையொன்றைக் கவ்விய நிலையில் இந்த வாகனம் காணப்பட்டுள்ளது. பின்னர் சிங்கவாகனத்தினின்றும் குழந்தையை நீக்கிவிட்டு, சிங்கத்தின் பிடரி மயிர் முதல் உடல்வரை சீவிச் சிறுப்பித்துக் காணப்படுவதே, இப்பொழுது ஆலயத்திலுள்ள சிங்கவாகனமாகும். இவ் வாகனம் தொடர்பான கல்வெட்டொன்றும் ஆலயத்திலுள்ளது. ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் மகிஷாசுரமர்த்தனத்திற்கு எழுந்தருளும்பொழுது மட்டுமே சிங்கவாகனம் பயன்படுத்தப்படுகின்றது.

மகிஷாசுரமர்த்தனம் நவராத்திரி விழாவோடு தொடர்புடையது. மகிஷாசுரன் என்னும் அரக்கன் தனது ஆணவத்தால் முனிவர்களுக்கும், ஏனையோருக்கும் துன்பத்தை ஏற்படுத்தி வந்தான். துன்பம் தாங்காது அனைவரும் இறைவனிடம் முறையிட்டனர். அடியவர் துயர்தீர்க்க அன்னை பராசக்தியானவள் துர்க்கை வடிவெடுத்து, மகிஷாசுரனை அழித்து, அனைவரையும் காப்பாற்றி அருள் புரிந்தாள். இந்நாளில் வன்னிவாழைவெட்டும் நிகழும். மகிஷாசுரனாக வாழையொன்றினை உருவகம் செய்தே வாழைவெட்டு நிகழும். மகிஷாசுரமாத்தனம் பல அரிய கருத்துக்களைக் கொண்டது. அன்னை பராசக்தி, அதர்மத்தின் உருவான மகிஷாசுரனை அழித்ததாகக் கூறுவது, மனித மனத்திலே குடிகொண்டுள்ள மகிடமாகிய தாமச (அகங்காரம்) குணத்தை அழித்து, அமைதியான சாத்வீக குணத்தை மக்களுக்கு அருளிய திருநாளாக மகி'ாசுரமர்த்தனத்தைக் கொள்ளலாம்.

சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்ததாகக் கூறப்படும் சம்பவமொன்று, ஸ்ரீ பத்திரகாளியின் மீது மக்கள் பயபக்திகொள்ள வைத்துள்ளது. பொதுவாக அம்மன் எழுந்தருளியிருக்கும் ஆலயச் சுற்றாடல்களில், மக்கள் ஆசாரமாக நடந்துகொள்வது வழக்கம். இதை மீறி நடப்போர் பல துன்பங்களுக்கு ஆளாவதை நடைமுறையில் பலரும் அனுபவித்துள்ளனர். இவ்வாறான சம்பவமொன்று ஸ்ரீ பத்திரகாளி கோயிலோடும் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. யாவுகப் பெண்மணியொருவர் தலைவிரிகோலமாக இவ்வாலயத்தின் முன்பு அகங்காரத்துடன் சென்றார். வீடுசென்ற பெண்மணியுடைய தலை ஒரு பக்கம் திரும்பிக் கழுத்து வாங்கலால் பெரும் அவதிப்பட்டார். அன்று சொப்பனத்திலே, அம்மாளை அவமதித்து ஆசாரமற்று நடந்ததாகக் கனவு கண்டு, தனது குற்றத்தை உணர்ந்து, ஆலயத்திற்கு வந்து, நேர்த்திக்கடனாகத் தனது தலைமுடியைக் கத்தரித்துக் கொடுத்தார். இதன் பின்னர் அப்பெண்மணி கழுத்து வாங்கலில் இருந்து சுகமடைந்தார். இத்தலைமுடியைப் பாதுகாத்து வைத்திருந்து மகிஷாசூரசம்மாரம் நடைபெறும்பொழுது அம்பாளுடைய சடைமுடியோடு சேர்த்துக் கட்டி, அலங்கரிக்கும் வழக்கம் வழமையில் இருந்துள்ளது. இவ்வாறு பெண்மணி நேர்த்திக்கடனாக அளித்த தலைமுடியின் ஒருபகுதி தற்பொழுதும் உள்ளது.

முன்னொருகாலத்திலே இவ்வாலயத்திலே பூசை செய்யும் குருக்கள் ஒருவர் தன்னுடன் தனது மகனையும் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார். இரவுப் பூசை முடிந்ததும், ஆலயத்துள் மகன் இருப்பதை மறந்து ஆலயத் திருக்கதவை மூடிவிட்டு வீட்டிற்குச் சென்றுவிட்டார். வீட்டிற்குச் சென்று சாப்பிடும்வேளையில் பிள்ளையைக் காணாமல் எல்லா இடமும் தேடிவிட்டு ஆலயத்திற்கு வந்து பார்த்தபோது, பிள்ளை அங்கிருப்பதைக் கண்டு மனைவியிடம் மகன் கோயிலுள் இருப்பதைத் தெரிவித்தார். அத்தோடு, பூசை முடிந்து திருக்கதவை மூடியபின் ஆலயத்தைத் திறப்பது சாத்திர விரோதமானது என்றும், காலையில் மகனை அழைத்துவரலாம் என்று மனைவியிடம் கூறியபோதும், மனைவி அதனை ஏற்றுக்கொள்ளாமல், மகனை உடன் அழைத்து வரும்படி கூறினார். மனைவியின் வற்புறுத்தலால் ஆலயத்திற்குச் சென்று கதவைத் திறந்தபோது, ஆலய காவல்தெய்வமாகிய வைரவர் அந்தப் பிள்ளையை இரண்டாகக் கிழித்துப் போடுவதைக் கண்டார்.

*வளரும்...*



# CTCC வளர்ச்சிக்கு வாரி வழங்கிய வள்ளல் சாந்தா பஞ்சலிங்கம்

"தோன்றின் புகழோடு தோன்றுக அகிதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கேற்ப வாழ்ந்து வருபவர் நண்பர் சாந்தா பஞ்சலிங்கம் என்றால் மிகையாகாது. நண்பர் சாந்தா பஞ்சலிங்கத்தின் வாழ்க்கையை பார்க்கும் போது எனக்கு " வள்ளுவமாய் வாழும் பெருந்தகை " என்றே எண்ணத்தோன்றுகிறது .இந்த வேளையில் எனக்கு ஒரு பழமொழி நினைவுக்கு வருகிறது. அதாவது " ஒரு முட்டை போட்டுவிட்டு கோழி ஊரெல்லாம் கொக்கரிக்குமாம் அனால் ஆமையோ ஆயிரம் முட்டை போட்டுவிட்டு அசையாமல் கிடக்குமாம். சாந்தா இரண்டாம் ரகம் அவரால் பயன் அடையாதவர்கள் என்று யாருமில்லை என்று சொல்லுமளவிற்கு உதவி என்று வந்தவர்க்களுக்கு எல்லாம் வாரி வழங்கும் நல்ல உள்ளம் கொண்டவள்ளலாக நண்பர் சாந்தா வாழ்ந்து வருகிறார். புகழை நாம் தேடிக்கொண்டு போகக்கூடாது புகழ்தான் நம்மைத்தேடி வரவேண்டும். அத்தகைய ஒருவர்தான் நண்பர். சாந்தா பஞ்சலிங்கம் புகழ் அனைத்தும் அவரை தேடிவந்த வண்ணமே உள்ளது .

இந்தக் கட்டுரையை எழுதவேண்டும் என்ற எண்ணம் என்னுள் எழ இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் இந்த நாட்டில் உருவாகி இந்த ஆண்டுடன் முப்பது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது. சம்மேளனத்தின் வளர்ச்சியை உயர்ச்சியை பெருமிதத் தோடு பார்க்கிறேன் அதனால்தான் நானடைந்த மகிழ்ச்சியை மற்றவர்களும் அடையவேண்டும் அதாவது "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற வகையில் உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். விளைகின்றேன்

30 ஆண்டுகளுக்கு முன் கனடாவில் ஒரு சில நல்ல உள்ளங்களால் ஆரம்பிக்கப்பட்டது தான் கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளம். அன்று முதல் இன்றுவரை எம்மினத்தின் வளர்ச்சிக்காக வர்த்தக உயர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வந்துள்ளது. எம்மினத்தில் சிறு தொழில் அதிபர்களாக இருந்த பலர் இன்று தத்தமது பெருமுயற்சியால் வர்த்தகத் துறையில் பெரும் புள்ளிகளாக தம்மை வளர்த்துள்ளனர்.இதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது வர்த்தக சம்மேளனம் அவர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு விருதுகள் வழங்கி அத்தகையவர்களை ஊக்கிவித்தமைத்தான் காரணம் இந்தச் சம்மேளனத்தில் டாக்டர்கள் சட்டத்தரணிகள் கணக்காளர்கள் பொறியிலாளர்கள் என் பல்துறைசார் நிபுணர்கள் இணைந்து இருப்பதனால் ஒருவருக்கு ஒருவர் அனுசரணையாக இருந்து தங்கள் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள் ." அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பதைப்போல கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் " ஒரு வரலாற்றை படைத்து வருகிறது.

நண்பர் சாந்தா பஞ்சலிங்கம் என்ற ஒரு தனி மனிதர் இன்றுவர்த்தகத் துறையில் ஒரு விருட்சமாக வேறுன்றி நிற்கின்றார் என்றால் அவரது அசுரவளர்ச்சிக்கு அயராத உழைப்பும் நெஞ்சுறுதியும் சம்மேளனத்தின் உறுதுணையும் தான் காரணம் என்பதனால் வள்ளுவன் சொன்னதைப்போல "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு " இதற்கு கைமாறாகவே நண்பர் சாந்தா பஞ்சலிங்கம் இன்று சம்மேளனத்தின் வளர்ச்சிக்கு தன்னாலான பங்களிப்பை தயங்காது தளராது வழங்கி வருகிறார் .

2004 ம் ஆண்டு ஒரு சாதாரண அங்கத்தவராக சம்மேளனத்தில் இணைந்து கொண்டார். அடுத்து சில வருடங்களில் இவருக்கு சம்மேளனம் அதாவது 2007 ம் ஆண்டு இவரது பணியை ஊக்குவிக்கும் வகையிலும் இவருக்கு "Award of excellence 2007" என்ற விருதினை இவருக்கு வழங்கி கௌரவித்தது சம்மேளனம் தந்த ஊக்கத்தின் காரணமாக தன் Santha electrical & plumbing company என்ற நிறுவனத்தை பல்வேறு வழிகளிலும் விருத்தி செய்து கொண்டார். தனியொரு மனிதனாக தனது நிறுவனத்தை கடந்த 34 ஆண்டுகளாக வளர்த்தெடுத்து வருகிறார். "தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும் "என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கு ஏற்ப தெய்வத்தைவிட தன் உடல் உழைப்பையே பெரிதும் நம்பினார். நாளொன்றுக்கு 16, அல்லது 17 மனித்தியாலயங்களை தன் வேலைக்காக அர்ப்பணித்தார். அதன் பயன் இன்று ஒரு புகழ் பூத்த நிறுவனமாக அதனை உருவாக்கிக் காட்டியுமுள்ளார்.

2008 எட்டுமுதல் 2009 , 2009 முதல் 2010 என இரண்டு ஆண்டுகள் Director ஆகவும் 2010 முதல் Secretary ஆகவும் 2012 முதல் 2013 Executive Vice president ஆக தெரிவு செய்யப்பட்டார். இவரது அபரிமிதமான சேவையை சம்மேளன அங்கத்தவர்கள் மட்டுமன்றி அனைவருமே பாராட்டினர். 2019 ஆம் ஆண்டு நண்பர் சாந்தா. பஞ்சலிங்கம் அவர்கள் சம்மேளனத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். இதில் எனக்கு ஒரு குட்டி பெருமை உண்டு அதாவது அவர் பதவி ஏற்று சிலமணித்துளிகளில் அவரை யுகம் வானொலிக்காக செவ்வி எடுக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அந்தச் செவ்வியில் ஒருவிடயத்தை மிக ஆணித்தரமாக அதாவது அவரது நீண்ட நாள் கனவை வெளிப்படையாக தெரிவித்திருந்தார். அதாவது கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் வாடகைக் குடியிருப்பில்த்தான் இயங்கி வந்தது. சம்மேளனத்திற்கு என்று ஒரு நிரந்தரக் கட்டிடத்தை தன் காலத்தில் வாங்கவேண்டும் என்ற ஆவலை வெளிப்படுத்தி இருந்தார். "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு" அவர் இதை ஒரு கற்பனைக் கதையாக் சொல்லவில்லை .தன்னால் முடியும் என்ற திடமான நம்பிக்கையோடுதான் சொன்னார். சொன்னது மட்டுமல்ல அதனைச் செய்தும் காட்டினார். இதற்காக ஒரு " கட்டிட நிர்மான ஆலோசனைக் குழு " ஒன்றை உருவாக்கி அவர்களது சிறந்த ஆலோசனைகளின் படியும் அறிவுரைகளின் படியும் மிகத் துரிதமாக செயற்படத்தொடங்கினார். குழு அங்கத்தவர்கள் அனைவருமே இரவு பகல் என்று பாராமல் இதற்காக கடுமையாக உழைத்தார்கள். 2020 மீண்டும் தலைவராக ஏகமனதாக தெரிவானார். நண்பர் சாந்தா. பஞ்சலிங்கம் வேலைப்பளு உச்சத்தை தொட்டது. சம காலத்தில் கொரோனா என்னும் கொடிய தொற்று உலகையே உருட்டிப்போட்டது. சம்மேளனமும் இதற்கு விதி விலக்கல்ல. சம்மேளனத்தின் பல பணிகளில் ஒரு தொய்வு நிலை ஏற்பட்டது. அனாலும் சம்மேளனம் பத்திரிகைகள் வானொலிகள் என்ற ஊடகங்கள் மெய்நிகர் ( zoom ) வழியாகவும் தன் அங்கத்தினர்களுக்கு வேன்டிய ஆலோசனைகளையும் அறிவுத்தல்களையும் வழங்கி வழிநடத்தி வந்தது இதில் வெற்றியும் கண்டது. கட்டிடத்துக்கு என்றொரு காணி வேண்டும் என்றால் " வெறுங்கை முலம் போடாது" என்பார்கள்.பெருமளவு பணம் தேவை அதற்காக பல பயனுள்ள திட்டங்களை போட்டு அவற்றின் மூலம் நிதிதிரட்டும் செயற்பாடுகளில் அனைவரும் ஈடுபட்டார்கள். அவற்றில் ஒன்றுதான் வீணை வித்துவான்.

ராஜேஷ் வைத்தியாவின் வீணை இசைக் கச்சேரி .இதில் பெருமளவு பணம் திரட்டப் பட்டது. இந்த வேளையில்த்தான் சம்மேளனத்தின் முன் ஒரு பெரும் கேள்வக்குறி எழுந்தது சம்மேளனத் தலைவர் சாந்தா பஞ்சலிங்கத்தின் தலைமை பதவிக்குரிய காலம் இரண்டாவது ஆண்டும் நிறைவடையும் காலமும் நெருங்கி விட்டது. சம்மேளனத்தின் சட்டதிட்டங்களுக்கு அமைய தலைவர் ஒருவர் இரண்டாடுகள் மட்டுமே பதவியில் இருக்கமுடியும் என்ற நிலையில் நண்பர் சாந்தா பஞ்சலிங்கத்தின்



பதவியை நீடிப்பதா அல்லது புதிய தலைமைக்கு பொறுப்பை கொடுப்பதா என்ற நிலையில் சம்மேளனம் ஒரு பொறுப்பான முடிவை எடுத்தது . "இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல் " என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கேற்ப கட்டிடப்பணியை கச்சிதமாக முடிக்கக் கூடிய ஆற்றலும் ஆளுமையும் நண்பர் சாந்தாவுக்கு உண்டு என்பதனால் சாந்தா பஞ்சலிங்கத்தை மூன்றாம் முறையும் ஏகமனதாக தலைவராக தெரிவு செய்தார்கள். இது அவரது எண்ணத்திற்கும் இலட்சியத்திற்கும் கிடைத்த வெற்றியாகும். சம்மேளனத்தின் வரலாற்றில் ஒருவர் மூன்றாம் முறை தெரிவிசெய்யப்படுவது இதுவே முதல் தடவை. இதன் மூலம் ஒரு வரலாற்றுச் சாதனையயும் அவர் படைத்தார். சம்மேளனத்தின் ஒற்றுமையும் ஐக்கியமும் வெளிப்படையாகத் தெரிந்தது.

## நிதி சேர் நடவடிக்கை

மூன்றாவது முறையாகவும் தலைவராக தெரிவுசெய்யப்பட்டவுடன் தன் பணிகளை முடுக்கிவிடத்தொடங்கினார் " மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண் துஞ்சார் எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் செவ்வி அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார் கருமமே கண்ணாயினார்" என்ற பாடலுக்கு ஒப்ப மூன்றாண்டுகள் கடுமையாக உழைத்தார் தன் குடும்பத்தை தன் தொழிலை எல்லாவற்றையும் மறந்து துறந்து முழுமையான முழுமனதுடன் இதில் ஈடுபட்டார். கட்டிடம் வாங்குவதற்கு பணம் தேவை அவர்தருவார் இவர்தருவார் என்று காலம் தாழ்த்த விரும்பாத நண்பர் சாந்தா பஞ்சலிங்கம் அதற்கான பணத்தை அதாவது 150000 டொலர்களை வாரி வழங்கினார் .இதற்கு ஒரு மனம் வேண்டும் அது பிறவியில் வரவேண்டும் " சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் - நித்தம் நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும் கொடையும் பிறவிக் குணம்" என்ற ஔவையின் பாடலுக்கு ஏற்ப தன் பிறவிக் குணத்தால் இந்த நற்காரியத்தை முன்னுதாரணமாக கொடுத்து உதவினார். சாந்தா பஞ்சலிங்கத்தின் உயர்ந்த குறிக் கோளையும் கொள்கையையும் அறிந்த இளம் தொழில் அதிபர் Trinity Enterprise நிறுவனத்தின் அதிபர் DUNSTAN PETER அவர்கள் " உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு " என்பது போல் இந்த அருமையான திட்டத்திற்கு பல ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கியது மட்டுமன்றி 120000 டொலர்களை வாரி வழங்கினார். அதுவுமன்றி தன நண்பர்களிடமும் பெருந்தொகை பணத்தை திரட்டிக் கொடுத்தார். இந்த வேளையில் நாம் இருவரை மறக்க முடியாது அவர்கள் சம்மேளனத்தின் ஆரம்ப கால உறுப்பினர்களாக மட்டுமல்ல அதன் உருவாக்கத்திற்கும் காரணமாக இருந்தவர்கள் கலாநிதி வசந்தன் ஸ்ரீ கிருஷ்ணன் நண்பர்கள் நண்பர் சாந்தாவுக்கு பலவழிகளிலும் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கி வழிநடத்தி வந்திருக்கிறார். இத்தகைய அனைவரது ஒத்துழைப்போடும் ஆலோசனைகலோடும் தன் கருமங்களை நிறைவேற்றி வந்துள்ளார் சாந்தா பஞ்சலிங்கம்

# C T C C வளர்ச்சிக்கு வாரி வழங்கிய வள்ளல் சாந்தா பஞ்சலிங்கம்

**யார் இந்த சாந்த பஞ்சலிங்கம்**

கல்விவளமும் கலைவளமும் கலந்துறையும் பெரும்பதியாம் உரும்பிராய் என்னும் உன்னத மண்ணில் பிறந்து தன் மண்ணுக்கு பெருமை சேர்க்கும் பெருமகனாக வாழ்ந்து வருகிறார் சாந்தா பஞ்சலிங்கம்.

கனடாவில் C T B C யில் நன்கு அறியப்பட்ட திருமதி.பஞ்சலிங்கம் அம்மாவின் செல்லப பிள்ளைகளில் இவரும் ஒருவர். உருப்பிராய் பள்ளிகளின் வளர்சிகளுக்கு எப்பொழுதும் உதவி வந்திருக்கிறார். அதுவுமன்றி ஸ்காபுறோ வைத்திய சாலைக்கு திரட்டப்பட்ட 30.000 டொலர்களில் 10.000 டொலர்களையும் டொரோண்டோ பலகலைக்கழக தமிழ் இருக்கைக்கு எனத்திரட்டப்பட்ட பணத்தில் 10.000 டொலர்களையும் தந்துதவினார். இங்குள்ள ஊடகங்கள் ஊர்ச் சங்கங்கள் அமைப்புக்கள் ஆகியவற்றிற்கும் அள்ளிக் கொடுத்த வள்ளலாக வளம் வருகிறார் உங்களைப்போல எனக்கும் நண்பர் சாந்தா பஞ்சலிங்கத்தை மிகவும் பிடிக்கும்.சாந்தா என்னைக்கவர்வதற்கு இன்னும் ஒரு சில காரணங்கள் உண்டு.அவற்றில் முதலாவது காரணம் 1994 ம் ஆண்டு என்னை மெய் சிலிர்க்க வைத்த நிகழ்ச்சி நண்பர் சாந்தா அவர்கள் தன்னுடைய குருவாக தனக்கு இந்த பிளம்பிங் தொழிலை கற்றுத்தந்த ஆசானை தன் குருவான திரு. பொன்னுத்துரை ஆசிரியரை அழைத்து கௌரவித்தது என் நெஞ்சைவிட்டு இன்றுவரை நீங்கவில்லை .இந்த நன்றியுணர்வே இன்று சாந்தாவை பல வெற்றிகளை தொடவைத்திருக்கிறது என்றால் மிகையல்ல .

" காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது " அன்று தனக்கு அவர் செய்ய உதவிதான் தன வளர்ச்சிக்கு வித்திட்டது என்ற நன்றியுணர்வோடு நடந்த விழா ஏனையவர்களுக்கும் ஓர் நல்ல எடுத்-துக்காட்டு. இன்று 34 வது ஆண்டாக வெற்றி கரமாக அவரால் நடத்திவரப்படும் SANTHA ELECTRICAL & PLUMBING என்ற நிறுவனம் மட்டுமல்ல K F C மற்றும் TACO BELL போன்ற பெரும் நிறுவனங் களின் கிளை நிறுவனங்களின் பங்குதார ராகவும் அவற்றை வெற்றிகரமாக நடத்தியும் வருகி-றார்.இத்தனை சிறப்புக்கள் அவருக்கு இருந்-தாலும் எப்பொழுதும் அவரிடம் இல்லா-திருந்தது தலைக்கனமே. பைபிளில் ஓர் அழகான வாக்கியம் இருக்கிறது "தன்னைத் தாழ்த்துபவன் உயர்த்தப் படுவான்" என்பதைப் போல அவர் என்றும் எப்போதும் தலைக்கனம் கண்டு யாருடனும் நடந்து கொண்டதில்லை .அதுவுமன்றி அடைந்த 26 ஆண்டுகளில் ஒரு நாள் ஒரு முறையேனும் யாருடனும் கோபித்துக் கொண்டதையோ சினந்து கொண்டதையோ நான் கண்டதேயில்லை அத்தகைய அன்புள்ளம் கொண்டவர் அனைவரையும் அரவணைத்து செல்லும் பண்பு உள்ளம் கொண்டவர் நண்பர் சாந்தா.

**எவரை எப்போது பாராட்ட வேண்டும்**

எவரை எப்போது பாராட்ட வேண்டும் என்று ஒரு பட்டியலே தருகிறார் ஔவைப்பிராட்டியார் "நேசனைக் காணாவிடத்தில் நெஞ்சாரவே துதி-த்தல் ஆசானை எவ்விடத்தும் அப்படியே வாச மனையாளை பஞ்சணையில் மைந்தர் தமை நெஞ்சில் வினையாளை வேலை முடிவில்" அதாவது ஒரு செயல் திறம்மிக்கவரை அவரது செயல்கள் நிறைவடைந்தவுடன் பாராட்ட-வேண்டுமாம் அதனால்த்தான் இந்தப் பாராட்டு. அதுவுமன்றி நண்பர் சாந்தா பஞ்சலிங்கத்திற்கு இன்னுமொரு சிறப்புண்டு. ஆருயிர்த் துணைவனாக அன்புத் தந்தையாக "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது " என்ற குறளுக்கு ஒப்ப இனிய குடும்பத்தாருடன தன் வாழ்க்கையை இனிதுற நடத்தி வருகிறார். ஒரு ஆணின் வளர்ச்சிக்கு பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்பார்கள் என் அருமைச் சகோதரி திருமதி மலர் சாந்தா மிகப் பொருத்தமானவர் "மனைமாட்சி இல்லாள் கண் இல்லாயின் வாழ்க்கை எனைமாட்சித் தாயினும் இல் "அதாவது இல்லற வாழ்வுக் குரிய நற்பண்புகள் மனைவியிடம் இல்லையென்றால் ஒருவனது வாழ்க்கையில் வேறு எத்தனை சிறப்புக்கள் இருந்தும் பயன் ஏதும் இல்லை .அந்தவகையில் தன் கணவருடைய செயற்பாடுகள் அனைத்திற்கும் உறுதுணையாக இருந்து செயற்படுபவர் தங்கை மலர் என்றால் மிகையல்ல. முக் கனிகள் போலும் முத்தான மூன்று பெண் பிள்ளைகளைப் பெற்று அவர்களுக்கு என அருமையான வாழ்வை "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல் " என்று போற்றும் வண்ணம் சிறந்த கல்வி கேள்விகளில் உயரவைதுள்ளார் சாந்தா. அவரது மூன்று அன்புப் பிள்ளைகளும் அவர் வழியே "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை எந்நோற்றான் கொல் எனும் சொல் " இப்படிப்பட்ட பிள்ளைகளை பெற இந்தத் தாய் தந்தையர்கள் என்ன புண்ணியம் செய்திருக்கவேண்டும் என்று சொல்ல வைக்க-வேண்டுமாம் அந்தப் பிள்ளைகளும் இதனை செவ்வனே செய்து வருகிறார்கள் இத்தகைய ஒருநிறைவான வாழ்க்கையை வாழும் நண்பர் சாந்தாவை வாழ்த்தி ஒரு பாடலோடு நிறைவு செய்கிறேன்.

**ஆபத்திற்குதவாப் பிள்ளை அரும் பசிக் உதவா அன்னம் தாகத்தை தீராத் தண்ணீர் தரித்திரம் அறியாப் பெண்டீர் கோபத்தை அடக்கா வேந்தன் குருமொழி கொள்ளாச் சீடன் பாபத்தை போக்கா தீர்த்தம் பயனில்லை ஏழும் தானே "**

இப்படி பயனில்லாத வாழ்க்கையை வாழ்வதை விட தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைக்கின்ற நண்பர் சாந்தா.பஞ்சலிங்கம் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வாழ் வேண்டும் என வாழ்த்தி மகிழ்கிறேன்.

கணபதி ரவீந்திரன்



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# இவ்வார ராசிபலன்

## 29-10-2021 வெள்ளி தொடக்கம் 04-11-2021 வியாழன் வரையும்




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: **0091-9840160068**
**9940431377**





**மேஷம்:** மகிழ்ச்சியும், வளர்ச்சியும், கிளர்ச்சியும் உருவாகக்கூடிய வாரம். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும். அதிகாரியின் ஆதரவு பெருகும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். ஆன்றோர் வாழ்த்து கிட்டும். வியாபார வளர்ச்சியுண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். உறவினரால் தொல்லை நேரும். கொடுக்கல், வாங்கலால் நன்மை நேரும். கொள்கையில் பிடிப்பு ஏற்படும். உடல் உபாதை ஏற்பட்டு தீரும். வருமானம் சேரும். நிர்வாக பொறுப்பு கூடும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும். தொலைதூரப் பயணம் உண்டு. பணிச்சுமைகள் குறையும். வியாபாரம் மந்த நிலை அகலும். கடன் உதவி கிட்டும். தொழிலில் மாற்றம் ஏற்படும். சொந்த தொழில் அமையும். குடும்ப அமைதி கூடும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பணியில் உயர்வு கிட்டும். கவலைகள் அடியோடு விலகும். விவசாயம் கை கொடுக்கும். தீய எண்ணங்கள் விலகும். எள் தானம் ஏற்றம் தரும். தேவைகள் பூர்த்தியாகும். அரசு பணியில் மாற்றம் வரும். குடும்ப அன்யோன்யம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 7,1,3,4
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J





**ரிஷபம்:** பணவரவு லாபம் தரும் வாரம். புத்தி சாதுர்யம் கூடும். புத்திர வழியில் சந்தோஷம் கூடும். புதிய வாகனம் சேரும். தீய எண்ணம் விலகும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். திடீர் தனவரவு ஏற்படும். அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். அரசு உதவிகள் கிட்டும். விவசாய விளைச்சல் அதிகமாகும். வில்லங்கம் விலகும். வியாபாரம் உயரும். ஆலய தரிசனம் ஆறுதல் தரும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். அரசியலில் புகழ் கூடும். திடீர் வரவு உண்டு. கல்வியில் மேன்மை கிட்டும். நெருக்கடிகள் நீங்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். காதலில் கண்ணியம் கூடும். பூர்வீக சொத்து வரும். தொழில் சிக்கல் மறையும். இனிய செய்தியால் மனம் மகிழும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்விச் சலுகைகள் கிட்டும். எதிர்பாராத நன்மை கிட்டும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மன அமைதி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 5,2,4,7
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,O




**மிதுனம்:** சந்தோஷமான நிகழ்வு தரும் வாரம். பாராட்டுக்கள் கிடைக்கும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. முயற்சிகள் அதிகம் தேவை. திடீர் செலவு ஏற்படும். எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. குடும்ப அன்யோன்யம் கூடும். பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். விருந்தினர் வருகை உண்டு. உத்தியோக இடமாற்றம் ஏற்படும். புதிய நட்பு உருவாகும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். வராத கடன் வந்து சேரும். பண வரவு உண்டு. ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பேச்சில் நிதானம் தேவை. பயணத்தால் பலன் உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். குடும்ப கௌரவம் உயரும். பட்டம், பதவி வந்து சேரும். நட்டம் இல்லாத வாரம். சட்டம் சாதகமாகும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சி பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்சிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 8,1,3,9
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**கடகம்:** எதிர்பார்த்த காரியம் நடக்கக்கூடிய வாரம். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடத்தில் மாரிதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். கவனமுடன் செயல்பட வேண்டும். காரிய தாமதம் ஏற்படும். வரவுகள் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். வாகனத்தில் கவனம் தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன்கள் சேரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் பெருகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். மனை வாங்கும் சிந்தனை மேலோங்கும். கலைத்தொழிலில் கவனம் தேவை. பாதகமான சூழ்நிலைகள் அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பைரவர், அதிர்ஷ்ட எண்: 2,1,6,4
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,T




**சிம்மம்:** செல்வாக்கு உயரக்கூடிய வாரம். உடல்பொலிவு கூடும். உற்சாகம் கலை கட்டும். வேலைபளு அதிகரிக்கும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்பார்ப்புகள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். சூழ்நிலைகள் சமாளிக்க சூரிய வழிபாடு அவசியம். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்விச் செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமி வாங்கும் யோகம் உண்டு. சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகள் தரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கண் நோய் வந்து போகும். கவலைகள் ஒழியும். கால்நடைகளால் லாபம் உண்டு. வியாபார விருத்தி ஏற்படும். வேற்றுமை விலகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,6,5,8
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,A




**கன்னி:** பயணங்களால் பணவரவு கிடைக்கக்கூடிய வாரம். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. காரியம் கைகூடும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. வாகன மாற்றம் உண்டு. பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கைகொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல் சோர்வு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். ஏற்றங்கள் அமையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலத்தில் அக்கறை தேவை. ஷேர்மார்க்கெட்டில் லாபம் தரும். பணப்பற்றாக்குறை தீரும். பெற்றவர்களின் வாழ்த்து கிட்டும். வாழ்வில் வசந்தம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. தொலைபேசித் தகவல் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,5,3,8
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,P




**துலாம்:** தேவைகள் பூர்த்தியாகும் வாரம். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். வாக்குவாதங்கள் உருவாகி மறையும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். கஷ்டகாலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். பணியில் உயர்வு கிட்டும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். ஆறுதலான சூழ்நிலை அமையும். உறவினர் வருகை உண்டு. உற்சாகம் கலைகட்டும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். உத்தியோக இடமாற்றம் தரும். வெளியூர் பயணம் வெற்றி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். கடல் கடந்த பயணம் உண்டாகும். ஆனந்தம் குடிகொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விநாயகர், அதிர்ஷ்ட எண்: 1,4,2,9
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Z




**விருச்சிகம்:** ஊக்கத்தோடு செயல்படும் வாரம். நவகிரஹ அனுகிரஹம் கூடும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன் பிறப்புக்களால் நன்மையுண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப்பிரச்சினைகள் விலகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். வாய்ப்புகள் வந்து சேரும். நிர்வாகச் செலவுகள் கூடும். பொறுமையைக் கையாள வேண்டும். பழையக் கடன் தீரும். முத்தான வாய்ப்பு பெருகும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பயணம் அனுகூலம் தரும். பங்குச்சந்தை லாபம் தரும். கனவுகள் நிறைவேறும். பொறுப்புக்கள் கூடும். வெறுப்புகள் அகலும். சிறப்புக்கள் சேரும். தாய் நலனில் அக்கறை தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வியாபாரம் சிறக்கும். நிதி பற்றாக்குறை நீங்கும். வேண்டாத நபர் விலகுவர். திடீர் பயணம் ஏற்படும். மாற்று யோசனை பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 1,4,6,2
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K





**தனுசு:** பெத்தவங்களோட வாழ்த்து கிடைக்கும் வாரம். வாயில் தேடி வரன் வரும். பயணம் அனுகூலம் தரும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தாய்வழி உறவில் கவனம் தேவை. தோற்றப் பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். மனைவி சச்சரவு ஏற்படும். அரசு வாய்ப்பு ஏற்படும். செயல்திறமை அதிகரிக்கும். உத்தியோக வாய்ப்புக் கிட்டும். நலமும், நன்மையும் பெருகும். வேண்டாத நபர் விலகுவர். ஆடை, அணிகலன்கள் சேரும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத் திறமை அதிகரிக்கும். தொழிலில் கவனம் தேவை. பொறியியல் துறை இலாபம் தரும். மாணவர்கள் திறமைகள் பளிச்சிடும். திருமண வாய்ப்பு கூடி வரும். மனஅமைதி கூடி வரும். உடல்நலம் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும். பொருளாதாரம் உயரும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 3,5,9,8
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,I




**மகரம்:** பிரயாணத்தில் பிரபல்யம் கிடைக்கக்கூடிய வாரம். விரும்பிய பொருள் கிடைக்கும். பழைய கடன் வசூலாகும். வாகனச் செலவு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். திறமையில் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத்தொழிலில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்புக் கிட்டும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். பங்குச் சந்தையில் லாபம் பெருகும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். உறவினர்களால் நன்மை உண்டு. காரியத்தடை ஏற்படும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. விவசாயம் பலன் தரும். அரசு வழி ஆதாயம் உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனை அகலும். கவலைகள் ஒழியும். தனலாபம் கூடும். புதிய எண்ணங்கள் உருவாகும். மெத்தனப்போக்கு விலகும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மனோதைரியம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். மனக்குழப்பம் நீங்கும். தர்ம சிந்தனைகள் மேலோங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நந்தி பகவான், அதிர்ஷ்ட எண்: 4,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,R




**கும்பம்:** நினைத்ததெல்லாம் நடக்கக்கூடிய வாரம். குடும்ப வளர்ச்சி பெருகும். கமிஷன் தொழில் லாபம் தரும். பயணத்தால் பலன் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. பிள்ளைகளால் பெருமை சேரும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். பொரியோர்களின் ஆலோசனை பலன் தரும். நட்பு பெருகும். ஆண்கள் அதிகாரம் உயரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். பணவரவு உண்டு. வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். மதிப்புகள் உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். மனோ பயம் அகலும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். கன்னிப்பெண்களுக்குச் சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 0,2,3,7
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,O




**மீனம்:** பணவரவும், மனநிறைவும் கிடைக்கக்கூடிய வாரம். நினைத்தது நிறைவேறும். வாகன மாற்றமுண்டு. மின்சாரத்தில் கவனம் தேவை. குதூகலமான எண்ணம் உருவாகும். குடும்ப கௌரவம் உயரும். வரவுகள் திருப்தி தரும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். கலைத்துறையில் ஆர்வம் கூடும். காரியம் கைகூடும். குடும்ப மேன்மை உண்டாகும். உடல் சோர்வு ஏற்படும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பணப்பற்றாக்குறை தீரும். குளிர்பான தொழிலில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். தொலைபேசி தகவல் தொல்லை தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். சாதக சூழ்நிலைகள் விலகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். மெத்தனப் போக்கு மாறும். சந்தர்ப்பங்கள் சாதகமாகும். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். புதிய நட்பு உருவாகும். சுபச்செய்தி தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,7,8,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,M

(சென்ற வார தொடர்ச்சி) (அத்தியாயம் 32)


# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் இலங்கைப் பயணம்

சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு நமது தென்திசைப் படைகளின் மாதண்ட நாயகனாக இங்கு வந்தேன். இலங்கையில் பல பகுதிகளைப் பார்க்க விரும்பினேன். அதனால் சேனாதிபதி பூதி விக்கிரம் கேசரி ஆயிரம் வீரர்களை என்னுடன் அனுப்பினார். நான் காடு, மேடு, மலை, நதி யாவற்றையும் பார்த்து அப்பிரதேசங்களின் இயல்பைத் தெரிந்து கொண்டேன். இலங்கையைச் சுற்றியுள்ள தீவுகளைப் பார்க்கச் சென்றேன். அப்போது ஒரு காட்டுப் பகுதியில், யானை இறவு என்ற இடத்தில் ஒரு தாவடி போட்டுத் தங்கியிருந்தோம். அங்கு ஒரு புலம்பல் குரல் கேட்டு எல்லோரும் புறப்பட்டோம். அது விசித்திரமான குரல் அது நாங்கள் இருந்த பாசறையைச் சுற்றிக் கேட்டது. நாங்கள் அந்தக் குரல் கேட்ட திசையைப் பார்த்தோம். ஒரு பெண்! அவளைத் தொடர்ந்தோம். அவள் ஓட்டம் பிடித்ததால் யாராலும் அவளைப் பிடிக்க முடியவில்லை. பின் நான் மட்டும் போனேன். தனியாக நான் வருவதால் அந்தப் பெண் என்னை வரவேற்றாள். எனக்கும் பீதியாக இருந்தது மனதைத் திடப்படுத்திக் கொண்டேன். என்னைக் கண்டதும் கண்கள் கலங்கியபடி, கட்டி அணைத்து உச்சி மோர்ந்தாள். ‘யார் நீ? ஏன் இப்படிச் செய்கிறாய்?’ என்று கேட்டேன். அவளால் பதில் சொல்ல முடியவில்லை. அப்பொழுது அவள் முகம் எனக்கு ஞாபகம் வந்தது காவேரி நதியில் என்னைக் காப்பாற்றிய அதே பெண்! நான் பிரமித்து நின்றேன். பின்னர் அவள் ஓடி மறைந்து விட்டாள். மறுநாள் மீண்டும் அங்கு வந்தாள். என்னை அழைத்துக் கொண்டு ஒரு குடிசைக்குள் சென்றாள். அங்கு ஒருவர் பயங்கரமான காயத்தினால் அவதியுற்றுக் கொண்டிருந்தார். பின்னர் தன் சைகையால் எங்களை இந்த இடம் விட்டுப் போகும்படி கூறினாள். நாங்களும் அங்கிருந்து புறப்பட்டோம். எங்களைக் காப்பதற்கே அவள் வழி செய்தாள். என்னில் அளவில்லாத அன்பு கொண்டிருக்கிறாள் என்பதை அறிந்தேன். என்று அந்த ஊமைப் பெண்ணின் கதையை கூறி முடித்தார். மூவரும் படுத்து உறங்குகையில் மீண்டும் எமக்கு ஆபத்து என்று உணர்ந்த அந்தப் பெண் காவேரித்தாய் அவர்களை அழைத்தார். அவர்கள் அந்தப் பெண்ணைத் தொடர்ந்து சென்றனர். அவள் ஒரு மண்டபத்திற்குள் அவர்களை அழைத்துச் சென்றாள். அந்த மண்டபத்தின் உள் சுவரில் சித்திரங்களைக் காட்டினாள். இளவரசர், ‘இவள் வாய் பேச மாட்டாதவளள், தன் கதையை சித்திரமாக வரைந்துள்ளாள்’ என்று விளக்கிக் கொண்டார். அந்தச் சித்திரத்தில், தன்னை ஒரு ராஜகுமாரன் கரடியிடமிருந்து காப்பாற்றினார் என்றும், பின்பு அந்த இளைஞர் தன்னை காதல் கொண்டான் என்றும், அவனை ஒரு நாள் ஒரு கப்பலில் அழைத்து சென்றார்கள் என்றும், அவன் ஒரு அரசகுமாரன், அவன் திரும்பி வருவதாக சென்றான். ஆனால் மீண்டும் வராததால் தான் கடலில் குதித்து உயிர் விட எண்ணினாள் என்றும், தன்னை ஒரு படகுக்காரன் காப்பாற்றி கரையில் சேர்தான் என்றும், அங்கு வந்த ராணி கர்ப்பவதியாய் இருந்த தன்னையும் அழைத்துச் சென்று அரண்மனையில் வைத்திருந்தார் என்றும், தனக்கு இரு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களை ராணியே வளர்த்தாள் என்றும், தான் அங்கிருந்து ஓடிவிட்டாள் பின்பு தன் பிள்ளைகளை பார்க்க காவேரிக் கரைக்கு வருவாள் என்றும், ஒரு நாள் ஒரு குழந்தை காவேரி நதியில் விழுந்தது அதைத் தான் காப்பாற்றினாள் என்றும் அந்தச் சித்திரத்தில் விளக்கியிருந்தாள். அவள் காப்பாற்றிய குழந்தை நான் என்று அறிந்து கொண்டேன். இன்று சில சித்திரங்களுக்கு வர இருக்கும் ஆபத்துக்களை வெளிப்படுத்தினாள். சித்திரங்களை பார்த்த பின்னர் அந்த அறையில் படுத்து உறங்கினாள். மறு நாள் எழுந்து புறப்பட்டாள். சாலையில் குதிரைகள் நாலு கால் பாய்ச்சலில் வரும் சத்தம் கேட்டு இளவரசர், ‘வந்தியத்தேவா உறையில் இருந்து வாளை எடு’ என்றார். பின்னர் வந்தியத்தேவனையே சண்டைக்கு அழைத்தார். சண்டை பிரமாதமாக நடந்தது. அங்கு குதிரையில் வந்த கொடும்பனார் பெரிய வேளாளர் விக்கிரம கேசரி மகாராஜாவும், வீராதி வீரன் பாத்திபேந்திர வர்மனும், மற்றும் அவர்கள் படைகளும், பூங்குழலியும் இவர்கள் சண்டையைப் பார்த்து பிரமித்து நின்றனர். சேனாதிபதி பூதி விக்கிரம கேசரி வந்தியத்தேவனிடம், ‘இம்மாதிரி வலுத்த கத்திச் சண்டை பார்த்து எத்தனை நாளாச்சு’ என்று தட்டிக் கொடுத்தார். இளவரசர் அருள்மொழிவர்மர் பாத்திபேந்திர பல்லவரின் அருகில் சென்று, ‘தங்களைப் பார்க்க விரைந்து வந்தேன். எப்படி என் தமையனார் காஞ்சியில் சுகமாக இருக்கிறாரா? என் பாட்டனார் மலையமான் நலத்துடன் இருக்கிறாரா?’ என்று கேட்டுக் கொண்டார். அதற்கு பாத்திபேந்திரன் ‘அவர்கள் நலமாக உள்ளனர். அவசரமான செய்தி உங்களுக்கு அனுப்பியுள்ளார்கள்’ என்றான். ‘அப்படியானால் இந்த வீதியில் நின்று பேசிக் கொள்ளாமல் மறைவான இடம் செல்வோம்’ என்று அழைத்துச் சென்றார் இளவரசர்.

அப்போது வந்தியத்தேவன், ‘இளவரசே நீங்கள் திடீர் என்று என்னுடன் சண்டையிட்டீர்கள்! காரணம் யாதென புரியவில்லை. ஆனாலும் அந்தப் பெண் பூங்குழலியின் கண் வீச்சால் தோற்றுவிட்டேன் என்றீர்கள். அந்த பெண்ணை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? அவள் தங்களிற்கு ஒரு செய்தி சொன்னாள். என்னால் அதை உங்களுக்கு சொல்ல முடியவில்லை. நேரம் சரியாக கூடி வரவில்லை. இப்பொழுது அவள் இங்கு இருக்கிறாள் அதனால் கட்டாயம் அதைச் சொல்லியே ஆகவேண்டும்’ என்றான். இளவரசரரோ, ‘எனக்கு அவளைத் தெரியவில்லை. இவள் பெயரைக் கேள்விப்பட்டதும் ஞாபகம் இல்லை’ என்றான். வந்தியத்தேவன், ‘ஐயோ இப்படிச் சொல்லாதீர்கள்! அவள் இதயம் வெடித்துவிடும். சரி சமுத்திரக் குமாரி என்று அவளை அழைத்தீர்கள் அதுவாவது ஞாபகம் இருக்கிறதா? கோடிக் கரையில் தாங்கள் பலகலத்தில் ஏறுவதற்காக, படகில் ஏற ஆயத்தமாக இருந்தீர்கள். அப்பொழுது ஒரு பெண் படகு விட்டுக் கொண்டு தன்னம் தனியே வந்தாள். அவளை வியப்புடன் பார்த்து யார் என்று அறிந்து கொள்ளவே கலங்கரை விளக்கத் தலைவரிடம் கேட்டீர்கள். அதற்கு அவர் என் குமாரி பூங்குழலி என்றார். நீங்கள் இல்லை அவள் சமுத்திரக் குமாரி என்றீர்கள். அவள் அதை மறக்கவேயில்லை! என்னையும் இலங்கை கொண்டு வந்து சேர்த்தவள் அவளே’ என்றான். இவர்கள் உரையாடலை பூங்குழலியும் கவனித்தாள். அது தன்னைப் பற்றியது என்பதையும் உணர்ந்தாள். எல்லோரும் கருங்கல் தூண்களையுடைய மாளிகையை அடைந்தனர். அங்கிருந்த மேடான பீடத்தில் அமர்ந்தனர். வந்தியத்தேவனும், ஆழ்வார்க்கடியானும் சற்று விலகி நின்றனர். பூங்குழலி ஒரு தூணின் மறைவில் நின்றாள். இளவரசர் அருள்மொழிவர்மர், ‘பாத்திபேந்திரா என் தமையனும், பாட்டனாரும் என்ன செய்தி தந்தார்கள்?’ என்று வினவினார்.

அதற்கு பாத்திபேந்திரன், ‘சோழ ராஜ்ஜியம் பேராபத்தில் இருக்கிறது. இந்தக் கூட்டுச் சதியை உடனே முறியடிக்க வேண்டும். வட திசைப் படையும், தென் திசைப் படையும் எம்மிடம் உள்ளது. திருக்கோவலூர் மிலாலுடையாரும், கொடும்பனார் பெரிய வேளாளரும் நம் பக்கம் இருக்கிறார்கள். அதனால் உடனே பகைவர்களின் சதியை முறியடிக்க வேண்டும். இதற்கு நீங்கள் இருவரும் ஓரிடத்தில் ஒன்றாக இருக்க வேண்டும். இதனாலேயே தன் தமையன் காஞ்சிக்கு தங்களை அழைத்துவருமாறு விடுப்பு விடுத்துள்ளார். மேலும் தான் கடல் கடந்து செல்ல வேண்டும், அந்தந்த நாடுகளில் புலிக் கொடியை ஏற்றிப் பறக்க விட வேண்டும், இதற்கு தடை போடும் பழுவேட்டரையரிடம் பெரும் மூர்க்கம் கொண்டுள்ளார். தஞ்சைக்கு படையெடுத்து




போய், அவர்களை வென்று, அருள்மொழிவர்மனுக்கு முடி சூட்டிவிட்டு, தான் கப்பலேறிச் செல்ல வேண்டும் என்கிறார்’ என்றான் பாத்திபேந்திரன். இதைக் கேட்டு இளவரசர் காதுகளைக் கையால் பொத்தியபடி, ‘என் தந்தை சக்கரவர்த்தி விருப்பம் என்ன என்பது தெரியாது. நாம் இப்படிச் செய்வது முறையா? முதலில் காஞ்சிக்குப் புறப்படுங்கள். அங்கு வந்து ஆலோசிக்கலாம்’ என்றார் இளவரசர். ‘தளபதியே உங்கள் யோசனை என்ன?’ என்றார். அதற்கு தளபதி, ‘முதல் மந்திரி அநிருத்தர் சொன்னதைக் கேட்டு நீர் இங்கே இருப்பது நன்று என்று எஎண்ணினேன். நேற்று பாத்திபேந்திரனுடனும் வாதாடினேன். ஆனால் இந்தப் பெண் வந்து சொன்ன செய்தியால் என் மனமும் மாறிவிட்டது. தாங்களும், பாத்திபேந்திரனும் உடனே காஞ்சி போவதே நன்று’ என்றார் சேனாதிபதி. ‘அது என்ன செய்தி?’ என்று இளவரசர் கேட்க, ‘நீங்கள் அவளிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்’ என்றார் சேனாதிபதி. அதற்கு பூங்குழலியும் தயக்கத்துடன் வாய்திறந்தாள். ஆனால் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. இளவரசரைப் பார்தாள். பறந்து சென்றாள். அவளைத் தொடர்ந்து வந்தியத்தேவன் சென்றான். சேனாதிபதி தொடர்ந்து சொன்னார், ‘தங்களை சிறைப்படுத்திக் கொண்டு வர பழுவேட்டரையர்கள் இரண்டு கப்பல்களையும், போர் வீரர்களையும் அனுப்பியுள்ளார்கள்! அவை தொண்டமான் ஆற்றுக் கால்வாயில் மறைந்துள்ளன’ என்றார். இதைக் கேட்ட பாத்திபேந்திரன் கொதித்தெழுந்தான். ‘இது என்ன சோழ மக்கள் போற்றும் இளவரசரை, சக்கரவர்த்தி சிறை பிடித்த வரக் கட்டளை இட்டடாரா? இது நம்ப முடியாத செய்தி’ என்றான்.

பின்பு இளவரசர் ஆழ்வார்க்கடியானை நோக்கினார். அப்பொழுது அவன் தனது குருநாதர் அநிருத்தரின் நோக்கின்படி, ‘இலங்கையில் இருப்பதே நன்மை பயக்கும்! இங்கு கூட பகைவர்கள் இளவரசரைக் கொல்லப் பார்த்தார்கள். அதுவும் பாத்திபேந்திரனுடன் வந்த இருவர்! அவர்கள் எம்மேல் இடிந்து விழ இருந்த வீட்டின் முகப்பில் நின்றதைக் கண்டேன். மீண்டும் தீ வைத்து நாம் படுத்திருந்த வீட்டை கொளுத்தினார்கள்’ என்றான். பாத்திபேந்திரனோ, ‘அவர்களை நான் திருகோணமலையில் சந்தித்தேன். அவர்கள் இளவரசர் இருக்குமிடத்தைக் காட்டுவதாக என்னை அழைத்து வந்தார்கள். அனுராதபுரத்தில் திடீரென்று மறைந்து விட்டார்கள்’ என்றான் பாத்திபேந்திரன். ‘அவர்கள் யார் என்று உனக்குத் தெரியாதா?’ என்று கேட்டார் இளவரசர். ‘ஆம் ஆம் சோழ குலத்தை அடியோடு ஒழித்துவிட சபதம் செய்தவர்கள் அவர்கள். அவர்களே இளவரசரைக் கொல்லத் தேடுகிறார்கள்!’ என்றார் ஆழ்வார்க்கடியான். பூங்குழலியின் பின்னால் சென்ற வந்தியத்தேவன், ‘பூங்குழலி எங்கள் இளவரசருக்கு நாலா பக்கமும் ஆபத்து நெருங்குகின்றது. நானும், நீயும் சரி அவரில் நிறைந்த அன்பு கொண்டுள்ளோம். நீ வந்து இங்கு பார்தவற்றையும், கேட்வற்றையும் சொல்’ என்று அழைத்தான். அவளோ, ‘என் அண்டை வந்தால் உன்னை என் கத்தியால் குத்திவிடுவேன்’ என்றாள். வந்தியத்தேவன் திடீர் என்று அந்தக் கத்தியைப் பிடுங்கி வீசி எறிந்தான். அப்பொழுது விண் என்ற குரல் கேட்க, இருவரும் அந்த இடத்திற்கு சென்றார்கள். அங்கு அந்தப் புதர் அருகில் இரத்தம் சிந்திக் கிடந்தது. அப்பொழுது வந்தியத்தேவன் யாரென்று பார்த்தான். பூங்குழலி, ‘இங்கு யாரோ மறைந்திருந்து இளவரசரைக் கொல்ல முயற்சி செய்திருக்கிறார்கள்’ என்று மனமிரங்கி திரும்பி வந்தாள். அப்போது இளவரசர், ‘சமுத்திரகுமாரி என்னை நினைவிருக்கிறதா?’ என்றார். இதைக் கேட்ட பூங்குழலி உள்ளம் குளிர்ந்து, மலர்ந்து நின்றாள். ‘தொண்டை மான் நதியில் இரண்டு மரக்கலங்கள் வந்து, மறைவான இடத்தில் இருப்பதை நீ கண்டாயா? அங்குள்ள வீரர்கள் பேசிக் கொண்டதை நீ கேட்டாயா? பின்பு நீ சேனாததிபதியைத் தேடி வந்து செய்தி சொன்னாயா?’ என்று வினவினார், பூங்குழலி, ‘நினைவிருக்கிறது நான் நடந்தவற்றையும், என் காதுகளில் கேட்டவற்றையும் அப்படியே சொல்கிறேன் மேலும் இந்த சக்கரவர்தியின் கட்டளை இலங்கையில் இருக்கும் சேனாதிபதி பெரிய வேளாளர் பூதிவிக்கிரமகேசரிக்குத் தெரிந்தால் அவர் இளவரசரை தப்புவிக்க முயற்சிப்பார் என்றார்கள். இவர்களை கொல்ல வேண்டும் போல் எனக்கு கோபம் வந்தது. அப்படி அவர்கள் பொய் பேசினார்கள். தாங்கள் இந்த நாட்டில் உள்ள புத்த குருக்களுடன் சேர்ந்து கொண்டு, இலங்கை ராஜ்ஜியயத்திற்கு மன்னராக முடி சூட்டிக் கொள்ள சூழ்ச்சி செய்தீர்கள் என்ற குற்றச் சாட்டிற்காக உங்களை கைது செய்து சிறைப் படுத்துவோம் என்றார்கள்.’ என்றாள். இதனைக் கேட்ட இளவரசர், ‘சேனாதிபதியே என் தந்தையின் ஸ்தானத்தில் இருப்பவர் நீங்கள்! இதனால் என் கடமையை முழுமையாக செய்ய அருள் தாருங்கள். அங்கு சென்று என்னை ஒப்படைக்கப் போகிறேன். அரசரின் கட்டளை எதுவானாலும் அதன்படி நடந்து கொள்வது என் கடமை’ என்றார் இளவரசர். ‘அது நியாயமானது, ஆனால் சக்கரவர்த்தியை சிறைப்பிடித்து வைத்துள்ள பழுவேட்டரையர், அதிலும் இவர் இந்தப் பிராயத்தில் மணமுடித்துள்ள அவர் மனைவி அவளைப் பற்றிய உண்மைகளை நேற்று வரை நானே அறிந்து கொள்ளவில்லை. நேற்று இரவு பாத்திபேந்திரன் மூலம் அறிந்து கொண்டேன். அதை தாங்களும் அறிந்து கொள்வது அவசியம், மூன்று வருடங்களுக்கு முன்னால் மதுரைக்கு அருகில் வீரபாண்டியனோடு இறுதி யுத்தம் நடந்தது. அப்பொழுது தங்கள் தமையனார் கரிகாலரும், பாத்திபேந்திரனும், நானும் முன்னொரு தடவை வீரபாண்டியன் ஓடி ஒளித்தது போல் இம்முறை விடலாகாது தேடிப்பிடித்து அவன் தலையைக் கொண்டு போகாமல் தஞ்சாவூர் போவதில்லை என்று முடிவு கட்டினோம். இதன் பொருட்டு அவனை ஒரு குடிசையில் கண்டு கொண்டோம். தங்கள் தமையனார் உள்ளே சென்று வீரபாண்டியன் தலையுடன் மீண்டு வந்தான். நாங்கள் எங்கள் காரியம் வெற்றி என்ற புகழுடன் திரும்பினோம். அங்கு ஒரு குடிசையில் ஒரு பெண் கரிகாலரைத் தடுத்து, என் காதலரைக் கொல்ல வேண்டாம் என்று உயிர் பிச்சை கேட்டாள். கரிகாலர் அவளை உதைத்து தள்ளி விட்டு அவன் தலையை கொய்தார். கரிகாலரிடம் உயிர் பிச்சை கேட்டவள் தான் நந்தினி. இவள்தான் பழுவேட்டரையரை மணந்து, இன்று பழுவூர் ராணியாக வந்துள்ளாள்’ என்றார் சேனாதிபதி.

-------------------------------------------------------------------------------- (தொடரும்...)

Jenita.Jaffna@gmail.com

தொகுப்பு, எழுத்தாக்கம்:
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை, மாதினி நிமலன**

# கடந்தவையும் கடப்பவையும் (7)

- உமா மோகன் -

அப்படியே வண்டித் தரிப்பிடத்தை நெருங்கிடுவர் இருவரும் தான்
எப்படியும் வண்டிவரத் தாமதமாகும் என்றிடவே

பக்கத்துக் கடைக்குள் பக்குவமாய்
உட்புகுவர் - அங்கு
எத்திக்கும் கண்ணுக்கு விருந்தாகும் வண்ண வண்ணப் பொருட்கள் பல

அழகாக அடுக்கி வைத்திருப்பர் - உள்ளே
எழும் சாம்பிராணி வாசமோ மங்களமும்

தூய்மையும் கொண்ட அழகான
அந்திநேரம் வருவதனை உணர்த்தி நிற்கும்

வண்ண வண்ணக் காப்புக்கள் வகைவகையாய்த்தோடுகள்
கண்ணைக் கவரும் நல்ல முத்து மாலைகள்

இரத்தினம் பதித்ததுபோல் அத்தனை அழகில்
ஆரங்களும் அங்கிருக்கும் - ஆனாலும்

அவர்கள் வாங்குவது அன்றைய நதியாத் தோடுகளும் அழகிய வண்ணப்
பொட்டுக்களுமே - பின்

அன்றைய நாளில் மக்கள் அதிகம் கூடும் - அவர்தம்
குன்றாத கல்வித் தரம் உணர்த்தும்

புத்தகக் கடைக்குள் புகுந்திடுவர் - அங்கு
எத்தனை வகைப்பட்ட புத்தகங்கள்

தரப்படியும் வகைப்படியும் அங்கிருக்கும்
பயிற்சிப் புத்தகங்கள் பல அங்கு - இங்கு

இப்போ பாடசாலைப் படிப்புமட்டும் போதுமாம் -
தப்பாகும் மேலதிகமாய் படித்து விட்டால்

என்பது போல் சொல்லுவார்கள்

முப்பொழுதும் படித்தபடி இருந்தவர்க்கு இதை
எப்பொழுதும் ஏற்கேலாது

அன்று அக்கடையில் அம்புலிமாமாவும் இருந்ததுண்டு
என்றாலும் அவர்கள் வண்ணப் படங்கள் உள்ள நல்ல

ஒட்டிகளை (stickers) மட்டுமே தேர்ந்தெடுப்பர் - பின்
மறுபடியும் வண்டித் தரிப்பிடம்

போட்டி போட்டு ஏறிக் கொள்ளும் நிலை வரவே - அதில்

போகேலாது என்றதொரு நிலையும் வரும்

பக்கத்துப் பாடசாலை அண்ணாக்கள்
பாவம் பார்க்கும் சுபாவம் கொண்டவர்கள்

பாரமான புத்தகப் பைகளை சாளரம் வழியாகப்
போடுவார்கள் வாங்கி, ஆதலால் நெருங்காது ஏறி - அவ்

இருப்பிடம் தேடி இருப்பதுண்டு - அங்கு அன்று
வரிசையாக நின்று ஏறுவது இல்லை - இங்கு என்றும்

வரிசையின்றி இடிபட்டு ஏறுவது இல்லை பொறுமையாய் ஏறுவார்கள்

இரண்டு நிமிடத்துள் இருபது பேர் ஏறிடலாம் - அன்று அங்கு
இரண்டு நிமிடங்கள் இடிபட்டு பின் இரண்டு பேர்
தான் ஏறுவது

பைகளைப் போட்டுவிட்டு பையப் பைய ஏறுவதைப் பார்த்து வந்த அண்ணன் போலும்

ஒரு நாள் தானாக உதவ வந்தார்
இரு பைகளையும் போட்டு விட்டார்- நன்றியோடு

ஒய்யாரமாய்க் கையசைத்து பொறுமையாக
நல்லபடி உள்ளே போனால் - அங்கு

போட்ட இடத்தில் பைகள் இல்லை
கேட்டுப் பார்த்தால் பதிலும் இல்லை

பைகளைப் போடும் போதே சைகை காட்டி
இருத்தி விட்டார் நண்பர்களை
பேய்த்தனமாய் ஏமாந்த பேதைகளின்

பைகள் கையில் வரக் கனநேரம் ஆனதன்று
கைகளில் அவை கிடைத்திடவே - கண்கள்

அண்ணனை எரித்ததனை நினைத்துப் பின் சிரிப்பதுண்டு - அன்று

உதடு ஒட்டும் பாலப்பழம் உண்டதனால்
தவறி விட்டார் அண்ணர் அவர் - எங்கள்

தன்மையினைப் பார்க்காது.

இப்படி இருந்த பள்ளி வாழ்க்கை
எப்படியோ மாறிப் போச்சுப் பின்னாளில்

ஏன்????
எப்பொழுதும் வெடிச்சத்தம்

அங்கொன்றும் இங்கொன்றுமாக
ஆங்காங்கு வெடித்தவை - பின்

அங்கேயும் நிலைகொண்ட கதையுண்டு - பின்
எங்கே தான் போவது என்றொரு நிலை வர

நீண்ட தூரம் போவோரெல்லாம்
அண்டையைத் தான் தேடினார்கள் -கற்பதற்காய்

எந்த இடம் வசதியோ
அந்த இடம் போனாம் அன்று

வெந்த புண்ணில் வேல் பாச்சியதாய்
உணர்ந்ததுண்டு
சேர்ந்த இடச் செய்கைகளால்,

பொங்கிடும் கடற்கரை ஓரத்துப்
பெண்கள் பாடசாலை அது

அண்டையில் இருந்ததானால் அதுவே
சண்டைக் காலத்துக்கு உகந்ததென

தள்ளிவிட்டார் தாத்தாவும் - ஆரம்பத்தில்
எள்ளளவும் ஒட்டவில்லை - அன்று

நதிக்கரைத் தவளை ஒன்று கிணற்றுக்குள்
குதித்தது போல் உணர்ந்து கொண்டேன்

முப்பது வருடங்கள் முழுமையாக
எக்குறையும் காணாது வாழ்ந்த மகள்

காதல் வயப்பட்டோ அன்றி
வரும் காலத்துணைக்கு என்றோ

தாலி ஒன்று கட்டிக்கொண்டு - தாய்
வீடுவிட்டு வரும் போது

அன்றுதான் பிறந்தவள் போல் - அவளை
ஒன்றுமே தெரியாதவளாய் எண்ணி

அதிகாரம் செய்யும் கணவரைப் போல் - அப்
பரிவாரங்கள் செய்தன பரிகாசங்கள் பல

(தொடரும்)


## CAREGIVER WANTED (LIVE-IN)

- Looking for a Male caregiver to look after a 91-year-old father and 78-year-old mother
- The language requirement will be English and Tamil
- Someone who is caring, trustworthy and who would live with them like a part of the family
- Previous experience, related training and passion for the job will be an asset
- Salary will be negotiated
- Interested candidates, please email your resume to **nmaithely@gmail.com**


# தினசரி யோகா தரும் அற்புதங்கள்



நம் முன்னோர்கள் எமக்கு பல நன்மைகளை கற்றுக்கொடுத்துள்ளனர். அதில் முக்கியமான ஒன்றுதான் யோகா கலை. யோகா என்பது பல கோணங்களில் உடலை சுருக்கி செய்யும் பயிற்சி. இதன் மூலம் மனதையும் உடலையும் இணைத்து ஆரோக்கியத்தை பெற முடியும். யோகாவின் சக்தியை பற்றி சொல்ல வார்த்தைகளே இல்லை. இதை அனுபவித்தால் தான் அதன் நன்மைகளை உணர முடியும்.

இரத்த அழுத்தத்தை சீராக்குதல், மன அழுத்தத்தை குறைத்தல், கொழுப்புத் தன்மையை நீக்குதல் போன்றவைகளை யோகா செய்கின்றது. உடல் எடை-யை குறைப்பதுடன், இந்த யோகா அழகான உடல் அமைப்பை பெறவும் உதவுகின்றது. இவை அனைத்தையும் விட யோகா மன அமைதியை முழுமையாக கொடுக்கின்றது. இதை தொடர்ச்சியாக செய்வதன் மூலம் மன அழுத்தத்தை போக்கலாம். இப்போது யோகாவை தினமும் செய்வதால் ஏற்படும் நன்மைகள் என்னவென்று பார்ப்போம்.

இரத்த ஓட்டத்தை அதிகரிக்கும் : யோகாவின் பல வித அமைப்புகள், சுவாசம் மற்றும் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கக் கூடியது. இதனால் உடலின் அனைத்து பாகங்களுக்கும் இரத்த ஓட்டமானது சீராக இருக்கும்.

இதயம் : யோகாவின் மூலம் இதய நோய்களை கூட குணப்படுத்த முடியும். இதனால் இரத்த ஓட்டம் சீரடைந்து இரத்த அடைப்பை போக்கி ஆரோக்கியமான இதயத்தை பெற முடிகின்றது.

வலி நிவாரணி : யோகாவின் மூலம் தசைகள் தளர்வடைவதால் முதுகு வலி கால் வலி போன்ற வலிகளில் இருந்து விடுபடலாம். உட்கார்ந்த இடத்தில் வேலை பார்ப்பவர்களும் சாரதிகளும் தினமும் யோகா செய்ய வேண்டும். இதனால் முதுகு தண்டுகளில் பிடிப்புகளை போக்க முடியும்.

சீரான சுவாசம் : மூச்சு பயிற்சியால் சீரான சுவாசத்தை பெற முடியும். யோ-கா செய்வதால் நுரையீரல்களை சீர்படுத்தி சீரான சுவாசதத்தைப் பெறலாம். அதிலும் ஆழமான மூச்சு பயிற்சி உடல் வலிமையை கூட்டி மன அழுத்தத்தை போக்குகின்றது.

தொப்பையற்ற வயிறு : தொப்பையற்ற வயிற்றை பெறலாம் என்று அறியும் முன்னர் எந்த பயிற்சியாலும் இந்த தன்மையை எளிதில் பெற முடியாது என்ற உண்மையை புரிந்து கொள்ள வேண்டும். நவுக்காசனா (நவகாசன) உ"த்ராசனா (உ"ட்ராசன) க்ரஞ்சஸ் (சிருஞ்சஸ்) போன்ற யோகாசனங்களை தினமும் செய்தால் தொப்பையற்ற வயிற்றை பெறலாம். இதனுடன் சீரான உணவு முறையையும் பின்பற்ற வேண்டும்.

மன அமைதி : யோகா சுவாகக் கோளாறை சரிசெய்து, மூளையையும், உடல் ஆரோக்கியத்தையும் பலப்படுத்துகின்றது. அதிலும் அன்றாடம் சிக்கலுக்குக் உள்ளாக்கப்படும் மூளையின் உட்பிரிவு சம்பந்தமான பிரச்சினைகளை சரிசெய்கின்றது. யோசிக்கும் திறனுக்கும், உருவாக்கும் திறனுக்கும் உள்ள சமநிலையை உருவாக்கும் தன்மை யோகாவிற்கு உள்ளது.

உடலுக்கு ஊக்கம் : நோயற்ற உடலே ஆரோக்கியமானது என்று இல்லை, மூளைக்கும் உணர்வுக்கும் சமநிலை இல்லாத நிலையும் ஆரோக்கியமற்றதே. யோகா செய்வதால் முழுமையான உடல் அமைப்பையும், ஆரோக்கியத்தையும் பெற முடியும். மேலும் நோயற்ற வாழ்வை மகிழ்ச்சியுடனும், மன அமைதியுடனும் கொண்டாட முடியும்.

கர்ப்ப காலம் : கர்ப்பத்தின் போது சிறந்த உடலமைப்பை பெற யோகா செய்ய வேண்டும். யோகா செய்வதை வழக்கமாக்கி கொண்டால், சோர்வைப் போக்கி, டென்'னை தவிர்த்து, திசுக்களை தளர்வடைய செய்து, இரத்தத்தை பெருக்கி, செரிமான தன்மையை அதிகப்படுத்தி, நரம்புகளை சீராக்க முடியும். மேலும் கர்ப்பக் காலத்தில் ஏற்படும் இரத்த சோகை, முதுகு வலி, கால் வலி, செரி-மானம் கெடுதல் போன்றவை சீரடையும். யோகா செய்வதற்கு முன் மருத்துவரின் ஆலோசனையை பெறவும்.

என்றும் இளமையான சருமம் : தினமும் யோகா செய்வதால் இரத்த ஓட்டம் சீராக்கப்படுகிறது இதனால் சருமத்தில் புது கலங்கள் உருவாகும். இது எமது சருமம் என்றும் ஆரோக்கியமாகவும் இளமையாகவும் இருக்க உதவி செய்கிறது " தினமும் யோகா செய்வதால் எமது வாழ்க்கையில் ஏற்படும் சிறந்த மாற்றங்கள் எண்ணற்றது "

- இரா சஹானா

# Carefirst Family Health Team

## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# NUCLEUS UNIVERSITY

## SCHOOL OF MEDICINE

4-Year MD Program for Undergrad
5-Year MD Program for High School Grads
Clinicals conducted at USA teaching hospitals
Pre-Medical Classes conducted in Brampton
Graduates can write US & Canadian Licencing Exams

## SCHOOL OF DENTISTRY

4-year DDS Program for Undergrads
5-Year DDS Program for High School Grads
Doctor of Dental Surgery Program conducted in Aruba
Pre-Dental Classes conducted in Brampton
Graduates can write US & Canadian Licencing Exams

- Canadian Owned University in one of the safest Caribbean country of Aruba
- Become a practicing Medical Doctor or Dentist in Canada or USA
- Within 5 years for High School graduates or 4 years for University undergraduates
- Pre-medicine courses can be completed in Brampton campus for high school graduates.
- Affordable tuition fees, scholarships available to outstanding students.
- Clinical training at Johns Hopkins affiliated hospitals in the USA

**For more information contact admissions office at: (416) 910-8750**

**தமிழில் உரையாட அழைக்கவும், Dr. Balachandar: (416) 545-7080**

**NUSOM.ORG**

# 10ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்:

12
-
02
-
1952

இறைவன் அடியில்:

15
-
11
-
2011



## சிறிதரன் தியாகராஜா

அன்பையே அடித்தளமாக அமைத்து
கருணையே வடிவமாக
ஒற்றுமையை நிலை நாட்டி
பொறுமையுடனும் புன்னகையுடனும்
உத்தம குடும்பத் தலைவனாய் வாழ்ந்து
குடும்பத்தின் மூத்த ஒளிவிளக்காய் திகழ்ந்து
எம்மை கண்ணை இமை காப்பதுபோல் காத்து
பாசமும் நேசமும் நிரம்பிய எங்கள்
அன்பு அண்ணாவே! அந்த ஒரு நிமிடம்
என் கண்ணில் வந்து போகின்றது!

கதறினோம், கலங்குகின்றோம்!
இன்னும் ஓர் நப்பாசை திரும்பி எங்களிடம்
வரமாட்டீர்களா என்று.
நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து ஆண்டுகள்
பத்து ஓடி மறைந்தாலும்
இன்னும் எங்கள் இதயத்தில் இடம்பிடித்து
எமக்கு வழிகாட்டியாக இருக்கின்றீர்கள்!
உங்கள் பிரிவால் வாடும் உங்கள்
அன்புத் தம்பி குடும்பத்தின்
கண்ணீர் அஞ்சலி இது!


உங்கள் ஆத்மா சாந்தியடைய
வேண்டி நிற்கும் அம்மா அன்பு மனைவி
பிள்ளைகள். சகோதர சகோதரிகள் பெறா
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உங்களை நேசிக்கும்
அத்தனை உறவுகளும்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு: 19-02-1938
இறப்பு: 22-10-2021



## திரு. கார்த்திகேசு யோகராஜா

**யாழ். அச்சுவேலி தம்பாலை சந்நிதிறோட்டைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வதிவிடமாகவும் கொண்ட திரு. கார்த்திகேசு யோகராஜா அவர்கள் 22-10-2021 வெள்ளிக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,

தனலட்சுமி (கனடா) அவர்களின் அன்புக் கணவரும்,

கருணாகரன் (சுவிஸ்), சுமதி (கனடா), இலட்சுமிகரன் (சுவிஸ்), சிவாகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும்,

வாணிதேவி (சுவிஸ்), வரேந்திரன் (கனடா), பாரதி (சுவிஸ்), சர்மிளா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும்,

காலஞ்சென்றவர்களான இரத்தினம், கலாநிதி சித்திரவடிவேல், பரம்சோதி (பவா), தவம், தனலட்சுமி (தனம்), பாலசுப்பிரமணியம் (காந்தி), மற்றும் ஆறுமுகநாதன் (கட்டி - இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,

சாரூஜா, யாதவ், பாகேசன், தினேசன், காரூண்யா, யோசஸ், திவ்யா, ஹர்ஷிதா, கைலேஷ், அக்ஷே ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

***அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 28-10-2021 வியாழக்கிழமை அன்று நடைபெற்றன.***

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
கருணாகரன் (அப்பன்-சுவிஸ்) மகன்: 41792047024, 41344456642
சுமதி (கனடா) மகள்: (647) 667-839, (416) 293-4436
இலட்சுமிகரன் (கண்ணன்-சுவிஸ்) மகன்: 41793609864
சிவாகரன் (சிவா-கனடா) மகன்: (416) 566-0379
பாகேசன் (கனடா) பேரன்: (647) 8024483
ஆறுமுகநாதன் (கட்டி-இலங்கை) சகோதரன்: 94770774110


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

25 வது வெள்ளி விழா 2021 UTHAYAN உதயன்

JRS AUTO TECH.CA INC
All Mechanical & Electrical Repairs
9 AM TO 9 PM – 7 DAYS A WEEK
ENGINE TRANSMISSION
RUSTPROOFING OILCHANGE
TYRES AUTOGLASS & TINT
416-206-9489 | 416-628-4399
2655 Lawrence Ave, E, Unit 5 Scarborough, ON M1P 2S3

உதயம் 1334 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 29, 2021

# கனடா உதயன் பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டில் மலேசியா வாழ் தமிழ்க் குழந்தைகளின் நாவன்மை ஆற்றலை மேம்படுத்தும் நிகழ்ச்சி




கனடா உதயன் பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டில் உதயன் நிறுவனம் தொடர்ச்சியாக நடத்தி வரும் பல்வேறு கலை இலக்கிய மொழி சார்ந்த நிகழ்ச்சிகளில் மலேசியா வாழ் தமிழ்க் குழந்தைகளின் நாவன்மை ஆற்றலை மேம்படுத்தும் இந்த நான்காவது அரங்கிற்கு கனடா வாழ் கலை இலக்கிய அன்பர்கள் மற்றும் தமிழ்ப் பெற்றோர் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்- கனடிய நேரம் 31-10-2021 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பம்.

**Zoom ID; 884 8635 3206 Pass code:JAS6855**

---

*கனடா உதயன் பத்திரிகையின் வெள்ளி விழாக்குழு*

## நல்ல படைப்புக்களை நாம் படிக்க வேண்டுமானால் சிரமப்பட்டே அதைச் செய்ய வேண்டும்

### ‘சிந்தனைப் பூக்கள்‘ நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் அ. சந்திரகாந்தன் தெரிவிப்பு




”தமிழர்கள் மத்தியில் ஆய்வுகள் இடம்பெறுவதும் ஆய்வுகள் தொடர்பான நூல்கள் வெளிவருவதும் அதிதாகவே உள்ளன. நல்ல நூல்களை நாம் படிப்பதற்கு சிரமப் பட்டே அதைச் செய்யவேண்டும். அல்லாவிடில் படித்து முடிக்க முடியாது. மேலும், நூல்களைப் படிப்பதற்கும் வாசிப்பதற்கும் வேறுபாடுகள் உண்டு. வாசிப்பதிலும் பார்க்க படிப்பதினாலேயே அதிக பயன் உண்டு என்பது எனது நம்பிக்கையும் அனுபவமும் ஆகும்.

இவ்வாறு தெரிவித்தார் ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர் பேராசிரியர் அமுது சந்திரகாந்தன் கடந்த 22ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை ஸ்காபுறோ தமிழிசைக் கலாமன்ற மண்டபத்தில் நடைபெற்ற “சிந்தனைப் பூக்கள் “ நூல்கள் வெளியீட்டு விழாவில் நயவுரையாற்றியபோது இவ்வாறு தெரிவித்தார்.

*(தொடர்ச்சி உள்ளே 29ம் பக்கத்தில்)*

## Anita Anand, MP for Oakville, named as Canada's New Defence Minister

## இந்திய வம்சாவழி கனடியரான அனிற்றா ஆனந்த் கனடாவின் புதிய பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றுக்கொண்டார்



கடந்த திங்கட்கிழமையன்று பதவிப் பிரமாணம் செய்து கொண்ட கனடாவின் புதிய அமைச்சரவையில் இந்திய வம்சாவழி கனடியரும் ஒன்றாரியோ மாகாணத்தின் ஓக்வில் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரும் இந்தியாவின் தமிழ்நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான அனிற்றா ஆனந்த் கனடாவின் புதிய பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றுக்கொண்டார்.

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Homelife/Future Reality Inc., Brokerage
Joy H.Selvanayagam Broker

## Meet and Greet Event with Chief Nishan Duraiappah of Peel Region's Police

## Hosted by Panjabi Broadcasters Association

## பீல் பிராந்திய பொலிஸ் திணைக்களத்தின் தலைமை அதிகாரி தர்சன் துரையப்பா உடனான ஒரு சந்திப்பு



கனடாவில் சீக்கிய இன மக்களும் ஈழத்து மற்றும் தமிழக தமிழர்களும் அதிகமாக வாழும் பீல் பிராந்தியத்தில். இன்னும் குறிப்பாக பிரம்டன் மாநகரில் வாழும் பொது மக்களுக்கும் பொலிஸ் திணைக்களத்திற்கும் உறவையும் புரிதலையும் ஏற்படுத்தும் நோக்கோடு நேற்று புதன்கிழமை மாலை பிரம்டன் மாநகரில் ஒரு சந்திப்பு வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த சந்திப்பில் பீல் பிராந்திய பொலிஸ் திணைக்களத்தின் தலைமை அதிகாரியான தர்சன் துரையப்பா அவர்களோடு அவரது திணைக்களத்தின் பிரதித் தலைமை அதிகாரிகள் பொலிஸ் அத்தியட்சகர்கள் என பல அதிகாரிகளும் பஞ்சாபி இனம் சார்ந்த ஒலிபரப்பாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் அதிபர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

*(தொடர்ச்சி உள்ளே 9ம் பக்கத்தில்)*

## உதயன் நிறுவனத்தின் பத்திரிகை விநியோக மேற்பார்வையாளர் யோகராஜா காலமானார்



எமது ‘உதயன்’ பத்திரிகையின் விநியோக மேற்பார்வையாளராக கடந்த பல வருடங்கள் கடமையாற்றியவரும் அச்சுவேலி தம்பாலையைச் சேர்ந்தவருமான கார்த்திகேசு யோகராஜா அவர்கள் கடந்த 22ம் திகதி வெள்ளியன்று ஸ்காபுறோவில் காலமானார். ‘உதயன்’ பத்திரிகை விநியோகப் பணிகளில் மிகவும் சிரத்தையுடன் பணியாற்றிய இவர் தமிழர் வர்த்தக நிறுவனங்களின் மத்தியில் விரும்பப்படுகின்ற ஒருவராக விளங்கினார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று 28ம் திகதி வியாழக்கிழமை மார்க்கம் நகரில் இடம்பெற்றன. விபரங்கள் அறிய மகன் சிவாகரன் (கனடா): 416 5660379 அல்லது பேரன் பாகேசன்: 647 802 4483 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்